# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

சுடர் 32 கதிர் 305 புரட்டாதி 11ஆம் நாள் புதன்கிழமை 27 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20

பக்கங்கள்: 32


## தியாகி திலீபனுக்கு பேரெழுச்சியுடன் நினைவேந்தல்

### நல்லூரில் திரண்டனர் மக்கள்



மேலும் படங்கள் பக்.02

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27

தமிழர் தாயக மண்ணில் தியாக தீபம் திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுப் பெரும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. சிவப்பு மஞ்சள் கொடிகளால் மிளிர்ந்த தாயக மண்ணில், தமிழீழ விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல்களும் ஒலிக்க, பத்தாண்டுகளுக்கு முன்னர் திலீபனின் நினைவுநாள் நடைபெற்றதைப்போன்று மக்கள் திரளின் அஞ்சலியுடன் நேற்றைய நினைவு நாளும் நடைபெற்றது.

பாரத தேசத்தின் முகத்தை தோலுரித்து, இந்தியப் படைகளின் அராஜகத்தை அம்பலப்படுத்தி, தாயக தேசத்தில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை உலக அரங்குக்குக் கொண்டு வந்தவர் தியாக தீபம் திலீபன். அகிம்சையைப் போதிப்பதாகக் கூறும் இந்திய நாட்டுக்கு, அகிம்சை வழியில், பன்னிரண்டு நாள்கள் உணவின்றி ஒரு சொட்டு நீரும் அருந்தாது தன்னை தாயக தேசத்தின் மீட்சிக்காக விடிவுக்காக, வருத்தி உருக்கி அணுவணுவாகச் சாவை நெருங்கித் தழுவிய தியாக >> 29

### பால் தேநீர் இனிக் கசக்கும்

கொழும்பு, செப். 27

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரித்தமை காரணமாக உணவக உரிமையாளர்கள் தீயில் விழுந்து விட்டதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. >> 29



### திலீபன் நினைவேந்தி யாழில் தூக்குக் காவடி

யாழ்ப்பாணம், செப். 27

தியாக தீபம் திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் தாயக மண்ணில் பேரெழுச்சியுடன் நேற்று நடைபெற்றது. திலீபனின் தியாகத்தை நினைந்துருகி முன்னாள் போராளி ஒருவர் நேற்றுத் தூக்குக் காவடி எடுத்தார். பத்தாண்டுகளின் பின்னர் தியாக தீபத்துக்கு தாயக மண்ணில் தூக்குக் காவடி எடுத்த சம்பவம் காண்போரை நெகிழச் செய்தது.

கைதடி குட்டிப் பிள்ளையார் கோயிலில் வழிபாடுகளின் பின்னர், முன்னாள் போராளியான கந்தையா >> 29

### 20ஆவது திருத்தத்தை கூட்டு அரசு கைவிடாது

நாடாளுமன்றில் அதுவே அறிவித்தது >> 04

### வித்தியா கொலை வழக்கின் தண்டனைத் தீர்ப்பு இன்று

சிறப்புத் தீர்ப்பாயம் வழங்குகிறது

யாழ்ப்பாணம், செப். 27

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் தண்டனைத் தீர்ப்பை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய தீர்ப்பாயம் இன்று வழங்குகிறது.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் >> 29

தீர்ப்பு விவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள newuthayan.com உடன் இணைந்திருங்கள்



தியாகத் தீ மீண்டும் மூண்டிருக்கிறது

### இறுதி அறிக்கை வரும்வரை பொறுமை காத்தல் அவசியம்

சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 27

"தற்போது வெளிவந்திருப்பது இடைக்கால அறிக்கை. இதுவரை பொறுமைகாத்த நாங்கள் இன்னும் கொஞ்சக் காலம் பொறுமை காத்தால் இறுதி அறிக்கை வரும். அதற்கு முன்னரே இடைக்கால அறிக்கையை நாம் தூக்கி எறிவது புத்திசாலித்தனமாகத் தெரியவில்லை. புதிய அரசமைப்பு முயற்சியை நாமே குழப்பிக் கொண்டதாக இருக்கக் கூடாது"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் >> 29

### வடக்கு – கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் மக்கள் துணைபோகார்

முஸ்லிம் காங்கிரஸ் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 27

"வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் மக்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ துணைபோக மாட்டார்கள். கிழக்கு முஸ்லிம்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு அதிருப்தி அளிக்கின்றது. நாம் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை இழந்து விட்டோம். முஸ்லிம் இளைஞர்கள் விரக் >> 29

வடக்கின் நிலைப்பாடு; விக்கியின் செயற்பாடு

### அதிகாரப் பகிர்வுக்கு இவைதான் சு.கவுக்கு அச்சமளிக்கின்றனவாம்

கொழும்பு, செப். 27

"வடக்கு மக்களின் நிலைப்பாடும், முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பிரிவினைச் செயற்பாடுகளுமே அதிகாரப் பகிர்வு தொடர்பில் எம்மை அச்சத்துடன் சிந்திக்க வைக்கின்றன. அரச தலைவர் முறைமையை நீக்கினால் நாடு பிளவடையும். >> 29

### வட்டுவாகலில் 617 ஏக்கரில் நிரந்தரக் கடற்படை முகாம்

விரிவு பக். 06

### சிங்களவர் ஆயுதம் ஏந்தும் சூழல் உருவாகிவிட்டது

பொதுபல சேனா சூளுரை >> 29

### வீதி விபத்தில் சிக்குண்டு முதியவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், செப். 27

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி வீதியில் நின்ற முதியவரின் உயிரைப் பறித்தெடுத்தது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்று முற்பகல் விபத்து >> 29

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு ஒக். 5 வெளியாகும்

ஏ.எல் முடிவுகள் டிசெம்பர் 27இல்

கொழும்பு, செப். 27

2017ஆம் கல்வியாண்டுக்காக கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 5ஆம் திகதி வெளியிடப்படும். அத்துடன், ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு >> 29

### தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, அறிவியல்நகரில் சம்பவம்



>> 29




# தியாகத்தின் எல்லையை மீறிய திலீபனின் நினைவேந்தல் நேற்று

## உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்தனர் மக்கள்

யாழ்ப்பாணம்,செப்.27
தியாக தீபம் திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின் இறுதிநாள் நினைவேந்தல் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நேற்று உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்திய இராணுவத்துக்கு எதிராக அகிம்சை வழியில் 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த லெப். கேணல் தியாக தீபம் திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி மு.ப.10.48 மணிக்கு வீரச்சாவடைந்தார் அவரது தியாகம் நேற்று தமிழ்மக்களின் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தப்பட்டது. நல்லூர் ஆலயப் பின் வீதியில் அமைக்கப்பட்டுள்ள அவரது நினைவிடத்தில் சிறப்பு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.மஞ்சள், சிவப்பு வர்ணக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, ஒளிச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதில் அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். யாழ்.பல்கலைக்கழகத்திலும் கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் அரசியல் பிரமுகர்களும், கிளிநொச்சி கந்த சுவாமி கோவில் முன்றிலில் தொடர் போராட்டம் நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் அஞ்சலி செலுத்தினர். முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது போராட்ட இடத்தில் வைத்து அஞ்சலி செலுத்தினர். வவுனியாவிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. மன்னார் உட்பட கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ஐ-8,32,35,37,40)




















தியாக தீபம் திலீபனின் 30ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் குருதித் தான நிகழ்வு நேற்று நடைபெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பலர் குருதித்தானம் செய்தனர். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து பிரிட்டன் பல்கலை.மாணவி ஆய்வு

முல்லைத்தீவு, செப்.27
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆய்வொன்றை பிரிட்டன் பல்கலைக்கழக மாணவி ஒருவர் மேற்கொண்டார்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்தக் கோரி, அவர்களது உறவினர்கள் வடக்கு மாகாணம் உட்படக் கிழக்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆய்வு ஒன்றை அவர் மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் விவரங்களைச் சேகரித்தார். எவ்வாறு, எச்சந்தர்ப்பத்தில் காணாமல் ஆக்கப்பட்



டார்கள் அவர்கள் என்ன உறவுமுறை, போன்ற விடயங்களையும் கேட்டறிந்தார்.
"போரின் போதும், அதற்குப் பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்களுடைய பிள்ளைகள் எங்கே என்ற கேள்வியுடன் எட்டு வருடங்களுக்கும் மேலாகக் காத்திருக்கும் எமக்கு, இதுவரையில் பதில் கிடைக்கவில்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டு வரும் உறவினர்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர்.
"பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு படித்துவரும் தான், தனது நாட்டுக்குச் சென்று இந்த ஆய்வு தொடர்பில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீளக் கிடைக்க வேண்டும் என்றும் பிரிட்டன் பல்கலைகழகத்தில் இறைவழிபாடு ஒன்றை மேற்கொள்ள உள்ளதாகவும்" மாணவி தெரிவித்தார். (ஐ-ரி3)

[தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். முல்லைத்தீவில் 200 நாள்களைக் கடந்தும் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
அவர்களைப் பிரிட்டன் பல்கலைக்கழக மாணவி ஒருவர் நேற்றுச் சந்தித்தார்.]

## கிளிநொச்சி ப.தெ.வ.அ.கூ.சங்க புதிய தலைவர் கடமையேற்பு



கிளிநொச்சி,செப்.27
கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட கனகையா மதனரூபன் தனது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.
"புதிய நிர்வாக சபைத் தெரிவின் போது பல தரப்புகளினாலும், அரசியல் பின்புலத்தாலும் நான் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தேன். அவற்றையெல்லாம் முறியடித்து என்னை மீண்டும் அங்கத்தவர்கள் தங்களது சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்தமை எனது அர்ப்பணிப்பான கடுமையான உழைப்பால் ஆகும். எனவே, என்னை நம்பி எனக்கு அதிகூடிய வாக்குகளை அளித்து, மீண்டும் என்னைத் தலைவராகத் தெரிவு செய்த அனைத்து அங்கத்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்தும் சங்கத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வேன்" என்று புதிய தலைவர் தெரிவித்தார். (ஐ-35)

## தசநாயக்கவின் பிணை மனு நவம்பர் 10 இல் பரிசீலனைக்கு

கொழும்பு,செப்.27
முன்னாள் கடற்படைப் பேச்சாளர் டீ.கே.பீ.தசநாயக்கவின்பிணைகோரிய விண்ணப்பம் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தெரிவித்தது.
குற்றஞ்சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த பிணை கோரிய மனு, மேல்நீதிமன்ற நீதிபதி மனிலால் வைத்தியதிலக்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கப்பட்டால், சம்பவம் குறித்த சாட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படலாம் என்று மன்றில் தெரிவித்தார்.
அதனையடுத்து மனுத் தொடர்பாக எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி மீள்பரிசீலனை செய்யப்படும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.
2008, 2009 ஆண்டுகாலப்பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில், இவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மைத்திரி, ரணிலின் ஒளிப்படங்கள் திருட்டு
### கண்டுபிடிக்கக் கோரிக்கை

திருமலை,செப்.27
திருகோணமலை மஹதிவுல்வெவ பேருந்துத் தரிப்பிடத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஒளிப்படங்களைக் கண்டுபிடித்துத் தருமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் சேருவில தொகுதி அமைப்பாளர் சுனில் சாந்த ரணவீர பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தார்.
மொறவெவ பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் "பேருந்துத் தரிப்பிடத்தில் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவை காணாமற் போயுள்ளன. கடந்த மூன்று மாதத்துக்கு முன்னர் மொறவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதுவரைக்கும் யாரும் கைது செய்யப்படவில்லை. கீழ் தரமான செயற்பாட்டை மேற்கொண்டவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்" என்று சுனில் கோரிக்கை விடுத்தார். (ஐ-45)

## மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதின
### ஒருவர் சாவு :ஐவர் படுகாயம்

பதுளை,செப்.27
சிறப்பு அதிரடிப்படையினர் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள், வேறு மூன்று மோட்டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஐவர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து பிபிலை பிட்டகும்பரப் பகுதியில் நேற்று நண்பகல் நடந்தது. அம்பாறையிலிருந்து பிபிலை நோக்கிச் சென்ற சிறப்பு அதிரடிப்படையினர் பயணித்த மோட்டார் சைக்கிள், எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த மூன்று மோட்டார் சைக்கிள்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியது எனத் தெரிவிக்கப்பட்டது. பிட்டகும்பறையைச் சேர்ந்த கே.டி.டி. ஜீவன் (வயது 22) என்பவரே உயிரிழந்தார். சிறப்பு அதிரடிப்படையினர் இருவர் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர். அவர்கள் பிபிலை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ)



மருதங்கேணி பிரதேச சமுர்த்திப் பிரிவு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பனம்பொருள்கள் உற்பத்தியாளர்களுக்கான செயலமர்வு, கைதடி பனை ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடைபெற்றது. அதில் பயனாளிகள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (9)





## பண்டாரநாயக்கவின் நினைவுதினம் கடைப்பிடிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் தலைமை அமைச்சருமான எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கவின் 58 ஆவது நினைவு தினம், ஹொரகொல்லவில் அமைக்கப்பட்டுள்ள அவரது நினைவிடத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க, சுனேத்திரா பண்டாரநாயக்க, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் முதலில் அஞ்சலி செலுத்தினர். (ஐ-ரி4)



தனங்களப்பு வயல் வெளியில் 3 கைக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன. வயல் வேலையில் ஈடுபட்டிருந்தவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே அவை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-37)

## பர்தா அணிந்த இளைஞன் கைது

கொழும்பு,செப்.27

இஸ்லாமியப் பெண்கள் அணியும் பர்தா உடையை அணிந்து, பதுளைப் பேருந்து நிலையத்தில் நடமாடிய இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

தெமோதரையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞன் மீது சந்தேகம் கொண்ட பயணிகள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு விரைந்த பொலிஸார் இளைஞனிடம் சோதனை மேற்கொண்ட பின்னர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர்.

பெண் போல் உடையணிந்து மோசடியில் ஈடுபடும் நோக்குடன் அவர் பேருந்து நிலையத்தில் நடமாடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ரி4)

# ரோஹிங்யர்கள் தங்கியிருந்த வீடு பிக்குகளால் முற்றுகை

### கல்கிசையில் நேற்றுப் பதற்றம்

கொழும்பு,செப்.27

இலங்கையில் ரோஹிங்யா முஸ்லிம்கள் சிலர் தங்க வைக்கப்பட்டிருந்த வீடு பௌத்த பிக்குகளால் நேற்று முற்றுகையிடப்பட்டது. கொழும்பு கல்கிசைப் பகுதியில் உள்ள வீடொன்றில் ரோஹிங்யா முஸ்லிம்கள் 30 பேர் தங்கவைக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவரத்தை அறிந்த சிங்கலே ஜாதிக பலமுளுவ அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் சிலர் அந்தப்பகுதியைச்சுற்றிவளைத்தனர்.

"ரோஹிங்யர்கள் அகதிகள் அல்ல. அவர்கள் பயங்கரவாதிகள்" என்று அவர்கள் அந்த இடத்தில் நின்று கோசமிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார், அங்கு தங்கியிருந்தவர்களைப் பொலிஸ் நிலையத் துக்கு அழைத்துச் சென்றனர்.



2017 ஏப்ரல் மாதம் காங்கேசன்துறை துறைமுகமூடாக இலங்கை வந்தடைந்த ரோஹிங்கிய முஸ்லிம்கள் 30 பேரை, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையகம் பொறுப்பேற்று, மிரிஹானா தடுப்பு முகாமில் பொலிஸ் பொறுப்பில் வைத்திருந்தது. அவர்களே கல்கிசைப் பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. தற்போது அவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். (ஐ-ரி4,33)

## அரசமைப்பு உருவாக்கத்தை எதிர்த்து வீதிக்கு இறங்குகிறது விமலின் கட்சி

கொழும்பு, செப். 27

புதிய அரசமைப்பால் நாட்டுக்கு ஆபத்து என்றும், அது நாட்டைக் கூறுபோடும் என்றும் சுட்டிக்காட்டி அரசமைப்பு தயாரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் பரப்புரையை முன்னெடுப்பதற்கு விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

முதற்கட்ட நடவடிக்கையாக இன்று முதல் துண்டறிக்கைகள் விநியோகிக்கும் பரப்புரையை அந்தக் கட்சி உறுப்பினர்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

"நாட்டைக் கூறுபோடும் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதில் அரசு உறுதியாக இருக்கின்றது. குறுக்கு வழியில் அதை செய்வதே அரசின் உத்தேசமாக இருக்கின்றது. இந்த விடயம் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. தேசிய சுதந்திர முன்னணி இது தொடர்பிலான துண்டறிக்கைகளை விநியோகிக்கும் நிகழ்வை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. இன்று பிற்பகல் 3.30 மணியளவில் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் உறுப்பினர்களான வீரகுமார திஸாநாயக்க, ஜயந்த சமரவீர உள்ளிட்டோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது" என்று தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (வ-5)

## புத்தளத்தில் கோர விபத்து; ஒருவர் சாவு: அறுவர் காயம்

கொழும்பு,செப்.27

யாழ்ப்பாணத்திலிருந்து மீன்களை ஏற்றிச் சென்ற ஹன்ரர் வாகனமும், வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. அதில் தனியார் பேருந்தின் நடத்துநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அறுவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து உடப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் பத்துளு ஓயா உடப்பு சந்தியில் நேற்று அதிகாலை நடந்தது.

விபத்தில் புத்தளம் குருநாகல் வீதியைச் சேர்ந்த எரங்க நிசாந்த பெர்னாண்டோ (வயது32) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிலாபம் மற்றும் முந்தல் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ரி-4)

## குடும்பத் தலைவர் உயிர் துறப்பு

தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

"எந்தக் காரணம் கொண்டும் கடன் வேண்டாதே. இருப்பதைக் கொண்டு வாழக் கற்றுக்கொள்" என்ற வாசகம் அடங்கிய கடிதத்தை எழுதிவைத்துவிட்டு அவர் தவறான முடிவெடுத்து உயிர் துறந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதடி சாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. 32 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் வங்கி ஒன்றில் பணிபுரிந்தார். தனது உறவினர் ஒருவரின் வியாபார நிலைகருதி கடன் பெறுவதற்கு துணை நின்றார். முழுமையாக வியாபார நிலையத்தில் பணிபுரிந்தார். எனினும் கடனைச் செலுத்த முடியவில்லை என்று விசாரணையில் கூறப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மு.உதயசிறி கள விசாரணையை மேற்கொண்டார். சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

# இடைக்கால அறிக்கையை ஆராய வல்லுநர்கள் குழு

### யாழ். பல்கலை. ஆசிரியர் சங்கம் தீர்மானம்

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு வல்லுநர்கள் குழுவை நியமிக்கவுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இடைக்கால அறிக்கை தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய பணி குறித்து அந்தச் சங்கம் நேற்று கூடியது. அதிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

"இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்க இருவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. குழுவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பீடங்களின் பிரதிநிதிகள், அரசியல் வல்லுநர்கள் போன்றோர் உள்ளடக்கப்படுவர்.

இடைக்கால அறிக்கை தொடர்பில் திறந்த ஆராய்வை குழு முன்னெடுக்கும். அதன் விளக்க அறிக்கை மக்களுக்கு வழங்கப்படும்" என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (வ-4,8)

## கல்வி நிர்வாக சேவையில் 306 பேருக்கு நியமனம்

கொழும்பு,செப்.27

இலங்கைகல்விநிர்வாகசேவை தரம்3, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதி பெற்ற 306 பேருக்கு நேற்று நியமனம் வழங்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் வைத்து அவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டிஆராச்சி ஆகியோர் கலந்து கொண்டு நியமனங்களை வழங்கினர் என்று கல்வி அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ஐ)



## 20 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் எதிர்காலத்தில் உரிய தீர்மானம் எடுக்கப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன, "நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இருந்து 20ஆவது திருத்தச்சட்டவரைவு இன்னமும் அகற்றப்படவில்லை. இது ஏன்?" என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே சபை முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"20ஆவது திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இருந்து அகற்றுவதா? இல்லையா? என்று அரசே தீர்மானிக்கும். எதிர்க் கட்சிகள் அரசின் நிகழ்ச்சி நிரலை எவ்வாறு தீர்மானிக்க முடியும்?

ஒழுங்குப்பத்திரத்தில் உள்ள 20ஆவது திருத்தத்தால் உங்களுக்கு (எதிரணிக்கு) எங்கு வலிக்கின்றது? எதிர்காலத்தில் குறித்த சட்டவரைவு தொடர்பில் நாங்கள் நடவடிக்கையெடுப்போம்" என்றும் சபை முதல்வர் தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பொது வாக்கெடுப்பும் நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியது. இதனையடுத்து கடந்த 20ஆம் திகதி இந்தச் சட்டவரைவு மீது நடத்தப்பட இருந்த இரண்டாம் வாசிப்புக் கைவிடப்பட்டிருந்தது. (வ-5)

## சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நியமனம்

கொழும்பு, செப். 27

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சுங்கத்திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடக அமைச்சு வெளியிட்ட செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வவுனியா மாவட்ட செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார். யாழ். பல்கலைக்கழக பட்டதாரியான இவர் ரஜரட்டை மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டவராவார்.

இதேவேளை, சுங்கத் திணைக்கள பணிப்பாளர் அதிபதியாகக் கடமையாற்றிய டபிள்யூ.ஏ. சூலானந்த பெரேரா, அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாள்ராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## விகாரைத் திறப்புவிழாவுக்கு

# மைத்திரி வந்தால் கறுப்புக்கொடியேந்தி போராடுவோம்

### மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவிப்பு

மன்னார், செப்.27

மன்னார் மாந்தை திருக்கேதீஸ்வரம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியை அபகரித்து விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பௌத்த விகாரை எதிர்வரும் 29ஆம்திகதி வெள்ளிக்கிழமை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பல்வேறு தரப்பினராலும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வருகின்றது. விகாரைத் திறப்புவிழாவுக்கு அரசதலைவர் வந்தால் கறுப்புக் கொடியேந்தி முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன வுக்கு நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

1991ஆம் ஆண்டுதிருக்கேதீஸ்வரம்பகுதியை இராணுவம் அபகரித்தபோது தமது வழிபாட்டுக்கு என அமைக்கப்பட்டது தான் இந்த பௌத்தவிகாரை.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவம் அங்கிருந்து பிரதான படைமுகாமை அகற்றியது. இந்த பௌத்த விகாரையையும், பௌத்த மதகுருவையும் பாதுகாப்பதற்கு சிறிய இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் ஒத்துழைப்புடனே பௌத்தவிகாரை அமைப்பு நடைபெறுகின்றது.

வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கேதீஸ்வரச் சூழலில் இச் செயற்பாடு ஏற்புடையதா? 18.01.2012இல் பௌத்தமத அலுவல்கள் திணைக்களம் இந்த விகாரையின் பதிவை இரத்துச்செய்ததுடன் கட்டுமானப் பணிகளையும் நிறுத்தியது.

ஆனால் உங்கள் நல்லாட்சியில் தான் மீண்டும் பணிகள் தொடங்கப்பட்டன. இது சட்டவிரோத சனநாயக மீறல் அல்லவா? இதுவா நல்லாட்சி? தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் கலாசார மாற்றத்தை ஏற்படுத்தி, போலியான புனைவுப் பெயர்களின் மூலம் பௌத்த மயமாக்கல் வேலைத்திட்டத்தை முன்னகர்த்துகிறீர்களா?

எப்படி, கதிர்காமத்தை சிங்கள முருகன் ஆக்கினீர்களோ அதே போல் காலப்போக்கில் திருக்தீகேஸ்வரத்தை சிங்களச் சிவனாக்கும் பணியைத் தொடங்கியிருக்கிறீர்களா?

இதுதானா பௌத்த தர்மம்? புத்தபெருமானின் தர்ம சிந்தனைக்கு எதிராக செயற்படுவது தான் இன்றைய பௌத்த சிந்தனையா? பாவம் புத்தர் உயிரோடு இருந்திருந்தால் உங்கள் எல்லோரையும் அழித்து விடுவார். புத்தபெருமானின் தர்ம சிந்தனைகள் உலகநீதிக்கு வழிகாட்டியது.

ஆனால் இன்றைய பௌத்தம் இனச் சுத்திகரிப்பு செய்கிறது.

சட்டவிரோதமாக தனியாருக்குச் சொந்தமான காணியில் விகாரையைத் திறப்பதற்கு நீங்கள் வருவது தார்மீக அடிப்படையில் நியாயம் தானா?

தமிழ்மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அர்சதலைவரான நீங்கள் உங்களைத் தெரிவு செய்த மக்களின் விருப்புக்கு மாறாக செயற்படுவது சரியா?

ஏன் உங்கள் மனச் சாட்சியிடம் கேளுங்கள். தமிழ் மக்களின் அறம் சார்ந்த போராட்டத்தை தான் அடியோடு அழித்து விட்டீர்கள்.

இனம் சார்ந்த உணர்வையும் நசுக்கி விடப்போகிறீர்களா?. நீங்கள் தமிழ்த் தலைமைகளை ஏமாற்றலாம், ஆனால் தமிழ் மக்களை ஏமாற்றமுடியாது.

அவர்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள். நீங்கள் உண்மையில் அறம் பேசுபவராக இருந்தால் சட்டவிரோத விகாரைத் திறப்புவிழாவுக்கு வருவது ஏற்புடையதல்ல .

உடனடியாக பணிகளை நிறுத்த வேண்டும். எக்காலத்திலும் பௌத்தர்கள் வசிக்காத இடத்தில் எதற்கு விகாரை? திருக்கேதீஸ்வரப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியின்றி ஒருசிறு குழியைக்கூட அகழமுடியாது - அவ்வாறிருக்க விகாரை கட்டுவதற்கு யார் அனுமதி வழங்கியது.

இதுதானா பௌத்த சனநாயகம். தமிழர் பிரதேசத்தில் இராணுவ உதவியுடன் தான்தோன்றித்தனமாக மேலாதிக்கத்தை செயற்படுத்திக்கொண்டு உலகத்தை ஏமாற்ற உதட்டளவு நல்லிணக்கம் பேசுகிறீர்களே! எப்படி நல்லிணக்கம் ஏற்படும்.

எமது நியாயபூர்வமான வேண்டுகையை புறக்கணித்து குறித்த திறப்புவிழா நடைபெற்றால் கறுப்பு கொடியேந்தி முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் இக்கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். (ய-56)

# நாம் அனைவரும் பன்னாடுகளிடம் நியாயம் கேட்கும் நிலை உருவாகும்

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, செப்.27

நாம்அனைவரும்பன்னாட்டிடம்நியாயத்தை கேட்கின்ற நிலை நிச்சயமாக உருவாகும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அக்கினிச்சிறகுகள் அமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் சமூகத்திற்குள் உள்ள ஒற்றுமை போன்று எங்கள் சமூகத்திற்குள் வரவில்லை என்பது வெட்கப்படும் விடயமாக காணப்படுகின்றது. இன்று எமது முன்னாள் போராளிகளை கணக்கெடுக்காத நிலைமை காணப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில்அரசமைப்புதிருத்தம்தொடர்பாகமூன்று நாட்களுக்கு விவாதம் நடைபெறவுள்ளது.

இவ்விவாதத்திலே எங்களது தரப்பில் என்ன நியாயத்தை பெறவேண்டும் என்பது தான் பிரதானமாகும்.

ஆலோசனையின் அடிப்படையிலே தீர்மானத்திற்கு வரமுடியாது.

ஆலோசனை கொடுப்பவர்கள் இனம், கொள்கை சார்ந்து செயற்பட ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம்.

இந்த விடயங்கள் எங்களுடைய கொள்கைக்கு மாற்றாக இருக்குமாயின் இந்த மூன்றுநாள் விவாதத்திலே எங்களது கொள்கையை நிலைநாட்ட முயற்சிக்க வேண்டும். நாங்கள் கவனமாக எங்களுக்கான சந்தர்ப்பத்தை உருவாக்கவேண்டும். யாரும்கொள்கையைவிட்டுச்செல்லவில்லை. வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஸ்டி போன்ற முக்கிய விடயங்கள் அதில் இல்லையெனின் நாம் அனைவரும் பன்னாட்டிடம் நியாயத்தை கேட்கின்ற நிலை நிச்சயமாக உருவாகும் என்றார். (ய-402)

## முப்பது வருடகாலப் போரினால் 3 தலைமுறைகளை இழந்தோம்

### வடக்குகல்வியமைச்சர் ஆதங்கம்



யாழ்ப்பாணம், செப்.27

முப்பதுவருட காலப் போரில் மூன்று தலைமுறைப் பிள்ளைகளை இழந்தோம். மாகாண ரீதியில் பொருளாதாரம் மற்றும்கல்வியிலும்பின்நிற்கிறோம் என்று வடக்கு மாகாணகல்வி அமைச்சர் தெரிவித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அக்கினிச் சிறகுகள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றிமேலும்தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணம் அனைத்து விளையாட்டுத் துறைகளிலும் சிறப்பாக செயற்படவேண்டும். அதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாகாண கால்பந்தாட்ட அணி தற்போது சிறப்பாக உள்ளது. தேசிய மட்டப் போட்டிகளில் 3ஆம் இடத்தை பெற்றுள்ளது. கடந்த ஆண்டு 12 பதக்கங்களையும், நடப்புஆண்டில் இதுவரை 19 பதக்கங்களையும்பெற்றுள்ளது. அத்துடன்தாச்சிமறித்தல்எமது பாரம்பரிய விளையாட்டு. அது பாடசாலைகளிலும், ஏனைய விளையாட்டு நிகழ்வுகளிலும் இடம்பெற நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. வடக்கிலே 140க்கும்அதிகமானதாச்சி விளையாட்டுக் குழுக்கள் உள்ளன. அவற்றையும் வளர்த்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்போது அதிகரித்துள்ள சமூகவிரோத செயல்களுக்கு அக்கினிச் சிறகுகள்நல்லதொருவழியைக் காட்டும் என நம்புகின்றேன். 30 வருடங்களாக தனிநாடு, தனித்துவம், எமது சமூகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி போராடியவர்கள் நாம். இதனை இந்த நூல் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. ஆயுதப் போராட்டத்தில் தோல்வி அடைந்தாலும்கூடஎமதுபுகழ்இன்னமும் சில விடயங்களில் மங்கவில்லை. 70ஆம், 80ஆம்ஆண்டு காலப்பகுதியில் கல்வியில் மேல்மாகாணத்துக்கு அடுத்ததாக நாம் இருந்தோம். அத்துடன்பொருளாதாரம்என்று பார்க்கும்போதுஎமதுவிவசாயம், மீன்பிடி மற்றும் அரசதொழிலில்நாம்முதன்மையாக இருந்தோம்.

ஆனால் இன்று மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளோம். விவசாயம் இல்லாமல் போகின்றது. விவசாயம் செய்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் அல்லதுதொடர்ந்துவிவசாயம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதிகமானகாய்கறிகளைதந்தநிலங்கள்இன்று கட்டடங்களைச் சுமந்து நிற்கின்றன. மீன்பிடியானதுஇந்தியமீனவர்களின் செயற்பாட்டினாலும், தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பினாலும் பிரச்சினைகளுக்கு மத்தியில் உள்ளது.

ஆசிரியர் சேவை தவிர்ந்த ஏனைய அரசவேலைகளில் 30 சதவீதமானவர்கள் தமிழர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் அநேகர் வேறு மாவட்டங்களில் பணி புரிகின்றார்கள்.

இதனால் வடக்கில் சிறிய வேலைக்குக்கூட தமிழர்கள்இல்லாதநிலைகாணப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் அதிகளவான வெற்றிடங்கள் இருக்கின்றன. ஆனால்தகுதிவாய்ந்தவர்கள் இல்லை. இதனால் முக்கியமான இடங்களில் பெரும்பான்மையினர் பணியில் உள்ளனர்.

எமது மாகாணத்தில் 5 அமைச்சுகளின்ஊடாக37 விடயங்களின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கல்வியிலே நாம் வெற்றிபெற வேண்டும். அதற்காக நாம் விசேட திட்டம் ஒன்றை பாடசாலைகளில்நடத்திவருகின்றோம். பாடசாலையில் உயர்தரத்திற்கு எத்தனை மாணவர்கள் தகுதி பெறுவார்கள், தகுதிபெறாதவர்கள் எந்த மட்டத்தில் உள்ளார்கள் போன்ற 12 விடயங்களை ஆராய்ந்துவருகின்றோம். நாட்டிலே ஏற்பட்ட போர் காரணமாகமக்கள்பெரும் பொருளாதாரஇழப்புகளை சந்தித்தனர். இடம்பெயர்ந்திருக்கிறார்கள், பலர்கொல்லப்பட்டார்கள்.

போரின்போதுஎமதுஇனத்தினை விருத்தி செய்யும் 18 தொடக்கம் 45 வயதுப் பிரிவினரை இழந்திருக்கின்றோம். இதனால்எமது 3 தலைமுறையை இழந்துள்ளோம். கல்வியில் 35 மாணவர்களுக்குஒருஆசிரியர் என்று இருந்த காலத்தில் எமது கல்வி 2ஆம் இடத்தில்இருந்தது. ஆனால் இப்போது 14 மாணவர்களுக்குஒரு ஆசிரியர் என்ற நிலை உண்டு. ஆனால் நாம் பின்தள்ளப்பட்டுள்ளோம். இதற்குஎன்ன காரணம். ஆகவே எல்லாவற்றிலும் நாம் முன்னுக்கு வருவதற்கு அனைத்து முயற்சிகளும்எடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (ய-ரி)

# பெயரளவில்தான் சனநாயக நாடு நடப்பது சகலதும் சர்வாதிகாரம்

## வட மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் சீற்றம்

முல்லைத்தீவு. செப்.27

காணி சுவீகரிப்பு என்ற பெயரில் வளமான தொழில்களையும் சுரண்டுகின்றார்கள். ஜனநாயக நாடு ஆனால் நடவடிக்கைகளோ சர்வாதிகாரம். மோசமான இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்

கோட்டாபய கடற்படை முகாமுக்கு மக்களுடைய காணிகள் அவர்களுடைய சம்மதம் இல்லாது சுவீ கரிக்கப்பட்டமை தொடர்பில் அவரால் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

மக்களின் விருப்பங்களைப் புறக்கணித்துக் கடற்படை முகாமுக்காக காணிகளின் சுவீகரிப்பு தொடங்கி விட்டது. காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 5ஆம் பிரிவின் கீழ் 2017.08.04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசின் அதிகாரத்துடன் வர்த்தமானியில் இவ்விடயம் பிரசுரிக்கப்பட்டது. காணிக் கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் என்ற தலைப்பில் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. முள்ளி வாய்க்கால் கிழக்குப்பகுதியில் மக்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகளில் கோட்டாபய கடற்படை, முகாமை அமைத்துள்ளார்கள்.

மக்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் இவர்களின் பூர்வீக நிலங்களாகும். இதில் தனியார் காணிகளாக சுமார் 379 ஏக்கர் உள்ளது. மிகுதி நீண்ட காலத்துக்கு முன் மக்களுக்கு வழங்கப்பட்ட அரச காணிகளாகும். மொத்தமாக 617 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இவை தாம், தமது மூதாதையருடன் வாழ்ந்த பூமி எனவும், தமக்கு இக்காணிகளே வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் வாதாடுகின்றார்கள்.

இந்தக் காணிகளின் மீட்புக்காக மக்கள் போராடிக் களைத்து விட்டார்கள். இதேசமயம் நந்திக்கடல் வடக்கு ஆற்றுடன் அண்மித்து இந்தக் காணிகள் இருக்கின்றன. கடற்படையினர் இதில் இருப்பதால் மீனவர்களின் ஆற்றுத் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்களோ வறுமையில் வாட காணி சுவீகரிப்பு என்ற பெயரில் வளமான தொழில்களையும் சுரண்டுகின்றார்கள். மோசமான இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றுள்ளது. (ய-21)

# வடக்கு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் வருட இறுதிக்குள் திறக்கப்படும்

## மாகாண சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.27

வடக்கு மாகாண மருத்துவமனைகளில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் நடப்பு வருடத்தின் இறுதிக்குள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் ஜி. எப்.எ.ரி.எம் செயற்திட்டத்தின் கீழ் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

எயிட்ஸ், நீரழிவு, மலேரியா போன்ற நோய்களை இல்லாதொழிப்பதற்கான செயற்திட்டமாக 2011ஆம் ஆண்டு ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாவரையில் ஒதுக்கப்பட்டது. மருத்துவமனைகளில் தேவையின் பொருட்டு பல்வேறு வகையான கட்டட வசதிகள், தளபாட வசதிகள் போன்ற பல்வேறு வகையான செயற்திட்டங்கள் கடந்த ஆறு வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. 29 வெளிநோயாளர்கள் பிரிவுகள், 12 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள், 15 சுகாதார வைத்திய அதிகாரி தங்குமிட விடுதிகள், 3 மார்பு நோய்ச் சிகிச்சை நிலையங்கள், மாவட்டப் பொதுக்களஞ்சியங்கள், 5 மலேரியா தடை இயக்க அலுவலகங்கள் உட்பட 68 புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இவைதவிர 634 சுகாதாரப்பணி உதவியாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன் மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டன. இவற்றில் 50க்கும் மேற்பட்ட கட்டடங்களின் வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

இவற்றினைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆளணி, தளபாடம் மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன் கட்டடங்கள் அனைத்தும் நடப்பு வருடத்தின் இறுதியில் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ய-ரி)

## காணி உரிமையாளர்களின் எதிர்ப்பையும் மீறி

# வட்டுவாகலில் கடற்படை முகாமுக்கு 617 ஏக்கர் காணிகள் சுவீகரிப்பு


## வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

முல்லைத்தீவு, செப்.27

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் பகுதியில் கடற்படையினரால் அபரிக்கப்பட்டுள்ள மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணிகள் நிரந்தரமாகவே சுவீகரிக்கப்படுவதான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர்களுடைய ஆட்சேபனையையும் மீறி இந்தக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளமையானது மக்களிடத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காணி சுவீகரிப்புச் சட்டப் (அத்தியாயம் 460) பிரிவின் கீழான அறிவித்ததில் 2030௬44ஆம் இலக்க 2017.8.4ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலிலேயே குறித்த காணிகள் சுவீ கரிக்கப்பட்டுள்ளன என அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவித்தல் அடங்கிய கடிதங்கள் கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலாளர் குணபாலனால் காணி உரிமையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.





கோப்புப் படம்

இறுதிப்போரின் பின்னர் முல்லைத்தீவு, வட்டுவாகல் பிரதேசத்தில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டன. அங்கு கடற்படையினர் பாரிய கடற்படைத் தளத்தை அமைத்து நிலைகொண்டனர். மக்களுடைய மீள்குடியமர்வின்போது கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட குறித்த காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்கள் நிர்க்கதியாகினர்.

இதுதொடர்பாக அரசியல் தலைவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசுக்குமிடையில் பல பேச்சுகள் இடம்பெற்றன. எனினும் காணிகள் விடுவிக்கப்பட வில்லை. கடற்படைமுகாமை அகற்றி தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தப்போராட்டங்கள் நீண்டகாலமாக இடம்பெற்றன.

ஆனால் அரசு பாராமுகமாகவே இருந்தது. சுவீகரிப்புக்காகக் காணிகளை அளவிடும் முயற்சியில் கடற்படையினர் இரண்டு தடவைகள் ஈடுபட்டனர். அந்த முயற்சிகள் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டன.

இதுதொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் உபசெயலாளர் தலைமையில் கடந்த வருடம் ஜனவரி 16ஆம்திகதி மற்றும் 24ஆம் திகதிகளில் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதன்போது தமது நிலம் மீளக் கையளிக்கப்படவேண்டும் என்று காணி உரிமையாளர்கள் உறுதியாகக் கோரினர். இவை அனைத்தையும் தாண்டி கடற்படையினர் அடாத்தாக மேற்படி பிரதேசத்தினை அபகரிக்கும் நோக்கில் அளவீடு செய்ய முயன்றனர்.

எனினும் காணி உரிமையாளர்கள், மக்கள், மீனவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் என அனைவரும் வீதி மறியலில் ஈடுபட்டனர். வட்டுவாகல் பாலம் மறிக்கப்பட்டது. போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. அங்கு பெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

சம்பவ இடத்திற்கு வந்த மாவட்டச் செயலக அதிகாரிகள் மக்களுக்குச் சாதகமாக வாக்குறுதிகளை வழங்கினர். காணிகளை விடுவிப்பதற்கு தாம் நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தனர். அந்த வாக்குறுதிகளை ஏற்று போராட்டம் கைவிடப்பட்டது.

இந்தவிடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அந்தப் பிரதேசத்தை எந்தக் காரணம் கொண்டும் கடற்படையினருக்கு வழங்கமுடியாது என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதற்குப் பின்னரே வட்டுவாகல் கடற்படைத் தளத்தின் சுற்றுக் காவலரண்கள் அனைத்தும் நிரந்தரமாக சீமெந்தினால் கட்டியமைக்கப்பட்டன.

இதனையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், காணிகள் சுவீகரிக்கப்படுவதாக அரசு அறிவித்தது.

இதுதொடர்பாக ஆட்சேபனை இருப்பின் தெரியப்படுத்துமாறும் கோரியது. தமது சொந்த நிலங்களைத் தங்களிடம் கையளித்துவிட்டு கடற்படையினர் அவர்களுக்குப் பொருத்தமான இடங்களுக்குச் செல்லவேண்டும் என மக்கள் தமது ஆட்சேபனைக் கடிதங்களில் தெரிவித்திருந்தனர்.

இவை எல்லாவற்றையும் மீறி தற்போது அரசு அந்தக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என அறிவித்தமை மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

அந்தக் காணிகளில் கடற்படையினர் நிரந்தரமாக் குடிகொள்வார்களே ஆனால் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் பலர் பாதிப்படையும் நிலை உருவாகும் என அவர்கள் தங்களுடைய ஆதங்கங்களை வெளியிட்டுள்ளனர். (ய-21)

# மன்னாரில் இனம்காணப்பட்டது எரிந்த நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம்

மன்னார், செப்.27

மன்னார்- யாழ்ப்பாணம் முதன்மைச் சாலை, தள்ளாடி இராணுவ முகாமுக்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை எரிந்தநிலையில் மீட்கப்பட்ட சடலம் நேற்று இனம் காணப்பட்டது.

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அந்தோனி தாஸ் குரூஸ் (வயது54) என சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

அந்தோனி தாஸ் குரூஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தாழ்வுபாட்டு கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து மன்னார் நகருக்கு வந்ததாகவும் பின்னர் அன்றைய தினம் இரவு வீடு திரும்பாத நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை முதல் உறவினர்கள் அவரைப் பல இடங்களில் தேடியதாகவும் சடலமாக மீட்கப்பட்ட அந்தோனி தாஸ் குரூசை அடையாளம் காட்டிய உறவினர் ஒருவர் தெரிவித்தார். (ய-21-56)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01 . 10 . 1956



விண்ணில்
08 . 10 . 2016

## அமரர் மாணிக்கம் சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர்)

திதி – 27.09.2017

" எத்தனையோ சரிவுகளுக்குப் பின்னும் தைரியமாக சிரித்துக் கொண்டிருக்கின்ற அப்பாவிற்கு நிகரான நம்பிக்கையூட்டும் புத்தகம் பிரபஞ்சத்தில் எங்குமே இல்லை...!"

82, மூர் வீதி,
மன்னார்.

குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர், கந்தர்மடம், தட்டாத்தெரு பிறவுண் வீதி ஆகிய இடங்களில் உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு :- 077 508 4646

## வாகனம் வாடகைக்கு உண்டு

TATA Super AC வாகனம் சாரதியுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு-077 925 4050

## விற்பனைக்கு

டொல்பின் ரக வான் (1) முச்சக்கரவண்டி (2) விற்பனைக்குண்டு.

தொடர்பு-077 844 6089

## ஓலைச்சுவடிகள் விநியோகம்

வழமைபோல் ஏட்டு ஓலைச் சுவடிகள் எம்மிடம் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

அண்ணா தொழிலகம்
துரை வீதி, இணுவில்.

## வேலையாள்கள் தேவை

01. AD சாரதி அனுமதிப்பத்திரத்தினை உடைய 30 - 40 வயதுடையவரான அனுபவம் வாய்ந்த சாரதி.
02. கணினி அறிவுடையை அனுபவம் வாய்ந்த அலுவலக உதவியாளர் தேவை. (பெண்) யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்பு - குமரன் ஸ்ரோர்ஸ்,
ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
077 229 9566

## வீடு வளவு விற்பனைக்கு

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் A9 வீதியில் இருந்து 100m தொலைவில் அமைந்துள்ள விசாலமான வீட்டுடன் கூடிய வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 946 3658 அல்லது
076 837 6329

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மிருசுவில் அ.த.க பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும்

**திரு. க. கருணாமூர்த்தி பத்மகாந்தன்**

(B.A, P.G.D.E பட்டப்பின் கல்வி டிப்ளோமா)

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் -111 இற்கு கல்வி நிர்வாக அதிகாரியாக தெரிவு செய்யப்பட்டமையை இட்டு பாடசாலை சமூகத்தின் சார்பாக பாராட்டி அவரது சேவை மேன்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

Congratulations

பாடசாலைச்சமூகம்,
யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை.

# கேள்வி அறிவித்தல்

## சபைநிதி வேலைத்திட்டங்கள்
## நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதிப்புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.
2. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில்நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி 'மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **27.09.2017** ஆம் திகதியிலிருந்து **10.10.2017** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப **9.00** மணி முதல் **14.00** மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து **27.09.2017** ஆம் திகதியிலிருந்து **10.10.2017** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணிக்கும் **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.750/- (வரி நீங்கலாக)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 10.10.2017 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
6. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, Tar நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி மன்ற அலுவலகத்தில் மலகூடம் அமைத்தல். (தவிசாளர், செயலாளர், அலுவலர்களுக்கானது) | 0.710 | 03 மாதம் | C9 | 7,100.00 |
| 2 | நகராட்சிமன்ற கொல்களம் புனரமைத்தல் | 0.183 | 03 மாதம் | C9 | 1,800.00 |
| 3 | வீரபத்திரர் வீதி 2ஆம் ஒழுங்கை புனரமைத்தல் கிராம்புவில் | 0.946 | 03 மாதம் | C9 | 9,500.00 |
| 4 | பொன்விழா மண்டபத்தில் ஜெனரேற்றர் அறை அமைத்தல் | 0.635 | 03 மாதம் | C9 | 6,400.00 |
| 5 | நுணாவில் பொதுநூலகம் திருத்தம் | 0.137 | 03 மாதம் | C9 | 1,400.00 |

7. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 06.10.2017 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலக கூட்ட மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
27.09.2017

# தணிகா நுண்கலைக்கல்லூரி


**விஜயதசமியை முன்னிட்டு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 30.09.2017**



பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம், ஓர்கன் (Organ) ஆகிய நுண்கலைகளுக்கான வகுப்புக்கள் தலைசிறந்த நுண்கலை ஆசான்களால் கற்பிக்கப்படுகின்றது ழற்றும் தரம் 1 - 5 வரையான அனைத்து வகுப்புக்களும் குழு வகுப்புக்களாக சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது. மற்றும் Makeup, Icing Class போன்ற வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**தணிகை மஹால்**
151 /1, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
077 762 4475

# மரண அறிவித்தல்



## ஜேமிஸ் சிறிபாலன்

மலர்வு 02.05.1954 · மறைவு 24.09.2017

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜேமிஸ் சிறிபாலன் 24.09.2017 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய பொலிஸ்நிலைய வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் இராஜேஸ்வரன்

*(மல்லாவி கல்யாணி தாம்பூல நிலைய உரிமையாளர்)*




அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை, கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### Dr.சுப்பிரமணியம் திருச்செல்வநாயகம்



பல்லப்பை (நயினாவத்தையைச்) சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் கமலாசனியின் (ஓய்வுபெற்ற செயலாளர் பருத்தித்துறை நகரசபை) அன்புக் கணவருமான Dr.சு.திருச்செல்வநாயகம் (பருத்தித்துறை, ஆதார வைத்தியசாலை, அம்பன் பிரதேச மருத்துவமனை - முன்னாள் தலைவர் புலோலி ப.நோ.கூ.ச.) நேற்று (26.09.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் திருமதி ராஜினி குருபரன் (கனடா), திருமதி பிரபா காண்டீபன் (வைத்திய நிபுணர் தேசிய வைத்திசாலை, கொழும்பு), திருமதி பவித்திரா கிருபானந்தகுமாரன் (கால்நடை வைத்தியர் மருதங்கேணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொ.குருபரன் (பொறியியலாளர் கனடா), ஈ.காண்டீபன் (பொறியியலாளர் கிளிநொச்சி), சி.கிருபானந்தகுமாரன் (கால்நடை வைத்தியர் மடு) ஆகியோரின் மாமனும் மாதங்கி, கஜவதனன் (கனடா), துவாரகன், திவாகினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் வள்ளிநாயகி (கொழும்பு), பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, நடராசா மற்றும் சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பத்மாசனி, முருகானந்தன் (U.K). நிர்மலா, வித்தியானந்தன் (கனடா), சரஸ்வதி (U.K.), சிவானந்தன் (திருகோணமலை), அருளானந்தன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2017) புதன் கிழமை பிற்பகல் பி.ப.2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாவில் வீதி,**
**புற்றளை,**
**புலோலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 6652,**
**077 578 8891 - பிரபா**

# கிறிஸ்தவக் கல்லூரி பரிசளிப்புவிழா இன்று

யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் ச.வேலழகன் தலைமையில் விழா நடைபெறும்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்துகொள்வார். (ய-ரி)

## சுன்னாகத்தில் வாணிவிழா

வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தின் வாணி விழா இன்று பிப. 2மணிக்கு சுன்னா கத்திலுள்ள சபாபதிப்பிள்ளை வாழ்வகத்தில் நடைபெறும்.

வாழ்வக மாணவன் ஶ்ரீதரன் யோகதாஸ் நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார். இந்த நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் மு.நித்தியானந் தன், கலைகள் அருள்வாய் கலைவாணி எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார். (ய)

## விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில்தகமை மட்டம் 5க்கான (என்.வி.கியூ.5) எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மீள்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்ப படிவங்களை கல்லூரியில் பெற்று விண்ணப்பிக்க லாம்.


விண்ணப்பங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில், கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று கல்லூரியின் பணிப்பாளர் தெரிவித்தார். (ய-ரி)

## விற்பனைக்கு

தில்லையம்பதி சிறி சிவகாமி அம்பாள் திருக் கோயிலில் பழைய சித்திரத்தேர் ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு - 021 222 9310, 077 160 7121

## மரண அறிவித்தல்



### கந்தையா செட்டியார் கிருஸ்ணமூர்த்தி

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செட்டியார் கிருஸ்ணமூர்த்தி (25.09.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செட்டியார் - இராசம்மா தம்பதியரின் புத்திரரும் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி - பர்வதவர்த்தினி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கைலேஸ்வரியின் அன்புக்கணவரும் ரஜீவன் (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புத் தந்தையாரும் நிரஜா (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான பத்மநாபன், சீனிவாசகம் மற்றும் வாசுதேவன் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சாரதாமணிதேவி, சீதாலஷ்மி ,இராஜேஸ்வரி, பாலச்சந்திரா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் யுதினேஸ்ராம், யாழினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2017) புதன்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.30 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**155, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கனகசபை இரத்தினசிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இரத்தினசிங்கம் 25.09.2017 (திங்கட்கிழமை) ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-நாகரத்தினம் (கொக்குவில்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பேரின்பநாயகம் - அன்னலட்சுமி (சூராவத்தை) தம்பதியரின் பாசமிகு மருமகனும், கலைவாணி (கலா) வின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், மதுரா (ஜேர்மனி), பிரசாந் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பலீலாவதி (தேவி-ஜேர்மனி), தளையசிங்கம் (கோண்டாவில், இலங்கை), சந்திராதேவி (கனடா), சிவராசா (ஜேர்மனி), இந்திராணி (சுதுமலை, இலங்கை), அன்னலிங்கம் (அமுது-சுவிஸ்), செல்வராணி (ராணி-கொக்குவில், இலங்கை), லீலாவதி (வசந்தி-கனடா), சிறி (சாந்தி-கனடா) ஆகியோரின் சகோதரனும், பிரதீபனின் (ஜேர்மனி) மாமனாரும், றித்விக்கின் (ஜேர்மனி) பாசமிகு பேரனும், செல்வநாயகம் (கொழும்பு), சிவரூபன் (யாழ்ப்பாணம், இலங்கை), கலாதீபன் (சவுதி), அருட்ஜோதி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்:**
**க.தளையசிங்கம்** (சகோதரன்),
**சி.இந்திராணி** (சகோதரி),
**செ.செல்வராணி** (சகோதரி).

## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி தம்பிராசா

ஏழாலைமேற்கைப்பிறப்பிடமாகவும் உடுவில்வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தம்பிராசா கடந்த (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ஞானாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும் தம்பிராசா (ஐங்கரன் ஸ்ரோஸ் - மானிப்பாய்) வின் அன்பு மனைவியும் பிரபாகரன் (கனடா), கிருபாகரன் (பிரான்ஸ்), தருபாகரன் (ஐங்கரன் மோட்டோர்ஸ் உரிமையாளர் - மானிப்பாய்), பவளறஜனி, விஜிகரன் (ஐங்கரன் ஓட்டோஸ் - உரிமையாளர், இலுப்பையடி சந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் றேணுகா (கனடா), அபர்ணா (பிரான்ஸ்), ஜனனி, கேதீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்), ருஜித்தா ஆகியோரின் அன்பு மாமியும் நிகிலேஷ், கைலேஸ், அவந்திக்கா, சைத்தன்ஜன், மனஸ்சி, ஆருக்சி, ஆதித்ஜன், விஷால், விஷானிக்கா, விகாஸ், வினேஸ், சமீரா, கிருஸ்மீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ராஜேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி (ஜேர்மன்), காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி மகாராஜா, பவளக்கொடி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி, சிவக்கொழுந்து, காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சிவராசா (V.P.S), அருளானந்தம், சதாசிவம், தங்கம்மா, கனகரத்தினம் மற்றும் இலங்கேஸ்வரி (ஏழாலை), பரமேஸ்வரி, சிவஞானம் (ஏழாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2017) வியாழக்கிழமை மு.ப.9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**No.28, உடுவில் வீதி,**
**மானிப்பாய். 021 225 5005**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# உடல் ஆரோக்கியத்துக்கு ஊறுவிளைவிக்கும் உணவுப் பொருள்களின் இறக்குமதிக்குத் தடா

## அரச தலைவர் மைத்திரி தீர்மானம்

கொழும்பு, செப். 27

அத்தியாவசியமற்ற உடல் ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கும் அனைத்து உணவு பொருள்களினதும் இறக்குமதியை நிறுத்துவதற்கு தேசியப் பொருளாதார சபை ஊடாக நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

களுத்துறை போம்புவல சேவைக்காலப் பயிற்சி நிறுவனத்தின் விவசாய கண்காட்சியை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் இறக்குமதிக்கு மட்டும் 2 ஆயிரத்து 500 கோடிக்குக் கூடுதலான பணம் செலவிடப்படுகின்றது. ஆயிரக்கணக்கான ஆண்டு நாட்டின் பண்பாட்டையும் தனித்துவத்தையும் பாதுகாத்து எமக்குத் தேவையான உணவுப் பொருள்களை எமது நாட்டிலேயே உற்பத்திசெய்யவேண்டியது கட்டாயமானது.

உள்நாட்டு விவசாயிகளின் உற்பத்திகளுக்கு சிறந்த விலையை வழங்கி அவர்களது பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டுமாயின் எமது பொருள்களுக்கு கூடுதல் பெறுமானம் வழங்க வேண்டும்.

கடந்த சில மாதங்களில் நாட்டில் ஏற்பட்ட வறட்சி மற்றும் வெள்ளம் காரணமாக விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்து நாட்டின் விவசாயத் துறையில் புதிய மாற்றத்தை உருவாக்குவதற்காகத் தேசிய உணவு உற்பத்தி மறுமலர்ச்சித் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்.



விவசாய மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அரச மற்றும் தனியார் துறையில் உள்ள அனைத்து காணிகளிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாயத்தில் ஈடுபடுபவர்களை ஊக்குவிப்பதுடன், விவசாயத்தில் ஈடுபடாதோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும். சட்டம் மற்றும் அரசமைப்புக்கு அமைவாகவன்றி மனிதாபிமான செயலாகக் கருதி நாட்டின் வறுமையை அகற்றி அனைத்து மக்களினதும் பட்டினியைப் போக்கும் விவசாய மறுமலர்ச்சியுடன் அனைவரும் இணைந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன் - என்றார். (5)

# அத்துமீறுகிறார் ஐ.நா. ஆணையர் பொதுச் செயலாளரிடம் முறையீடு

கொழும்பு, செப். 27

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சைட் அல் ஹுசைன் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறி நடந்து கொள்வதாக ஐ.நா. பொதுச் செயலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புலம்பெயர் பூகோள இலங்கையர் அமைப்பின் மூலமாக இந்த முறைப்பாடு ஐ.நா. பொதுச் செயலருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்பின் சார்பில் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அமைப்பின் செயலர் வசந்த கீர்த்திரன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

சந்திப்பின் பின்னர் பூகோள இலங்கையர் சார்பில் கருத்து வெளியிட்டிருந்த பிரமுகர்கள், ஐக்கிய நாடுகள் பொதுச் செயலரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளனர். அத்துடன் இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையத்தின் முன்மொழிவுகளைத் தாம் சவாலுக்கு உட்படுத்துவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (5)

# எல்லை நிர்ணயப் பணிகள் கட்டம்கட்டமாக முன்னெடுப்பு

## எல்லை நிர்ணய ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 27

மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு அமைவாக எல்லை நிர்ணயப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தப் பணிகள் கட்டம்கட்டமாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எல்லை நிர்ணயக் குழு தெரிவித்துள்ளது.

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான எல்லை நிர்ணயச் செயற்பாடுகளை முதலாவது கட்டத்தின் கீழ் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் இதனை நிறைவு செய்வதற்கு சபாநாயகர், எல்லை நிர்ணயக் குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளரார்.

இதனைத் துரிதப்படுத்துவதற்குத் தேசிய ரீதியில் குழுவொன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான உறுப்பினர்களுக்கான அனுமதி அரசமைப்புச் சபையினால் வழங்கப்படும் என்று எல்லை நிர்ணய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஏனைய மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணயச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (5)

# கிழக்கு மாகாண சபை உறுப்பினரின் முன்மாதிரி

கொழும்பு, செப். 27

மாகாண சபையின் அலுவலகத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட அனைத்துக் காகிதாதிப் பொருள்களையும், மீதமாக இருந்த 67 ஆயிரத்து 428 ரூபா பணத்தையும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் மாகாண சபையிடம் மீளக் கையளித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் 85ஆவது அமர்வு இறுதி அமர்வு நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. அமர்வின் முடிவில், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக், அவைத் தலைவரிடமே, மேற்படி பொருள்களை ஒப்படைத்தார்.

இது தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண சபையினால் எனக்கு வழங்கப்பட்ட மாதாந்த சம்பளத்தில் பொது மக்களுக்காக செலவு செய்த தொகை தவிர்ந்து என்னிடம் மீதமாகவுள்ள பணம் மற்றும் கிழக்கு மாகாண சபையின் அமர்வுகளில் நான் பங்குபற்றியபோது மாகாண சபையினால் எனக்கு வழங்கப்பட்ட காலை, மதியம் உணவு என்பவற்றுக்கான பெறுமானம் உள்ளிட்ட தொகையையும் சேர்த்து 67 ஆயிரத்து 428 ரூபா என்னிடம் மீதமாக இருந்தது. இந்தப் பணம் மக்களுடைய பணமாகும். இது மக்களுக்கே சேர்ந்துவிட வேண்டும் என்ற நோக்கில் நான் இதனைக் கிழக்கு மாகாண சபைக்கு கையளித்துள்ளேன் - என்றார். (5,46)



# நீதிமன்றுக்கு டிமிக்கிவிட்ட தேரர் மீது பிடியாணை

கொழும்பு, செப். 27

அரச தலைவர் செயலகத்தில் கடமையில் இருந்த பொலிஸாரின் பணிகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் வழக்குத் தொடரப்பட்டிருந்த ஜாதிக பலசேனா அமைப்பின் செயலர் வட்டரக்க விஜித தேரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதால் அவரைக் கைது செய்வதற்கான பிடியாணையை கொழும்புக் கோட்டை நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான லங்கா ஜயரத்ன பிறப்பித்திருக்கிறார்.

வழக்குத் தொடர்பான விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன் அதன் பிரதியை சட்டமா அதிபருக்கும் அனுப்பிவைக்குமாறு கொழும்புக் கோட்டைப் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அரச தலைவர் செயலகத்துக்குச் செல்லும் வீதியில் குறுக்காகப்படுத்திருந்து பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையூறு விளைவித்தார் எனவும் அவரைத் தடுத்து நிறுத்த முயன்ற பொலிஸாரை நிந்தனை செய்தார் எனவும் வட்டரக்க தேரருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (5)




# சர்ச்சையில் முடிந்த சாதனையில் தப்பினார் முதலமைச்சர் சரத்

கொழும்பு, செப். 27

திருமண நிகழ்வில் மணப்பெண் அணிந்திருந்த சுமார் 3.8 கிலோ மீற்றர் நீளமான சேலையை, பாடசாலை மாணவர்கள் ஏந்தியிருந்த விவகாரத்தில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவை, அந்தக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பதாக, மத்திய மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில், ஆராய்வதற்காக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே, அவர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

பாடசாலை மாணவர்களை, அந்தச் செயற்பாட்டில் ஈடுபடுத்தியமைக்கான பொறுப்பை, மத்திய மாகாண கல்விச் செயலரே ஏற்கவேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கண்டி கண்ணொருவரையில், கடந்த 21ஆம் திகதியன்று இடம்பெற்ற திருமண நிகழ்வில், மணப்பெண் அணிந்திருந்த சுமார் 3.8 கிலோமீற்றர் நீளமான சேலையை, பாடசாலை மாணவர்கள் 250 பேர் ஏந்தியிருந்தனர். சேலையை ஏந்துவதற்கு, பாடசாலை மாணவர்களை சீருடையில், பாடசாலை நாளொன்றில் பயன்படுத்தியமையால், இந்த விவகாரம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் கல்வியமைச்சு ஆகியனவும் விசாரணைகளுக்கு ஏற்கனவே பணித்திருந்தன. மத்திய மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்கவும் விசாரணைக்கு பணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# அரசு அவசரமாக நிறைவேற்றிய சட்டத்தில் தொழில்நுட்பத் தவறுகள்

## சுட்டிக்காட்டுகின்றது கபே அமைப்பு

கொழும்பு, செப். 27

பெண்களுக்கு 30 சதவீதப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதாக மேற்கொள்ளப்பட்ட மாகாணசபைகள் திருத்தச் சட்டம், பெண்கள் அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் மட்டுமன்றி முழு நாட்டுக்கும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் தேசியக் கண்காணிப்பாளர் மனாஸ் மக்கீன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவில் 30 சதவீதம் பெண்கள் பிரதிநிதித்துவம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையே இந்தச் சட்டம் முதன்மையாகச் சொல்கின்றது. ஆனால், அவ்வாறு இல்லாமல் ஒரு வேட்புமனு சமர்ப்பிக்கப்படும்போது அதனை நிராகரிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதிகாரம் உள்ளமை தொடர்பில் சட்டத்தில் கூறப்பட்டிருக்கவில்லை. இது தொழில்நுட்ப ரீதியிலான தவறு. இதைப் போன்று ஏராளமான தவறுகள் உள்ளன.

மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை அரசு பின்கதவால் நிறைவேற்ற முயற்சித்திருந்தது. அது கைகூடவில்லை - என்றார். (5)

# மசகு எண்ணெய் விநியோகத்தில் பவுசருக்குப் பதிலாக தொடருந்து

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க யோசனை முன்வைப்பு

தொடருந்து ஊடாக எண்ணெய்க் கிடங்குகளுக்கான மசகு எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகப் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மசகு எண்ணெய்யைப் பவுசர்களின் மூலம் விநியோகிப்பதை விட தொடருந்துச் சேவையினூடாக விநியோகிப்பதன் மூலம் இலாபத்தை ஈட்டமுடியும். மேலும் எதிர்கால நலனுக்காக எண்ணெய்க் கிடங்குகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. எண்ணெய்விநியோகத்தை பவுசர்களில் இல்லாமல் தொடருந்தின் ஊடாகக் கொண்டுவந்தால் எமது கூட்டுத்தாபனத்துக்கு பெரும் இலாபம் கிடைக்கும். பொதுமக்களுக்கு நிறைய சலுகைகளை வழங்கி வருகின்றோம். இலாபமீட்டும் வழியாகக் கூட்டுத்தாபனத்தின் செலவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (5,31)

# ஏமாற்றம்!

## மைத்திரி திட்டமிட்ட சந்திப்புக்கள் அமெரிக்காவில் கைகூடவில்லை



கொழும்பு, செப். 27
எதிர்பார்த்தபடி முக்கிய சந்திப்புகள் கைகூடாமலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் 72ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கொழும்புக்கு நேற்றுமுன்தினம் திரும்பினார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் முக்கிய உலகத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு மைத்திரிபால சிறிசேன விருப்பம் கொண்டிருந்தார்.

கொழும்பில் இருந்து புறப்படும் முன்னர், உறுதிப்படுத்தப்பட்ட பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் தலைமை அமைச்சர்களுடனான சந்திப்புகள் மாத்திரம் இடம்பெற்றன.

அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப், சீன அரச தலைவர் ஷா ஜின்பிங், இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, ஜேர்மனி அரச தலைவர் ஏஞ்சலா மார்க்கல், ஜப்பானிய தலைமை அமைச்சர் ஷான்சோ அபே உள்ளிட்டவர்களைச் சந்திப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால விருப்பம் கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்புகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதாக, அயலுறவுத்துறை அமைச்சு அதிகாரிகள் கூறியிருந்தனர்.

எனினும், இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, ஜேர்மனி அரச தலைவர் ஏஞ்சலா மார்க்கல், சீன அரச தலைவர் ஷா ஜின்பிங் ஆகியோர் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இந்தியா சார்பில் அயலுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜும், சீனா சார்பில் அயலுறவுத் துறை அமைச்சர் வாங் யியும், ஜேர்மனி சார்பில் உதவி அரச தலைவர் சிக்மர் கபிரியேலுமே கலந்து கொண்டனர். இதனால் இந்த நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டாமல் போனது.

ஜப்பானிய தலைமை அமைச்சர் ஷான்சோ அபே நியூயோர்க்கிற்கு வந்திருந்த போதும், அரச தலைவர் மைத்திரியைச் சந்திக்க அவர் நேரம் ஒதுக்கவில்லை.

அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் வாய்ப்பும் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு கிடைக்கவில்லை. எனினும், உலகத் தலைவர்களுக்கு அமெரிக்க அரச தலைவர் அளித்த வரவேற்பு உபசாரத்தின் போது, அமெரிக்க இலங்கை அரச தலைவர்கள் தமது துணைவியர்களுடன் இணைந்து ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொன் மாத்திரம் அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதேவேளை, ஐ.நா. பொதுச்செயலர் மற்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் ராட் அல் ஹுசைன் ஆகியோர் அரச தலைவரைச் சந்தித்துப் பேசியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## கடற்படையின் கடல்சார் கருத்தரங்கு அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு, செப். 27
கடற்படை ஆண்டுதோறும் நடத்தும் பன்னாட்டுக் கடல்சார் கருத்தரங்கான 'காலிக் கலந்துரையாடல்2017', அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் இந்த கடல்சார் பாதுகாப்பு மாநாடு, கொழும்பு, கோல்பேஸ் விடுதியில் இடம்பெறும் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா தெரிவித்தார்.

எட்டாவது ஆண்டாக நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், கடல்சார் பாதுகாப்புத் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறும். இதில் 38 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

2010ஆம் ஆண்டு சுமார் 100 பேராக இருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பங்கேற்பு, 2017ஆம் ஆண்டு 200 பேராக அதிகரித்துள்ளது என்று கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், பல்வேறு நாடுகளின் கடற்படைத் தளபதிகள், உயர் மட்ட அதிகாரிகள், தூதுவர்கள், பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## இந்திய இராணுவ அதிகாரிகள் குழு இலங்கை வருகை

இந்திய இராணுவ உயர் கட்டளை கற்கைநெறி அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. எயர் கொமடோர் சுரேஸ் ஹொல்லன்னாவர் தலைமையிலான இந்தக் குழுவின் இந்தியாவின் முப்படை அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவைச் சந்தித்து பேச்சு நடத்தினர். அத்துடன், வான்படை, கடற்படைத் தளபதிகளையும் இந்திய அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தியப் படை அதிகாரிகள் பத்தரமுல்லையில் உள்ள இந்திய அமைதிப்படையினருக்கான நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தினர்.

இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு, மற்றும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடுவதற்காக இந்தியப் படை அதிகாரிகள் குழு கொழும்பு வந்துள்ளது. (5)



## இருதரப்பு ஒத்துழைப்புக்கு இலங்கை – பாகிஸ்தான் உறுதி

கொழும்பு, செப். 27
இருதரப்பு ஒத்துழைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு இலங்கை - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 4ஆவது அதிகாரிகள் மட்டப் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான 4ஆவது அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் கடந்த 23ஆம் நாள் பனாகொடவில் உள்ள இராணுவ சமிக்ஞைப் படைப்பிரிவு தலைமையகத்தில் இடம்பெற்றது.

மேஜர் ஜெனரல் ஹபீஸ் உர் ரஹ்மான் தலைமையிலான பாகிஸ்தான் இராணுவத்தின் 6 அதிகாரிகளும், இலங்கை இராணுவத்தின் சமிக்ஞைப் படைப்பிரிவின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அஜித் விஜேசிங்க, மேஜர் ஜெனரல் ரேனுகா ரோவெல், பிஜரிகேடியர் பிரபாத் தெமடன்பிட்டிய உள்ளிட்ட இலங்கை இராணுவ அதிகாரிகள் 15 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுக்களின் போதே, இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஹபீஸ் உர் ரஹ்மான் பாகிஸ்தான் இராணுவத்தின் பிரதான தலைமையகத்தில் கட்டுப்பாட்டு, தொலைத்தொடர்பு, கணினிகள் மற்றும் புலனாய்வுப் பணியகத்தின் கட்டளைப் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## கிழக்குப் பல்கலை சகல பீடங்களும் ஒக். 3 ஆரம்பம்

கொழும்பு, செப். 27
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களின்தும் முதலாம், இரண்டாம், மூன்றாம்; வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகும் என்று கிழக்குப் பல்கலைக் கழகப் பதிவாளர் ஏ எல் ஜௌபர் ஸாதிக் தெரிவித்துள்ளார்.

விடுதி வசதிகளுக்குத் தகுதியான அனைத்து மாணவர்களும் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 6 மணிக்கு முன்னர் தத்தமது விடுதிகளுக்குச் சமூகம் தருமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (5,46)

## 212 பிரதேச செயலர் பிரிவுகள் இடரால் பெரும் பாதிப்பு

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 27
நாடு முழுவதிலும் உள்ள 332 பிரதேச செயலர் பிரிவுகளில் 212 பிரதேச செயலர் பிரிவுகள் இடர் காரணமாக பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. 117 பிரதேச செயலர் பிரிவுகள் வறட்சிப் பாதிப்புக்கும், 95 பிரதேச செயலர் பிரிவுகள் வெள்ளப் பாதிப்புக்கும் முகம் கொடுத்துள்ளன. இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும், மாவட்டச் செயலர்களுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்றது. இதன் தொடக்க நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டின் நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக வரவு - செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்ட நிதித் தொகையினை முழுமையாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். இந்த வருடத்தில் எமது நாட்டில் ஏற்பட்ட இயற்கை இடர்களினால் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

சில மாவட்டங்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி செலவிடப்படாதுள்ளது. அந்தத் தொகையினை மீண்டும் திறைசேரிக்கு அனுப்புவதனை விடுத்து எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கு அனைத்து மாவட்ட செயலாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்குச் சகல பிரதேச செயலர்களையும் இணைத்துக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (5,31)

# நாடாளுமன்றத் தேர்தலையும் அரசு உரிய காலத்தில் நடத்துமா?

## இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் மகிந்த அணி வாசுதேவ எம்.பி

கொழும்பு, செப். 27
தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல் இழுத்தடிக்கும் அரசு, நாடாளுமன்றத் தேர்தலையும் உரிய காலத்தில் நடத்தாது இழுத்தடிக்கும் என்ற அச்சம் ஏற்படுகின்றது. இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய, பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்குப் புதிய எல்லை நிர்ணயத்தை முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது அரசு இரண்டரை வருடங்களைக் கடத்தியது. தொடர்ந்தும் தேர்தலை நடத்தாமல் திட்டமிட்டு பிற்போட்டு வருகின்றது.

அதேபோன்று மாகாணசபை தேர்தலையும் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதற்காக 20ஆவது திருத்தத்தை அரசு கொண்டுவந்தபோது, அதற்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் பொது வாக்கெடுப்பு தேவையென உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது. நீதிமன்றத் தீர்ப்பை கண்டுகொள்ளாமல் தேர்தலை பிற்போடும் மாற்று முறையொன்றை அரசு முன்வைத்தது. இதற்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் ஆதரவாகச் செயற்பட்டன. இதன் மூலம் மக்கள் விடுதலை முன்னணியின் முகத்திரை கிழிந்துள்ளது.

மக்களின் சனநாயக உரிமையான தேர்தல்களைப் பிற்போட்டுவரும் அரசு அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலையும் பிற்போடலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நாளுக்கு நாள் வங்குரோத்து நிலையை அடைந்துவரும் கூட்டு அரசு தனது இயலாமையை மறைப்பதற்காக உரிய காலத்தில் நடத்தப்படவேண்டிய தேர்தல்களைப் பிற்போட்டு வருகின்றது. அதற்காக அரசு மோசமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது - என்றார். (5,31)

# ஆளுநர்களிடம் ஆட்சியை வழங்காது மாகாணங்களுக்கு இடைக்கால அரசு

*அரச தலைவரிடம் வலியுறுத்து*

மாகாண சபைகளில் இடைக் கால அரசை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மாகாண முதலமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அறிய முடிகின்றது. சப்ரகமுவமாகாண சபையின் ஆயுள்காலம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்த நிலையில், கிழக்கு மாகாணசபைஎதிர்வரும்சனிக் கிழமையும், வடமத்தியமாகாண சபை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடனும் கலைகின்றன. இவ்வாறானதொரு நிலையிலேயே மூன்று சபைகளினதும் முதல்வர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஆயுள்காலம் முடிவடையும் மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரம் ஆளுநரிடம் கையளிக்கப்படும் என்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா அறிவித்திருந்தார்.

ஆளுநரிடம் அதிகாரத்தை ஒப்படைக்காது, இடைக்கால அரசை ஏற்படுத்தி தேர்தல் நடத்தப்படும்வரை அதைக் கொண்டு நடத்துவதற்கான ஆணையை வழங்குமாறே அரச தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் மாகாணசபையொன்றின் ஆயுள்காலம் முடிவடையும் பட்சத்தில் ஒரு வார காலத்துக்குள் அடுத்த தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு விடுக்க வேண்டும். அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக தேர்தலை ஒத்தி வைத்து, மாகாணசபைகளில் இடைக்காலஅரசு நிறுவ அரசு முன்னெடுத்த முயற்சியும் கைகூடவில்லை.

இந்த நிலையில், மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச்சட் டத்தை அரசு அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதன்படி மார்ச் மாதத்திலேயே தேர்தல் நடைபெறுவதற்குரிய சாத்தியம் காணப்படுகின்றது. அதுவரை இடைக்கால அரசை அமைக்க வேண்டும் என்பதே முதல்வர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

இடைக்கால அரசமைப்பதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலும் அவசியமென்பதால் சிறப்புச் சட்டத்திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (5)



## நாடாளுமன்ற வளாகத்தில் அதியுச்சப் பாதுகாப்பு

*உறுப்பினர்களின் அறைகளும் சல்லடை*

கொழும்பு, செப். 27

நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 70 வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ள சிறப்புச் சபை அமர்வுக்காக நாடாளுமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு போடப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால மேற்படி தகவலை வெளியிட்டார்.

ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ள சிறப்பு நாடாளுமன்ற அமர்வுகளுக்கு விருந்தினர்களையும் தனி நபர்களையும் அழைத்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் சாரதிகளுடன் வாகனத்தை நாடாளுமன்றுக்கு எடுத்துவருமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்களின் வாகனத் தரிப்பிடம் மூடப்படும் என்றும் அனைத்து உறுப்பினர்களின் அறைகள் மற்றும் அலுமாரிகள் என்று சகலதும் 2ஆம் திகதியே சோதனைக்கு உட்படுத்தப்படும்.

நாடாளுமன்றைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதோடு, சிறப்புப் போக்குவரத்து திட்டங்களும் அன்றைய தினத்தில் நடைமுறையிலிருக்கும். இதன்போது நாடாளுமன்றுக்குள் நுழையும் வாகனங்கள் ஜயந்திரபுர நுழைவாயிலைப் பயன்படுத்திக் கொள்ள முடியும், என்றும் அவர் கூறினார். (5)

## மாகாண ஆளுநர்களை சந்திக்கிறார் மைத்திரி

கொழும்பு, செப். 27

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், மாகாண சபைகளின் ஆளுநர்களுக்குமிடையிலான சிறப்புச் சந்திப்பொன்று விரைவில் நடைபெறவுள்ளது.

ஆயுள்காலம் முடிவடைகின்ற கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய ஆகிய மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தை ஆளுநர்களிடம் ஒப்படைப்பதே அரசின் திட்டமாக இருந்தது.

தேர்தல் நடைபெறும்வரை இடைக்கால அரசொன்றை அமைக்குமாறு மாகாண முதல்வர்கள் அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளதால், இந்த விவகாரம் தொடர்பில் அரசு இன்னும் உத்தியோகபூர்வமாக இறுதி முடிவெதையும் எடுக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுநர்களை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பில் தலைமை அமைச்சரும் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (5)



## இருளில் மூழ்கியது நாடாளுமன்றம்

கொழும்பு, செப். 27

நாடாளுமன்றத்தில் நேற்றுத் திடீரென மின்தடை ஏற்பட்டதால் சுமார் மூன்று நிமிடங்கள்வரை சபை இருளில் மூழ்கியது. சிறப்பு நாடாளுமன்ற அமர்வு நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது.

இதன்போது, மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் தொடர்பிலான கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான திருத்தச் சட்டவரைவை துறைசார் அமைச்சர் பைசர் முஸ்தபா சபையில் சமர்ப்பிக்கையிலேயே திடீரென மின்தடை ஏற்பட்டு அனைத்து மின் விளக்குகளும் அணைந்துவிட்டன.

ஒலிவாங்கிக்கான மின்னிணைப்பு தொடர்ந்தும் இயங்கியதால் அமைச்சர் பைசர் முஸ்தபா தனதுரையைத் தொடரமுற்பட்டார்.

'ஒன்றும் விளங்கவில்லை. ஒளி எங்கே?' என்று எதிரணி உறுப்பினர்கள் கூச்சலிட ஆரம்பித்தனர். இதனால் சற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து மின்விளக்குகள் ஒளிர ஆரம்பித்தன. (5)

## நாட்டை பிளவுபடுத்துவதே கூட்டு அரசின் முக்கிய திட்டம்

*மகிந்த அணி உறுப்பினர் பந்துலவின் கருத்து இது*

கொழும்பு, செப். 27

நாட்டைப் பிளவுபடுத்தி கூட்டு அரசை உருவாக்குவதனையே பிரதான இலக்காகக்கொண்டு செயற்பட்டு வருகிறது. இரவு பகல் என்று பாராது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மக்கள் விடுதலை முன்னணி உட்பட முஸ்லிம்களையும் இணைத்துக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மாலேபே தனியார் மருத்துவக் கல்லூரி பிரச்சினை தொடர்ந்து கொண்டு செல்கிறது. அரசு அதனைத் தீர்த்து வைப்பதாக இல்லை. மருத்துவக் கல்லூரியை அரசு பொறுப்பேற்று மாணவர்களின் கல்வி உரித்தை உறுதி செய்ய வேண்டும்.

உயர் கல்வியமைச்சை தனக்கு வழங்கினால் பிரச்சினையை தன்னால் தீர்த்து வைக்க முடியும் என்று அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார். அதற்கான வழிவகைகளையாவது செய்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும். ஏனெனில் உயர் கல்வியமைச்சுக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்குமிடையில் எவ்விதத் தொடர்புமில்லை. மாணவர்களை நெடுஞ்சாலைகளில் அலைய வைக்கும் தொடர்புதான் உள்ளது.

அரசு தற்போது நாட்டைப் பிளவுபடுத்தி கூட்டாட்சி அரசை உருவாக்குவதனையே பிரதான இலக்காகக்கொண்டு செயற்பட்டு வருகிறது. இரவு பகல் என்று பாராது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மக்கள் விடுதலை முன்னணி உட்பட முஸ்லிம்களையும் இணைத்துக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. வடக்கு கிழக்கை இணைத்து மீண்டும் நாட்டில் தீ மூட்டுவதற்கான செயற்பாடுகளையே கூட்டு அரசு மேற்கொண்டு வருகின்றது -என்றார். (5.31)

## அமைச்சரவையில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, செப். 27

குருநாகல் மாவட்டத்தின் நகர அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர்களான காமினி ஜயவிக்ரம பெரேராவுக்கும், சம்பிக்க ரணவக்கவுக்கும் இடையே கடும் வாதப்பிரதிவாதங்கள் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின்போது இடம்பெற்றுள்ளன.

காட்டுப் பகுதிகளை அழித்து நகர அபிவிருத்தியை செய்வதா என்பது தொடர்பில் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா எழுப்பிய சர்ச்சையையடுத்தே இந்த வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. (5)

## ஆசிய நாடுகளுடன் ஐந்து ஒப்பந்தங்கள்

கொழும்பு, செப். 27

ஆசிய நாடுகளுடன் ஐந்து பொருளாதார உடன்படிக்கைகளை விரைவில் கைச்சாத்திடுவதற்கு அரசு தயாராகி வருவதாக பன்னாட்டு வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு திறந்தப் பொருளாதாரக் கொள்கையின் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கான அத்திவாரத்தை இட்டுள்ளது.

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் மத்திய தர வர்க்கத்தின் வர்த்த தேவையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் முறைமைக்கு மாறும் வகையில் எமது பொருளாதார இலக்குகள் அமைந்துள்ளன. இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் விரைவில் ஐந்து பொருளாதார உடன்படிக்கைகளை கைச்சாத்திடவுள்ளோம்.

இந்தப் பொருளாதார வலயத்தின் மூலம் நான்கரை பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெறுவதை இலக்காகக் கொண்டு உடன்படிக்கையும் கைச்சாத்திடவுள்ளோம்.



தற்போது 7.2 எமது பொருளாதார வளர்ச்சி காணப்படுகிறது. அதனை அடுத் தாண்டுக்குள் 7.8 வீதமாக அதிகரிக்கு முகமாக கைத்தொழில் போட்டைகளை அதிகரிப்பதுடன், ஆடைத் தொழிலை விரிவுபடுத்துவதும் அரசின் இலக்காக உள்ளது - என்றார். (5)

## நாட்டை அசிங்கப்படுத்திவிட்டார் சிவாஜி

*சீறுகிறார் அமைச்சர் சந்திம வீரக்கொடி*

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் நடவடிக்கை நாட்டையும் மக்களையும் அசிங்கப்படுத்தியுள்ளது. நாட்டின் பிரச்சினையை நாட்டுக்குள் தீர்;த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சிவாஜிலிங்கம் இலங்கையைப் பற்றிப் பேசிய கருத்துக்கள் வெறுக்கத்தக்கவையாகும். நாட்டு மக்களையும், அரசையும் அவர் இழிவுபடுத்தியுள்ளார். தமிழர்களாக இருந்தாலும், சிங்கள வர்களாக இருந்தாலும் யார் பிழை செய்தாலும் அது பிழைதான். அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்து வந்த கருத்துக்களின் அடிப்படையிலே சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்ததாகக் கூறுகின்றனர். எமது நாட்டுக்குள் இடம்பெறும் பிரச்சினையை நாட்டுக்குள் தீர்க்க வேண்டும். பிரேமதாசவின் காலத்தில் மகிந்த ராஜபக்ச ஐ.நா. சபைக்கு சென்று முறையிட்டுள்ளார். பிரேமதாசவின் காலத்துடன் இன்றைய காலத்தை ஒப்பிட முடியாது - என்றார். (5.31)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்களின் சொத்து தியாகி திலீபன்

கிட்டத்தட்ட 2 தசாப்தங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில்தியாகதீபம்திலீபனின்நினைவுநாள்பெருமெடுப்பில் ஆயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் நடந்துள்ளது. தனது இனத்துக்காகத் தன்னையே ஆகுதியாக்கிக்கொண்ட ஒரு இளைஞனின் நினைவுகளை நீண்ட இடைவெளிக்குப் பின்னர்தமிழ்இனம்மீட்டெடுத்திருப்பதுகவனத்துக்குரியது.

இன்றையதமிழ்த்தலைமுறைக்குதிலீபனின்நினைவுகள்மிக முக்கியமானவை. தமிழர்களது மிகக்குறைந்தளவு கோரிக்கைகள்கூட ஆட்சியாளர்களாலும், பிராந்திய வல்லரசாலும் எவ்வாறுதுச்சமாகமதிக்கப்பட்டுஅலட்சியப்படுத்தப்பட்டன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவும், அவர்களுக்கு மத்தியில் இருக்கும் ஏகப்பட்ட கவனக் கலைப்பான்களுக்கு மத்தியில் விடுதலைத் தீயை நெஞ்சில் தொடர்ந்து ஏந்திச் செல்வதற்கும் திலீபனின் நினைவுகள் மித மிக அவசியம்.

இப்போது வேடமிடுவோரினதும், நன்மைகள் செய்கிறோம் என நடிப்போரினதும் சுயரூபம் என்ன என்பதை இளைய தலைமுறை உணர்வதற்கும், உண்மையைப் புரிந்துகொள்வதற்கும் அது அவசியம்.

திலீபன் கொழும்பு அரசிடமும், இந்திய அரசிடமும் முன்வைத்த கோரிக்கைகள் 5. அவை ஒன்றும் நிறைவேற்றவே முடியாத கருதுகோள்கள் அல்ல. நடைமுறைச் சாத்தியமான சிறு கோரிக்கைகள் மட்டுமே.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைக்கூடங்களிலும் இராணுவ, பொலிஸ்தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள்யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசர காலச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர்பகுதிகளில்புதிதாகபொலிஸ்நிலையங்களைத்திறப்பதற்கு மேற்கொள்ளப்படும்நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் ஆகியவை தான் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள்.

நிறைவேற்றுவதில் எந்தச் சிக்கல்களும் இருக்க முடியாத இந்தக்கோரிக்கைகளை, மேலாதிக்கத்திமிரோடு கொழும்பும், வல்லாதிக்கத் திமிரோடு இந்தியாவும் நிராகரித்தன. அதனாலேயேதிலீபனின்சாவுசம்பவித்தது. அதுவரையில்இந்தியாமீது தமிழ் மக்களுக்கு இருந்து வந்த மயக்கத்தை நீக்கினான் திலீபன். அகிம்சையைப் பேசினாலும், வல்லாதிக்க சக்திகள் எப்போதும் ஆதிக்கசக்திகளே; அவை ஆதிக்கசக்திகளுடன்தான் கைகோர்க்கும் என்பதைத் தமிழர்களுக்குப் புரிய வைத்தான்.

துன்பியல் என்னவென்றால், அவன்போதித்தவற்றைத்தமிழ் மக்கள் கற்றுக்கொண்டார்களா என்பதுதான். 30 ஆண்டுகள் கடந்தும் அவனது கோரிக்கைகள் அப்படியேதான் உயிர்வாழ்கின்றன. அவற்றுக்குத் தீர்வு வரவில்லை. அதற்குக் காரணம், சிங்களபௌத்தமேலாதிக்கமும், இந்தியவல்லாதிக்கமும்தான் என்பதைஅடுத்து வரும்தலைமுறைகள்புரிந்துகொள்ளவும், அதற்கேற்பத் தம்து அரசியலை முன்னகர்த்தவும் திலீபனின் நினைவுகள் மிக முக்கியமானவை.

எனவே திலீபனின் நினைவுகள் மீட்கப்பட்டிருப்பது ஈழத் தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது. ஆனால், அது அரசியல் கட்சி சார் நடவடிக்கைகளாக முடங்கிவிடாமலும், அரசியல்போட்டிக்குள்சிக்கிவிடாமலும் இருப்பதை உறுதிப்படுத்துவதும் முக்கியமானது. அதற்கு, நினைவு தினங்கள் எல்லாவற்றையுமே கையாளக்கூடிய அரசியல்சாரா பொதுக் கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

நினைவுகளையும் நினைவிடங்களையும் மீட்டெடுப்பதில் அரசியல் கட்சிகளின் பங்களிப்பு இன்றியமையாதது, தேவையானது என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது தானென்றாலும்தொடர்ந்து அதனைநிர்வகிக்கும்பொறுப்பை பொதுக்கட்டமைப்பு ஒன்றிடம்விட்டுவிடவேண்டியநேரம் வந்துவிட்டது என்பதையும் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில்திலீபன்கட்சிகளின்சொத்தல்ல, அவன் ஈழத்தமிழ் மக்களின் சொத்து.



# வித்தியா கொலை வழக்கு

## கடந்து வந்த பாதை

மயூரப்பிரியன்

கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதியன்று பாடசாலைக்குச் சென்ற வேளையில் கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் புங்குடுதீவு மாணவி வித்தியா. இந்தப் படுகொலை தொடர்பான வழக்கு கடந்த இரண்டேகால் வருடங்களுக்கும் மேலாக நடைபெற்று வந்தது. நாடாளாவிய ரீதியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த வழங்கின் தீர்ப்பு இன்று வெளியாகிறது. வழக்கு கடந்து வந்த பாதையின் முழுமையான விவரத்தைப் பற்றி இந்தக் கட்டுரை பேசுகிறது.

*13.05.2015*
காலை பாடசாலைக்கு சென்ற மாணவி வித்தியா மாலை வரை வீடு திரும்பவில்லை. இரவிரவாக உறவினர்கள் மாணவியைத் தேடினார்கள்.

*14.05.2015.*
காலையிலும் வித்தியாவின் சகோதரன், வித்தியா வளர்த்த நாயையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு ஊரவர்களுடன் சேர்ந்து தேடுகின்றார்கள். வித்தியா பாடசாலை செல்லும் பாதையில் உள்ள பாழடைந்த வீடொன்றின் பின்புறமாக, கைகள் கால்கள் கட்டப்பட்டு வாய்க்குள் துணி அடையப்பட்ட நிலையில் வித்தியா சடலமாக மீட்கப்படுகின்றாள்.

*14.05.2015.*
புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் இந்திரகுமார் (வயது 40), பூபாலசிங்கம் ஜெயக்குமார் (வயது 34), பூபாலசிங்கம் தவக்குமார் (வயது 32) ஆகிய மூவரும் கைது.



*15.05.2015.*
வாய்க்குள் துணி அடைந்தமையால், மூச்சுத் திணறல் ஏற்பட்டதாலும், தலை அடிபட்டதில் மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டதாலும் மாணவி வித்தியா உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையும் உறுதி செய்யப்பட்டது.

*15.05.2015.*
வித்தியாவின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன. புங்குடுதீவில் கடையடைப்பு . தீவகத்துக்கான போக்குவரத்தும் இடைநிறுத்தம்.

*17.05.2015*
வித்தியா கொலை தொடர்பில் மேலும் 5 பேர் கைது. சந்தேக நபர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி, குறிகாட்டுவான் பகுதியில் உள்ள ஊர்காவற்றுறை பொலிஸ்காவலரணை முற்றுகையிட்டு மக்கள் இரவிரவாகப் போராட்டம். சில மணி நேரத்தில் சந்தேகநபர்களை பொலிஸார், கடற்படையின் உதவியுடன் யாழ்ப்பாணத்திற்கு கடல் வழியாக கொண்டுசென்றனர்.
மக்கள் ஆத்திரமுற்றுகாவலரணைத் தாக்கினார்கள். கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களுடன் தொடர்புடையவர் என சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை பிடித்து மின் கம்பத்தில் கட்டி வைத்து மக்கள் தாக்கினார்கள்.
அவ்விடத்திற்குச் சென்ற தற்போதைய இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குறித்தநபரை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு அங்கிருந்தவர்களிடம் கூறியதை அடுத்து அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

*19.05.2015.*
சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் எனும் நபர் ஒன்பதாவது சந்தேக நபராக கொழும்பு வெள்ளவத்தையில் வைத்துக் கைது. (குறித்த நபர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண பொலிஸில் 17 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டு, யாழ்ப்பாண பொலிசாரால் விடுவிக்கப்பட்ட பின்னர் 19 ஆம் திகதி வெள்ளவத்தையில் வைத்து மீண்டும் கைது செய்யப்பட்டார்)
மாலை. புங்குடுதீவுக்குச் சென்ற கொழும்பு பல்கலைகழக சட்டத்துறை விரிவுரையாளரான வி.ரி.தமிழ்மாறனே, சுவிஸ் குமார் தப்பிச் செல்ல உதவினார் எனக் கூறி ஊரவர்கள், அவரை சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேலாக பொலிஸ் வாகனத்திற்குள் முடக்கினர். பின்னர் கடற்படையின் உதவியுடன் பொலிஸார் தமிழ்மாறனை ஊரவர்களிடம் இருந்து பாதுகாப்பாக மீட்டனர்.

*20.05.2015.*
மாணவிக்கு நீதி கோரி முழு அடைப்பு. அன்றைய தினம் சந்தேக நபர்களை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை. நீதிமன்ற கட்டடத் தொகுதியைச் சுற்றி பெருமளவான மக்கள் கூடி நின்றனர். மதியம் 11. 30 மணி. மக்கள் திடீரென வன்முறையில் இறங்கினர். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது கல் வீசி தாக்குதல். கலகம் அடக்கும் பொலிஸார் போராட்டக் காரர்களைத் துரத்தினர். வன்முறையில் ஈடுபட்டனர் எனக்கூறி 139 பேர் கைது செய்யப்பட்டனர்.

*20.05.2015*
மாணவியின் குடும்பத்தின் சார்பில் இலவசமாக முன்னிலை ஆவோம் என்றும், சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையாக மாட்டோம். எனவும் யாழ். சட்டத்தரணிகள் கூட்டாக அறிவிப்பு.

*26.05.2015*
வித்தியாவின் தாய், சகோதரனைச் சந்தித்து





அரச தலைவர் ஆறுதல். "விசேட நீதி மன்றம் மூலம் விரைவான விசாரணை, வித்தியா குடும்பத்துக்கு வீடு" என்னும் வாக்குறுதிகளை வழங்கினார்.

*15.12.2015*
பத்தாவது சந்தேக நபராக ஜெயவர்த்தன ராஜ்குமார் (வயது 26) எனும் நபரை ஊர்காவற்றுறை பொலிஸார் ஊர்காவற்துறை நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தினார்கள்.

*19.02.2016*
குற்றப்புலனாய்வு துறையினர் மரபணுச் சோதனை அறிக்கை உட்பட எந்த அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கவில்லை.
அறிக்கைகளை விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் என ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் உத்தரவு.

*04.03.2016*
வித்தியாவின் கொலைக்கான காரணத்தை குற்றப்புலனாய்வு துறையினர் ஊர்காவற்துறை நீதிமன்றில் வெளியிட்டனர். "வித்தியாவை புங்குடுதீவைச் சேர்ந்த சிவதேவன் துஷாந்த் ஒரு தலைப்பட்சமாகக் காதலித்தார். ஆனால் வித்தியா அதற்கு உடன்படவில்லை. வித்தியாவைப் பழிவாங்க, தன் நண்பரான தில்லை நாதன் சந்திரஹாசனுடன் கூட்டுச் சேர்ந்து மாணவியைக் கடத்த திட்டமிட்டார். திட்டத்தின் சூத்திரதாரியாக மாறினார் சுவிஸ் குமார்.
இவர்களுடன் இருவர் துணைக்குச் சேர்க்கப்பட்டனர். அப்படிச் சேர்க்கப்பட்டவர்களுக்கும் வித்தியா குடும் பத்துக்கும் முன்பகை இருந்தது. அவர்களுக்கு எதிராக களவு வழக்கில் வித்தியாவின் தாயார் சாட்சியம் சொல்லி இருந்தார்.
திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. வித்தியா கடத்தப்பட்டு கோரமாக கூட்டு வன்புணர்வின் பின் கொல்லப்பட்டார். துசாந்த், சந்திரஹாசன் ஆகிய இருவருமே கொலை செய்தவர்கள்" இதுவே குற்றப்புலனாய்வாளர்களின் அறிக்கை.



*03.03.2016.*
11ஆவது சந்தேகநபரான உதயசூரியன் சுரேஷ்கரன் கைது.

18.03.2016.
வழக்கு ஒரு சில மாதங்களில் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்படும் என ஊர்காவற்துறை நீதிமன்று அறிவிப்பு.

01.04.2016
பன்னிரண்டாவது சந்தேக நபராக தர்மலிங்கம் ரவீந்திரன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

*20.04.2016.*
மரபணுபரிசோதனை அறிக்கையை தம்மிடம் ஜின்ரேக் நிறுவனம் இதுவரை கையளிக்கவில்லை என பொலிஸார் மன்றில் தெரிவிப்பு. ஜின்ரேக் நிறுவன அதிகாரியை நீதி மன்றில் முன்னிலை ஆகுமாறு உத்தரவு.

*09.05.2016.*
வித்தியா கொலை வழக்கின் ஒன்பதாவது சந்தேக நபரான சுவிஸ் குமாருடன் தொடர்புகளை பேணியவர்கள், தப்பி செல்வதற்கு உதவியவர்கள், தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என குற்ற புலனாய்வுப் பிரிவு பணிப்பாளருக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஏ.எம்.எம்.றியாழ் உத்தரவு.





*18.05.2016.*
வித்தியா கொலை வழக்கின் மரபணுப் பரிசோதனை அறிக்கையை குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பித்தனர். (சம்பவம் நடந்து ஒரு வருடத்தின் பின்னர்.)

*18.07.2016.*
வித்தியாவின் தாயை மிரட்டிய குற்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்த சுவிஸ் குமாரின் தாயாரான மகாலிங்கம் தயாநிதி சிறைச்சாலையில் சுகவீனம் காரணமாக உயிரிழப்பு.

*18.07.2016.*
வித்தியா கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு உள்ள சுவிஸ் குமாரும், அவரது தம்பி மகாலிங்கம் சசீந்திரன் ஆகிய இருவரும் தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள ஊர்காவற்துறை நீதிவான் நீதி மன்ற பதில் நீதவான் இ. சபேசன் அனுமதி.

*23.07.2016.*
வித்தியா கொலை வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தி உள்ளதாக குற்றத் தடுப்புப் புலனாய்வு பிரிவுப் பொலிசார் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் தெரிவிப்பு.

*20.09.2016.*
வித்தியா கொலை வழக்கின் குற்றவாளிகள் , இனம் காணப்படக் கூடிய நிலையில் குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணை அறிக்கை உள்ளதாக ஊர்காவற்றுறை நீதவான் நீதி மன்ற நீதிவான் மன்றில் தெரிவிப்பு.

*09.11.2016*
வித்தியா கொலை வழக்கு தொடர்பில் மிக விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யக் கோரி யாழ். மேல் நீதி மன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் சட்டமா அதிபருக்குப் பணிப்புரை.

*22.02.2017*
வித்தியா கொலை வழக்கின் 11 ஆவது சந்தேகநபர் அரசதரப்புச் சாட்சியமாக மாறுவதற்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஒப்புதல்.

*22.02.2017.*
வித்தியாகொலைவழக்கு 98 சதவீத விசாரணைகள் முடிவடைந்து விட்டதாக ஊர்காவற்றுறை நீதிவான் .எம்.எம். றியாழ் தெரிவிப்பு.

*28.04.2017.*
வித்தியா வழக்கின் 10 ஆவது சந்தேகநபரான ஜெயவர்த்தனா ராஜ்குமார் மற்றும் 12 ஆவது சந்தேகநபரான ரவீந்திரன் ஆகியோர் சாட்சியங்கள் இல்லாமையால் வழக்கில் இருந்து விடுதலை.



*05.05.2017.*
வித்தியா கொலை வழக்கின் குற்றப் பகிர்வு பத்திரம் மே மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மேல்நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் மேல் நீதி மன்றில் தெரிவிப்பு.

*10.05.2017*
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை கொழும்பில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் முன்னிலையில் 'ட்ரயல் அட் பார்' முறையில் நடத்த சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித் துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

*11.05.2017.*
வித்தியா கொலை வழக்கு யாழ். மேல் நீதிமன்றிலையே நடைபெற வேண்டும் என் கோரி மாணவியின் தாய் உட்பட புங்குடு தீவு மக்கள் போராட்டம்.

*12.05.2017.*
வித்தியா கொலை வழக்கு குற்றப் பகிர்வு பத்திர வழக்கேடுகள் யாழ். மேல் நீதி மன்றில் பாரப்படுத்தப்பட்டன.

*29.05.2017.*
வடமாகாணத்தில் முதலாவது " ரயல் அட் பார்" தீர்ப்பாய முறைமையிலான நீதிமன்ற அமர்வு யாழ். மேல் நீதி மன்ற நீதிபதியின் சமாதான அறையில் கூடியது.

*12.06.2017.*
மாணவி கொலை வழக்கின் ஒன்பது எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லை நாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகிலன், மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் மன்றில் முற்படுத்தப்பட்ட னர். அதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகள் மன்றில் ஆரம்பமானது. 41 குற்றங்கள் சுமத்தப்பட்டு எதிரிகளுக்கு திறந்த நீதிமன்றில் தமிழ் மொழியில் வாசித்து காண்பிக்கப்பட்டது. அதன் போது எதிரிகள் தம் மீதான 41 குற்ற சாட்டையும் மறுத்து தாம் சுற்றவாளிகள் என மன்றுரைத்தனர்.



## ஆசிரியருக்கான கடிதம்

### மத நல்லிணக்கத்தை அழிப்பதற்கு அரச தலைவரும் உடந்தையாவதா?

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சிவன் ஆலயம் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம் பகுதியில் பௌத்த விகாரையொன்று அமைக்கப்பட்டு அதனை அரசதலைவர் திறந்து வைக்கவுள்ளமை, இந்து மதத்தைப் பின்பற்றுகின்ற மக்களின் மனங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
திருக்கேதீஸ்வரம் பகுதி 1991 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டபோது அவர்கள் தமது வழிபாட்டுக்கென சிறிய பௌத்த வணக்கத்தலமொன்றை அமைத்தனர். பின்னர் இராணுவத்தினர் அங்கிருந்து அகன்றுசென்றபோதிலும் பௌத்த விகாரை தொடர்ந்து பேணப்பட்டு வந்தது.
பௌத்த மதகுரு ஒருவரும் அங்குள்ளார். இவரது பாதுகாப்புக்கென சிறிய இராணுவ முகாமொன்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், தனியார் ஒருவருக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டு பெரிய அளவிலான பௌத்த விகாரையொன்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை அரச தலைவர் இதைத் திறந்து வைக்கவுள்ளமை அந்தப் பகுதி மக்களை மட்டுமல்ல, அனைத்து இந்து மக்களையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.
அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஏனைய மதத்தினரைப் புண்படுத்தும் வகையில் அரசு நடந்துகொள்வது ஏற்புடையதல்ல.
ஏற்கனவே கதிர்காமத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயம் இந்து மதத்தைப் பின்பற்றுகின்ற தமிழர்களின் கைகளிலிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. அந்த ஆலயத்தின் ஆகம நடவடிக்கைகளைப் பெரும்பான்மை இனத்தவர்களே மேற்கொண்டு வருகின்றனர். காலப்போக்கில் திருக்கேதீஸ் வரம் சிவன் ஆலயமும் இந்த நிலைக்குத் தள்ளப்படக் கூடுமென்பதை மறுக்க முடியாது.
பௌத்த மக்கள் வசிக்காத இடங்களில் விகாரைகளை அமைப்பதும், அவற்றை ஒட்டியதாக சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதும் இன நல்லிணக்கத்தை முற்றாகவே சீர்குலைத்து விடும். அதிலும் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை திருக்கேதீஸ்வரத்தில் அரச தலைவர் திறந்து வைக்கவுள்ளதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மா.மகேஸ்வரன்
மன்னார்

*28.06.2017.*

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் மூன்றாம் மாடியில் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல்நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் முதல் நாள் சாட்சியப் பதிவுகள் ஆரம்பமாகின.

**பதில் சட்டமா அதிபர் தொடக்கவுரை**

அன்றைய தினம் பதில் சட்டமா அதிபர் டபிள்யூ.டி. லிவேரா மன்றில் முன்னிலையாகி உரை நிகழ்த்தினார். அதன்போது, இந்த வழக்கின் 2ஆம், 3ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் எதிரிகளே மாணவியைக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி உள்ளனர். இவர்கள் நால்வரும் மாறி மாறி மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்தி உள்ளனர்.

கொடூர சம்பவமானது சாதாரண கடத்தல், வன்புணர்வு, கொலை போன்றது அல்ல. இது முன் கூட்டியே நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட குற்றம். இதற்கு பன்னாட்டு ரீதியில் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. அதனால் இதைப் பன்னாட்டு குற்றம் என்று கூடச் சொல்லலாம். இதன் பின்னணியில் இந்த நாட்டின்நற்பெயருக்கும்கீர்த்திக்கும்களங்கம் ஏற்படுத்த வேண்டும் என திட்டமிட்டு செயற்பட்டு உள்ளனர் என அவர் தெரிவித்தார்.

**மாணவியின் தாயின் சாட்சியம்**

அன்றயை தினம் வித்தியாவின் தாய் சாட்சியம் அளிக்கையில், "சம்பவ தினத்தன்று (13.05.2015) காலை 7.30 மணிக்கு வித்தியா பாடசாலைக்குச் செல்லப் புறப்பட்டாள் நானேவீட்டுக்கேற்வரையில்சென்றுவழியனுப்பி வைத்தேன் அன்றைய தினம் தன்னுடன் கூட படிக்கும் மாணவியுடன் செல்கிறேன்என்றுகூறிச்சென்றார். ஆனால் அன்றைய தினம் அந்த மாணவி பாடசாலை செல்லாத காரணத்தால் வித்தியா தனியாகவே பாடசாலைக்குச் சென்றாள்.

பாடசாலை சென்ற வித்தியா பாடசாலை நேரம் முடிவடைந்து வீட்டுக்கு வரும் நேரத்தை கடந்தும் வராததினால் வித்தியாவை பார்த்து வருமாறு எனது மகனைப் பாடசாலைக்கு அனுப்பினேன். அவன் அங்கு சென்று பார்த்து விட்டு பாடசாலை பூட்டி உள்ளதாக தொலை பேசியில் சொன்னான்.

அதன்பின்னர்நானும்எனதுமகனும்வித்தியாவை தேடி அலைந்தோம். பின்னர் இரவு 8 மணியளவில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற முறைப்பாடு கொடுத்தோம். அன்றைய தினம் இரவு மழை பெய்து கொண்டு இருந்ததால் மேற்கொண்டு பிள்ளையை தேடவில்லை மீண்டும் மறுநாள் (14ஆம் திகதி) காலை 6.30 மணியளவில் நானும் மகனும் அயலவர்களுடன் வித்தியாவைத் தேடிச் சென்றோம்.

அப்போது என் மகன் ஓடிவந்து "அம்மா வித்தியா" என கத்திக்கொண்டு மயக்கமுற்று வீழ்ந்தான். அதன் பின்னர் நானும் சுயநினைவின்றி போனேன். எம்முடன் வந்தவர்கள் தான் ஓடிச் சென்று வேறு ஆள்களை அழைத்து வந்தனர்.

நான் சுயநினைவுக்கு வந்து வித்தியாவின் சடலம் இருந்த இடத்திற்கு சுமார் 20அடி தூரத்தில் இருந்தே சடலத்தை பார்த்தேன். எனத் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

29.06.2017.

ஐந்தாவது சாட்சியும், சட்டமா அதிபரினால் நிபந்தனைகளுடன் கூடிய பொது மன்னிப்பு வழங்கப்பட்ட அரச தரப்புச் (கண் கண்ட) சாட்சியுமான உதயசூரியன் சுரேஷ் கரன் சாட்சியம் அளிக்கும் போது:

"கொலைசெய்யப்பட்ட வித்தியாவை எனக்குத் தெரியும். அவரது குடும்பத்தினரையும் எனக்கு நன்கு தெரியும். வித்தியா எவரையும் காதலித்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பெரியம்பி என அழைக்கப்படும் துஷாந்த் (6ஆவது எதிரியான சிவதேவன் துஷாந்த்) என்பவர் வித்தியாவைக் காதலிப்பதாக கூறினார்.

அதனால் நானும் பெரியம்பியும் வித்தியா பாடசாலை செல்லும் நேரம், பாடசாலையால் வீடு திரும்பும் நேரங்களில் தினமும் வித்தியாவின் பின்னால் பெரியம்பியின் மோட்டார் சைக்கிளில் சென்று வருவோம். அவ்வேளைகளில் வித்தியாவுடன் பெரியம்பி கதைக்க முற்படுவார் ஆனால் வித்தியா கதைக்க மாட்டார்.

பெரியம்பியும் நானும் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வித்தியாவின் பின்னால் மோட்டார் சைக்கிளில் சென்று வந்தோம். ஒரு நாள் தன்னுடன் கதைக்க வேண்டாம் எனவும் கூறி இருந்தார்.

கொலை செய்யப்படுவதற்கு ஒன்று ஒன்றரை மாதங்களுக்கு முன்பு, ஒருநாள் வித்தியா பெரியம்பிக்கு செருப்பால் எறிந்து பேசி இருந்தார்.

நாங்கள் புங்குடுதீவில் மாப்பிள்ளை என்பவர் வீட்டில் கள்ளுக் குடிப்போம், அங்கே ரவியிடம் வித்தியாவை தூக்கித் தர சொல்லி பெரியம்பி கேட்டான். அப்போது அந்த இடத்தில் நானும், (5ஆம் எதிரி) பெரியம்பி, (2ஆம்எதிரி)ரவி, (6ஆம் எதிரி) சந்திரஹாசன் மற்றும் (3ஆம் எதிரி) தவக்குமார் ஆகியோர் இருந்தோம்.

வித்தியாவைத் தூக்கித் தாறது என்றால் எனக்கு 20, 23 ஆயிரம் ரூபாய் பணம் தர வேண்டும் என ரவி பெரியம்பிக்கு கூறினான். அதற்கு பெரியம்பி தான் சம்பளம் எடுத்த உடனே பணத்தைத் தருகிறேன் எனக் கூறினான். அதன் படி ரவிக்கு பெரியம்பி பணம் கொடுத்தான்" என சுரேஷ்கரன் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

**மாப்பிள்ளையின் சாட்சியம்**

வழக்கின் மூன்றாவது சாட்சியமான மாப்பிள்ளை என்று அழைக்கப்படும் நடராஜா புவனேஸ்வரன் அன்றைய தினம் (29ஆம் திகதி) மாலை 4 மணியளவில் சாட்சியம் அளித்தார். அவர் தனது சாட்சியத்தில்;

"நான் சீவல் தொழில் செய்கிறவன். பெரியாம்பியும் சுரேஷ்கரன் ஆகிய இருவரும் வழமையாக என் வீட்டுக்கு வந்து கள்ளு வாங்கிக் குடிக்கிறவர்கள். ஒருநாள், தான் வித்தியாவைக் காதலிப்பதாகவும், அவரையேதிருமணம்செய்யப்போவதாகவும் பெரியாம்பி என்னிடம் கூறினார்.

சம்பவதினத்திற்கு முதல்நாள் 12ஆம்திகதி, வித்தியா பாடசாலை செல்லும் வழிக்கு பெரியாம்பியும், சந்திரஹாசனும் என்னை அழைத்துச் சென்றனர். அன்றைய தினம் வித்தியா வேறு ஒரு மாணவியுடன் வந்ததால் எதுவும் கதைக்கவில்லை.

மறுநாள் 13ஆம் திகதி (சம்பவதினத்தன்று) மீண்டும் வித்தியா பாடசாலை செல்லும் வழியில் ஆலடிச் சந்திக்கு அருகில் வித்தியாவுக்காகக் காத்திருந்தோம். வித்தியா வரும் வேளை என்னையும் சுரேஷ் கரனையும் அருகில் இருந்த பற்றைக்குள் ஒளிந்து இருக்குமாறு பெரியாம்பியும் சந்திரஹாசனும் கூறினார்கள். நாமும் பற்றைக்குள் மறைந்து இருந்தோம்.

அவ்வேளை அந்த இடத்திற்கு ரவியும், தவக்குமாரும் வந்திருந்தார்கள். அந்த நேரம் வித்தியா பாடசாலை சீருடையுடன் காலில் சப்பாத்துடன், சைக்கிளில் வந்து கொண்டு இருந்தார். அவருடைய சைக்கிள் முன் கூடைக்குள் குடை ஒன்றும் இருந்தது.

சைக்கிளில் வந்த வித்தியா அவர்களுக்கு அருகில் வந்ததும் சந்திரஹாசனும், பெரியாம்பியும் அவரை அவரை மறித்தனர். பின்னர் சந்திரஹாசன், பெரியாம்பி, ரவி, மற்றும் தவக்குமார் ஆகிய நால்வரும் வித்தியாவை பிடித்து இழுத்து சென்றனர். அப்போது வித்தியா கத்தினார். உடனே பெரியாம்பி வித்தியாவின் வாயைப் பொத்தினார். வித்தியாவின் மூக்குக் கண்ணாடியையும் பெரியாம்பியே கழட்டி எடுத்தான். பின்னர் நால்வருமாக வித்தியாவை பற்றைகள் ஊடாக பாழடைந்த வீட்டுக்குள் இழுத்துச் சென்றனர்.

பின்னர் வித்தியாவை வன்புணர்ந்தனர். முதலில் பெரியாம்பியும் (துசாந்த்) பிறகு சந்திரஹாசனும், தொடர்ந்து செந்தில் (துவக்குமார்) பிறகு ரவியும் (ஜெயக்குமார்) என மாறி மாறி வன்புணர்ந்தனர். அதனை பெரியாம்பியும் சந்திரஹாசனும் மாறி மாறி காணொலி எடுத்தனர். அவர்கள் பெரிய 'டச் மொடல்' போனிலதான் காணொலி எடுத்தனர். அந்த காணொலியை சுவிஸ்குமாருக்கு கொடுக்க வேண்டும். அவர் அதனை வெளிநாட்டுக்கு கொண்டு போகப் போகிறார் எனப் பேசிக் கொண்டார்கள்.

பின்னர் வித்தியா மயங்கிய நிலையில் அவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய (பாழடைந்த வீடு) இடத்தில் இருந்து கைத்தாங்கலாக நால்வரும் தூக்கி வந்து சுமார் 50மீற்றர் தூரத்தில் உள்ள அலரிமரம் ஒன்றில் வித்தியாவை கட்டினார்கள். அவரின் ஆடைகளை அவரின் உடலின் மீது போட்டார்கள். பின்னர் பாடசாலை சீருடையின் இடுப்பு பட்டியினால் கைகள் இரண்டையும் ஒன்றாக கழுத்துக்கு பின்னால் வைத்து கட்டினார்கள். பாடசாலைப் பையின் நாடாவால் ஒரு காலை இழுத்து மரத்துடன் கட்டினார்கள். சப்பாத்து நூல்களினாலும் கட்டினார்கள்.

இவ்வளவு சம்பவமும் ஒன்று, ஒன்றே கால்மணித்தியாலங்களுக்குள் நடைபெற்றன" என சாட்சியம் அளித்தார்.

**முஹமட் இப்ரான் சாட்சியம்**

30.06.2017.

ஆறாவது சாட்சியான முகமட் இப்ரான் சாட்சியம் அளிக்கையில்: "வவுனியா சிறைச்சாலையில் சுவிஸ் குமார் என்னைச் சந்தித்து, தொலைபேசியில் அழிக்கப்பட்ட தரவுகளை மீள எடுக்க முடியுமா? எனக் கேட்டார் நான் ஆம் என்றேன். மென்பொருளைப் பயன்படுத்தி அழிக்கப்பட்ட தரவுகளையும் எடுக்க முடியுமா? என திரும்பக் கேட்டார். அதற்கு நாம் ஆம் என்னால் முடியும் என்றேன்.

மறுநாள் சுவிஸ் குமாரை நான் தனியாகச் சந்தித்தபோது, பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வாவின் பலவீனம் என்ன எனக் கேட்டார். அதற்கு நான் அது தெரியாது. உங்களுக்கு அவரிடம் என்ன வேண்டும் என கேட்டேன். வித்தியா வழக்கில் நாங்கள் மூன்று சகோதரர்களும் அரச சாட்சியாக மாற வேண்டும் அதற்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வாவுடன் கதைத்து ஏற்பாடு செய்து தருமாறு சுவிஸ் குமார் கேட்டார்.

அவ்வாறு செய்தால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வாவுக்கு என்ன கொடுப்பீர்கள் எனக் கேட்டேன். 2 கோடி ரூபாய் பணம் கொடுக்க முடியும் என தெரிவித்தார்.

பின்னர் ஒரு நாள் "நான் சுவிஸ் நாட்டில் இருந்தேன். அங்குள்ள மாபியா குழு ஒன்று தெற்காசிய நாட்டு இளம் பெண் ஒருவரைக் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்வதனை காணொலி எடுத்து தருமாறு என்னுடன் ஒப்பந்தம் செய்திருந்தனர்.

நான் இலங்கையில் உள்ள ஒருவருடன் தொடர்பு கொண்டு அது பற்றிக் கூறினேன். 20 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளை ஒருவர் தேவை எனச் சொன்னேன். அவர் ஒரு பெண்ணின் ஒளிப்படத்தை எனக்கு அனுப்பி வைத்தார். அந்த பெண் ஓகே என்றேன்" என சுவிஸ் குமார் என்னிடம் கூறினார் நான் இலங்கையில் உள்ள எவருடன் தொடர்பு கொண்டீர் எனக் கேட்டதற்கு இங்கு எதிரி கூண்டில் ஆறாவது நபராக உள்ளவரை (சிவதேவன் துஷாந்தன்) சுவிஸ் குமார் எனக்குக் காட்டி இருந்தார்.



இதில் ஆறாவதாக உள்ள நபருடன் சேர்ந்து இலங்கையில் உள்ள ஏனையவர்கள் அதற்கு ஏற்பாடு செய்தனர். அதற்காக அந்தபெண்ணின் தாயாருடன் பெரிதொரு வழக்கில் தொடர்புடைய ஏனைய மூன்று பேரையும் தம்முடன் கூட்டுச் சேர்ந்தனர். என சுவிஸ் குமார் என்னிடம் கூறினார்.

வித்தியாவை வன்புணர்வு செய்வதை எடுத்த காணொலியை அலைபேசி ஊடாக சுவிஸ் குமாருக்கு அனுப்பியுள்ளார்கள். அவர் அதனை கூகிள் டிரைவ் மூலம் வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளார்.

**தனுராம் சாட்சியம்**

03.07.2017.

09ஆவது சாட்சியமான, மணிவண்ணன் தனுராம் சாட்சியம் அளிக்கையில், "நான் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கிறேன். நான் தினமும் வீட்டில் இருந்து சின்ன ஆலடிப் பகுதி (மாணவி படுகொலை செய்யப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள பகுதி) ஊடாகத் தான் பாடசாலைக்குச் செல்வேன்.

சம்பவ தினம் நானும் என்னுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்கும் சக மாணவனான தனுஜனும் துவிச்சக்கர வண்டியில் சென்றோம்.

செல்லும் போது சின்ன ஆலடிக்கு அருகில் தனுஜனின் செருப்பு கழன்று வீதியில் வீழ்ந்து விட்டது. நான் இறங்கிச் சென்று செருப்பை எடுத்து வரச் சென்றேன்.

அந்த நேரம் வீதி ஓரமாக அலரி மரங்கள் உள்ள பகுதியில் ரவிமாமா (இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார்) மஞ்சள் கலர் ரீ.சேர்ட்டுடன் நின்றார்" எனச் சாட்சியம் அளித்தார்.

**தனுஜன் சாட்சியம்**

அதனைத் தொடர்ந்து பத்தாவது சாட்சியான இலங்கேஸ்வரன் தனுஜனும் கிட்டத்தட்ட தனுராம் கூறியது போன்றே சாட்சி அளித்தார்.

**பாலசந்திரன் சாட்சியம்**

அதனை தொடர்ந்து 4 ஆவது சாட்சியான, பாலசிங்கம் பாலசந்திரன் சாட்சியம் அளிக்கையில், "நான் 13ஆம் திகதி காலை 8.47 மணியளவில் கடைக்குச் சென்ற போது வித்தியா கொலை நடந்த இடத்திற்கு அருகில், பூபால்சிங்கம் ஜெயக்குமார் மற்றும் பூபால சிங்கம் தவக்குமார் ஆகிய இருவரும் நின்று கொண்டு இருந்தனர்.

அதில் ரவி என்று அழைக்கப்படும் பூபால சிங்கம் ஜெயக்குமார் எனது தங்கையின் கணவன். மற்றையவரான பூபாலசிங்கம் தவக்குமார், ஜெயக்குமாரின் சகோதரன். மறுநாள் 14 ஆம் திகதி தான் வித்தியா இறந்த செய்தி எனக்குத் தெரியும். வித்தியா எனக்கு கிட்டத்து சொந்தமும் கூட. வித்தியாவின் உடல் மீட்கப்பட்ட இடத்திற்கு சுமார் 15 அடி தூரத்தில் தான் முதல் நாள் ஜெயக்குமார் மற்றும் தவக்குமார் ஆகியோரை கண்டேன்" என சாட்சியம் அளித்தார்.

**இலங்கேஸ்வரன் சாட்சியம்**

அதனைத் தொடர்ந்து வழக்கின் 07ஆவது சாட்சியமான ஞானேஸ்வரன் இலங்கேஸ்வரன் சாட்சியம் அளிக்கையில், "நான் வித்தியா வீட்டுக்கு அருகில் தான் வசிக்கிறேன். 14ஆம் திகதி காலை வித்தியாவைத் தேடி மற்றவர்களுடன் நானும் சென்றேன். திடீரென்று வித்தியாவின் அண்ணா ஐயோ வித்தியா வித்தியா என கத்தினான்.

அந்த இடத்துக்கு நான் சென்றேன். அப்போது வித்தியாவின் அம்மாவும் அங்கு வந்துவிட்டார். நான் சென்று ஊரில் உள்ளவர்களை அழைத்து வந்தேன்.

வித்தியாவை சம்பவம் இடம் பெற்ற தினத்துக்கு முதல்நாள் ஆலடிசந்தியில் கண்டேன். பஸ்ஸில் இருந்து இறங்கி வந்த வித்தியா அங்கு நிறுத்தியிருந்த தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றார்.

அந்த நேரம் கடைக்கு எதிரே வீதியின் மறுபுறத்தில், டொல்பீன் ரக வாகனத்தில், முன் ஆசனத்தில் (சாரதி ஆசனத்திற்கு அருகில்) 09 ஆம் எதிரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் இருந்தார். 04ஆம் எதிரியான மகாலிங்கம் சசிதரன், 05ஆம் எதிரியான தில்லைநாதன் சந்திரஹாசன் மற்றும் 08ஆம் எதிரியான கண்ணன் என அழைக்கப்படும் ஜெயதரன் கோகுலன் ஆகியோருடன் மேலும் இருவரும் வானத்தில் இருந்தனர். அவர்கள் வித்தியாவையே பார்த்துக்கொண்டு இருந்தனர்" என சாட்சியம் அளித்தார்.

**சட்ட மருத்துவ அதிகாரி உருத்திரபசுபதி மயூரதன் சாட்சியம்**

வழக்கின் 23 ஆவது சாட்சியமான சட்ட மருத்துவ அதிகாரி உருத்திர பசுபதி மயூரதன் சாட்சியமளிக்கையில்;

"சடலத்தை அவதானித்த போது, இரண்டு கைகளின் பெருவிரல்களும் ஒன்றாக சேர்த்து கட்டப்பட்டு தலையில் பின் பகுதியில் கட்டப்பட்டு இருந்தது. கால்கள் இரண்டும் 180 பாகைக்கும் அதிகமாக விரித்து கட்டப்பட்டு இருந்தன. கண்கள் வீங்கி இருந்தன. காதின் ஒரு பகுதி, மூக்கு போன்ற இடத்தில் இருந்து குருதிக் கசிவுகள் காணப்பட்டன. வாய்க்குள் உள்ளாடை திணிக்கப்பட்டு இருந்தது.

மார்பக பகுதியில் இரண்டு முடிகள் காணப்பட்டன அவற்றை தடயவியல் பிரிவினர் சேகரித்துக்கொண்டார்கள். பெண் உறுப்பில் இருந்து வடிந்த ஒட்டும் தன்மை உள்ள திரவத்தை சேகரித்துக் கொண்டேன்.

அதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு சடலத்தை எடுத்து வந்தோம். அன்றைய தினம் (14 ஆம் திகதி) மாலை 5 மணியளவில் பிரேத பரிசோதனையை மேற்கொண்டேன்.

சடலத்தில் 8 காயங்களை அவதானித்தேன். எனத் தெரிவித்தார்.

# கலைக்கப்படுகிறது ஜப்பான் நாடாளுமன்றம்



டோக்கியோ, செப். 27
ஜப்பான் நாட்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து உத்தரவிடவுள்ளதாக அந்த நாட்டின் தலைமை அம்சர் சின்சோ அபே நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

அமெரிக்காவை மிரட்டுவதற்காக ஜப்பான் நாட்டின் குவாம் தீவில் உள்ள கடற்படைத் தளத்தை குறிவைத்து வடகொரியா ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

வடகொரியா மீது உலக நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது. வடகொரியாவுக்கு எதிரான இராணுவ நகர்வுகளை ஜப்பான் வெளிப்படையாகவே ஆரம்பித்துள்ளது. ஜப்பானின் இந்த நகர்வு தொடர்பில் நடத்தப்பட்ட மாதிரி வாக்கெடுப்பில் சின்சோ அபேக்கு ஆதரவாக 44 சதவீதமானவர்கள் வாக்களித்தனர். வெறும் 8 சதவீதமானவர்கள் மட்டுமே அபேக்கு எதிராக வாக்களித்தனர். இவ்வாறு தனக்கு பெரும் ஆதரவு இருக்கின்ற போதே நாடாளுமன்றத் தேர்தலை நடத்திவிடத் திட்டமிட்டுள்ளார் அபே. பெரும்பாலும் நாளையதினம் ஜப்பான் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

> “மாதிரி வாக்கெடுப்பில் சின்சோ அபேக்கு ஆதரவாக 44 சதவீதமானவர்கள் வாக்களித்தனர். வெறும் 8 சதவீதமானவர்கள் மட்டுமே அபேக்கு எதிராக வாக்களித்தனர்.

# வடகொரியா மீது போர் அதிபர் ட்ரம்ப் திட்டம்

## பதறுகிறார் வடகொரிய அயலுறவு அமைச்சர்




வொஷிங்டன், செப். 27
“எங்கள் நாட்டின் மீது போர் தொடுக்க அமெரிக்க அதிபர் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்” என்று வடகொரிய அயலுறவுத் துறை அமைச்சர் ரி யாங் ஹூ தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வடகொரிய அயலுறவுத்துறை அமைச்சர், “வடகொரியா மீது போர் தொடுக்க டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். எங்களுக்கு எதிரான போரை முதலில் அமெரிக்காவே அறிவித்தது என்பதை ஒட்டுமொத்த உலக நாடுகளும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். எங்கள் நாட்டிற்கு எதிராக அமெரிக்கா போரை அறிவித்துள்ள நிலையில், எதிர் நடவடிக்கை எடுக்க எங்களுக்கு உரிமை உள்ளது. வடகொரியாவின் வான் எல்லையில் பறக்கும் அமெரிக்காவின் போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தவும் எங்களுக்கு உரிமைஉள்ளது”என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப், “வடகொரியா தொடர்ந்து அணுவாயுச் சோதனைகளை நடத்தி வருகிறது. இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் வடகொரியா மீது போர் தொடுத்து அதை முற்றாக அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை” என ட்ரம்ப் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஈராக்கில் 42 பேருக்கு தூக்கு நிறைவேற்றம்



பக்தாத், செப். 27
ஈராக் நாட்டில் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தியவர்கள், கார்க்குண்டுத்தாக்குதல்களை நடத்தியவர்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ்சன்னி கிளர்ச்சிக் குழுக்களைச் சேர்ந்த 42 பேர் தூக்கிலிட்டு கொல்லப்பட்டனர்

கிளர்ச்சிக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் ஈராக் தற்போது அதிகளவில் ஆர்வம் காட்டி வருகிறது. கடந்த ஜூன் மாதம் ஒரே நாளில் 14 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் நஸ்ஸிரிய்யா சிறையில் நேற்றுமுன்தினம் மட்டும் 42 பேர் தூக்கிலிட்டு கொல்லப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம)



# வடகொரியாவின் கருத்துக்கள் நகைப்புக்குரியன

## அமெ. பதிலடி

வொஷிங்டன், செப். 27
'வடகொரியா மீது அமெரிக்கா போர் தொடுக்கவுள்ளது என்று வடகொரிய அயலுறவுத் துறை அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் நகைப்புக்கு உரியன' என்று வெள்ளை மாளிகை அறிவித்தது. இந்த விடயம் தொடர்பில் அமெரிக்காவின் செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், 'வடகொரியா மீது போர் தொடுப்பது தொடர்பில் நாங்கள் இன்னமும் முடிவு செய்யவில்லை.


இந்த நிலையில் வடகொரிய அயலுறவுத் துறை அமைச்சர் யாங், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தங்கள் மீது போர் தொடுக்க முடிவெடுத்துள்ளார் என்று தெரிவிப்பது நகைப்புக்கு உரியது” என்று தெரிவித்தார். (ம)

# மெக்சிக்கோ நிலநடுக்கத்தில் உயிரிழந்த சிறுவனுக்கு ரொனால்டோ இரங்கல்

மெக்சிக்கன் சிற்றி, செப். 27
மெக்சிக்கோவின் தலைநகர் மெக்சிக்கன் சிற்றியில் கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்த தனது ரசிகனான சிறுவனுக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார் ரொனால்டோ.

7.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தில் சுமார் 300 பேர் உயிரிழந்தனர். ஒரு பாடசாலை இடிந்து விழுந்ததில் சுமார் 20 பேர் உயிரிழந்தனர். இதில் சான்டியாகோ பிளோர்ஸ் மோரா என்ற சிறுவனும் ஒருவன். இந்தச் சிறுவன் ரொனால்டோவின் தீவிர ரசிகன்.

இதுகுறித்து சான்டியாகோ பிளோர்ஸின் தாயார், ரொனால்டோவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் “எனது மகன் உங்களுடைய தீவிரமான ரசிகனாக இருந்தான். எங்கேயும் உங்களுடைய பெயரைத்தான் எழுதுவான். இறப்பதற்கு முன்பாகப் பள்ளிக்கூட நோட்டில் சான்டியாகோ




பிளோர்ஸ் மோரா கிறிஸ்டியானோ ரொனால்டோ என்று எழுதியிருந்தான். எனது மகனுடைய கனவே உங்களைச் சந்திக்க வேண்டும் என்பதுதான். உங்களைப் பார்க்க வரவேண்டிய எனது மகன், தற்போது கடவுளோடு சென்றுவிட்டான். நாங்கள் பண உதவியோ, புகழோ அல்லது கவனத்தை ஏற்படுத்தவோ விரும்பவில்லை. ஒரே விஷயம், கிறிஸ்டியானோ ரொனால்டோ எனது மகன் குறித்து அறிய வேண்டும் என்பதுதான். ஏனென்றால், துரதிருஷ்டவசமாக அவனது கனவு நிறைவேறவில்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதம் சமூக வலைத்தளங்கள் மூலம் ரொனால்டோவின் கவனத்துக்குச் சென்றது. இதனால் மிகவும் வருத்தம் அடைந்த ரொனால்டோ, ரியல் மட்ரிட் அணிக்காக அணிந்து விளையாடும் தனது ஜெர்சியில் 'பாசமிகு எனது முதல்தர ரசிகன் சான்டியாகோவிற்காக' என்று எழுதி அதில் கையொப்பமிட்டுள்ளார். அந்த ஜெர்சியை தனக்கு கடிதம் எழுதிய தாயாருக்கு அனுப்பியும் வைத்துள்ளார். (ம)



சீனாவின் சாங்காய் நகரில் 'வர்ணப் பூச்சுத் திருவிழா' நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் பங்கெடுத்தனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது. (ம)

# வடகொரியாவில் நிலநடுக்கம்

## அணுவாயுதச் சோதனை எனச் சந்தேகம்




பியாங்யாங், செப். 27

வடகொரியாவில் நேற்றுமுன் தினம் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. 3.4. ரிச்டர் அளவில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அணுவாயுதச் சோதனை அல்லது ஐதரசன் குண்டுச் சோதனையால் இந்த நில அதிர்வு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி தொடர்ந்து ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது வடகொரியா. இந்த மாதத்தின் மத்திய பகுதியில் அந்த நாடு, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையையும், அணுகுண்டை விடவும் சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டுச் சோதனையையும் நடத்தியது.

இந்தச் சோதனையின் போது 6.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டது என்று தென்கொரிய அரசு செய்தி வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் மீண்டும் ஏற்பட்டுள்ள இந்த நில அதிர்வானது, வடகொரியா நடத்திய ஏவுகணைச் சோதனை அல்லது ஐதரசன் குண்டுச் சோதனையின் விளைவாகவும் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)




# ரக்கா பெருநகரில் கடுமையான போர்



டமஸ்கஸ், செப். 27

ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் பிடியில் உள்ள சிரியாவின் ரக்கா நகரின் பெரும் பகுதி, அதாவது 90 சத வீதமான பகுதி சிரிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், ஏனைய பகுதிக்காக அங்கு கடும் போர் நடைபெற்று வருகிறது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக், சிரிய நாடுகளின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து இந்த வருடத்தின் மத்திய பகுதியில் மீண்டது ஈராக். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம் பெரிய அளவில் உள்ள ஒரேநாடு தற்போது சிரியாவே. சிரியாவின் ரக்கா நகரம் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே தொடர்ந்தும் இருந்து வருகிறது. ஈராக்கின் மோசூல் கைப்பற்றப்பட்ட பின்னர் ரக்காநகரமே ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் தலைநகராக உள்ளது.

யூப்ரடிஸ் நதியின் வடக்குப் பகுதியில் இந்தப் போர் நடைபெற்று வருகிறது. சுமார் ஆயிரம் ஆயுததாரிகளே அங்கு நிலைகொண்டுள்ளனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது சுமார் மூன்றாயிரம் ஆயுததாரிகள் அங்குநிலைகொண்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பப்புவாவில் நேற்று நிலநடுக்கம்

பப்புவா நியூ கினியாத் தீவில் நேற்று அதிகாலை 6.0 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

பிரிட்டன் நாட்டுக்குச் சொந்தமான பி.எம்.ஜி. தீவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்தநிலநடுக்கம் கடலுக்கு அடியில் 5.7 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது என்று அமெரிக்க புவிசார்ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை. தீவுநாடான பப்புவா நியூ கினியாவில் கடந்த 1998 ஆம் ஆண்டு கடலுக்கு அடியில் அடுத்தடுத்து ஏற்பட்ட நில அதிர்வில் 2 ஆயிரத்து 100 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)






புதன் பொய்கை
27 செப்ரெம்பர் 2017 புதன்கிழமை

மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி



பக். 24

பழனித்துரை தர்மகுமாரன்

# தமிழ்

## இனத்துவம் காக்கும் உயிர்க் காற்று

*"உலக மயமாதலின் துரிதங்களிடையே இயந்திரத் தனமாக இயக்கமுறும் காலகட்டத்தில் இன்றைய தேவைகருதி எல்லா மொழிகளையும் அறிந்திருக்க வேண்டும் என்பது நியாயபூர்வமாக இருந்தாலும் தாய்மொழியில் புலமை வாய்ந்தவர்களாகவும்,தமிழைப் பிழையின்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் தமிழ்ப் பாடல்களைப் பாடுவதற்கும் முன்வர வேண்டும்."*

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்னும் நிலை மாற்றங்கண்டுள்ளது. தமிழைத் தமிழாக பேச முடியாத, தலை நிமிர்ந்து நிற்கமுடியாத தளம்பல் நிலையுடைய இனமாக தமிழினம் மாற்றங்கள் பலதை தன்வயப்படுத்தி வருகிறது.

**வரலாற்றின் படிமம்**

உண்மையில் தமிழ் குடிமக்களது பாட்டன்,முப்பாட்டன் கரிகாலச்சோழன் உலகம் முழுமையுமாகப் புலிக்கொடிதனை அசைவித்தான்.தமிழ் குடிகளை ஒரே இடத்தில் அமர்த்தினான். அதன் வழியே தமிழினம் ஒரு தனித்துவம் மிக்க இனமாகக் காணப்பட்டது என்பதும் வரலாற்று உண்மை.

தவிர வரலாற்றில் இன்னமும் பதிவாகாத காரண காரியமாக விளங்குவது தேசிய தலைவர் உலக முழுமையுமாக தமிழ்க் குடிகளையும், புலிக் கொடிகளையும் நிறுவிய போதும் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் புலிக் கொடியும் இல்லை தமிழ்க்குடிகளும் ஒற்றுமையாக இல்லை.

இதன் காரணம் கொண்டு தமிழினத்தின் இருப்புக் கேள்விக்குறியாவதுடன் தமிழர்தம் வரலாறும் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது. பிரான்சியப் புரட்சியாளன் நெப்போலியன் சமத்துவம்,சகோதரத்துவம், சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்தி புரட்சியில் ஈடுபட்டான்.

தமிழினத்தின் தேசியத் தலைவன் சுயநிர்ணயம், மரபுவழித்தாயகம், அடிப்படை அபிலாசைகளில் சமத்துவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உரிமைப் போர் செய்தான். ஆக, தமிழினத்தின் எதிர்காலம் தமிழ்மொழியில் தங்கியுள்ளது. அதன் ஆளுமையும் ஆளுகையும் முதன்மை பெறுகிறது. தமிழை தமிழாகப் பேசவும், எழுதி வாசித்துப் பாதுகாக்கவும் காத்திரமான செயல்நிலைகள் வலுப்பெற வேண்டும். குறிப்பாகத் தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள், ஆர்வலர்கள், அரசியல் தலைமைகள் அது குறித்துக் கரிசனை கொள்ள வேண்டும். செயல் வலுநிலை பெற வேண்டும்.




**தமிழ்வாழப் பணி செய்தல்**

தமிழ்மொழி இனத்துவம் காக்கும் உயிர்காற்று. இதனைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு தமிழ் மொழி விருத்தியை சரிவர ஊட்டம் செய்ய வேண்டும்.

மொழி ஆளுகையை சரியான முறையில் வழு இன்றி இலக்கண முறைப்படி தெளிவு படுத்திக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆரம்பப்பிரிவில் தாய் மொழிக் கற்றலுக்கு முதன்மை இடம் கொடுக்க வேண்டும்.பன்னாட்டு மொழியைக் கற்பித்து பின்னர் தமிழைக் கற்பிக்கும் செயற்பாடுகளை இடைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழர்கள், மண்தோன்றாக் கல்தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய மூத்த குடிகள் என்ற வகையில் தமிழ்மொழி பழமைவாய்ந்த மொழியாகும்.எம் குல மொழியும் தமிழ் ஆன்றோரும்

"பாரின் பரப்பைப் போல எங்கும் முழங்கும் செம்மொழியாம் எம் குல மொழி தமிழ்" என்னும் கருத்துக்கு அமைவாக உலக மொழிகளில் முதல் ஐந்து இடங்களுக்குள் தமிழ் மொழி இடம்பிடித்திருப்பது தமிழர்களாகிய எமக்குக் கிடைத்த பெருமையே.

தமிழை வளர்ப்பதில் பெரும் பங்காற்றிய தமிழ் ஆன்றோர்கள் பலர் எம்மிடையே உளர்.

அவர்களுள் பாரதி, பாரதிதாசன் போன்றவர்கள் முதன்மை நிலை பெறுகின்றனர்.

"எங்கள் வளமும் எங்கள் வாழ்வும் மங்கா புகழ் என்று சங்கே முழங்கு" எனத் தமிழினத்தின் வாழ்வையும் வளத்தையும் மங்காத புகழ் என வர்ணித்தவர் பாரதிதாசன். அதனை நாம் ஒரு போதும் அழிவு நிலைக்கு இட்டுச் செல்லக்கூடாது.

"பொங்கு தமிழுக்கு இன்னல் நிகழ்ந்தால் சங்காரம் செய்வேன் எனச் சங்கே முழங்கு"

என்று வார்த்தை மொழிந்த பாரதிதாசனின் உணர்ச்சி மிக்க வரிகள் தற்காலத்துக்குத் தேவையானதே. ஏனெனில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகமும்,நவநாகரிக மோகமும் தொழிற்றுறைகளில் பல மாற்றங்களைத் தந்துள்ளன. அந்நிய மொழிகளில் ஆர்வத்தையும் ஆதிக்கத்தையும் செலுத்துகின்றன.இது தவிர்க்க முடியாத உண்மையாகும்.

இருந்த போதும் தமிழர்களாகிய நாம் தமிழினை நன்றாகக் கற்றுத் தெளிவு கொள்வதுடன் உலக வளர்ச்சியின் வேகத்திற்கு ஏற்ப எங்களை வளம்படுத்திக்கொள்ள வேண்டும்.

எமதான மொழி மரபை கட்டிக்காத்துவளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தார் தன்னை நன்றாக்க தமிழில்"

என்னும் தனிநாயகம் அடிகளாரின் கருத்துக்கு இணங்க எமது படைப்பு எவ்வளவு புனிதமானதோ அதேபோல எமதுமொழியின் படைப்பும்,அது கொண்டுள்ள ஆத்மார்த்தமும் புனிதமானது என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

**மதங்களின் மாண்பியமும் கல்விக் கூடங்களும்**

மதங்களின் மாண்பியத்தின் ஊடாகத் தமிழை நன்றாக வளர்க்கமுடியும். அதனை நாம் பின்பற்றிக் கொள்ள வேண்டும். அவற்றை முன்னிறுத்தி இன்றைய தலைமுறையினரை தமிழ் மொழியறிவில் கற்றுத்தேர்ந்தவர்களாக உருவாக்க வேண்டும். அதாவது இலக்கணத்தில் தெளிவும் இலக்கியத்தில் தேறலும் பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்குக் களமாகவும் தளமாகவும் ஆரம்பம் தர வேண்டியவை பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களுமே.

'என் உயிர் உருக்கியேனும்
என் தமிழ் அன்னைக்கு ஒளி கொடுப்பேன்"

என்பதற்கு இணங்க ஒவ்வொருவரும் செயலாற்ற வேண்டும்.எழுத்தாளர்களையும்,பேச்சாளர்களையும் வளர்க்க வேண்டும். அவர்களை தமிழ் மொழியாளுகையால் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

சிறுவயதிலேயே எழுத்தறிவினையும்,வாசிப்புத் திறனையும் வளர்க்க வேண்டும். அதற்கான தேடலை கண்டறியவும், ஊக்கப்படுத்தவும், அது சார்ந்த செயற்பாடுகளை ஈடுபாட்டுடன் மேற்கொள்ளவும் பாடசாலை ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.

**தாய்மொழியில் புலமை வேண்டும்**

உலக மயமாதலின் துரிதங்களிடையே இயந்திரத் தனமாக இயக்கமுறும் காலகட்டத்தில் இன்றைய தேவைகருதி எல்லா மொழிகளையும் அறிந்திருக்க வேண்டும் என்பது நியாயபூர்வமாக இருந்தாலும் தாய்மொழியில் புலமை வாய்ந்தவர்களாகவும்,தமிழைப் பிழையின்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் தமிழ் பாடல்களைப் பாடுவதற்கும் முன்வர வேண்டும்.

இன்று தமிழ் பாடத்துறை சார்ந்த ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதுடன் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் ஆசிரியர்கள் தமிழ் புலமை குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.





வெற்றிகரமாக வீசிய
மலைத் தென்றல் பக். 23





இசைக்கு வயது இல்லை பக். 20




இதனால் க.பொ.த சாதாரண தர, உயர்தர மாணவர்களின் தமிழ் மொழிக் கல்வி அடைவு மட்டங்கள் வீழ்ச்சி கண்டுள்ளனர். அத்து டன் வடமாகாணத்தின் கல்வி நிலை வீழ்ச்சி கண்டு வருகின்றது.

**என்றும் தமிழ் வளர்க**

கலையாவும் தமிழ் மொழியால் விழைந்தோங்குக" என்பது போல தமிழரின் பண்பாட்டு விழு மியங்க ளில் கலை கலாச்சாரம், பண்பாடு, கல்வி, விளையாட்டு, நாகரிகம் என் பன முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றை வளர்த்தெடுப்பதன் மூலம் தமிழையும் பாதுகாக்க முடியும். ஏனெனில் யூத இனம் அடிமைக ளாக இருக்கும் போது தமது கலை, கலாசாரம், பண்பாடு, கல்வி, மொழி விளையாட்டு, நாகரிகம் என்ப வற்றைப் பாதுகாத்துப் பேணி வந்த னர். அதன் தார்ப்பரியம் கொண்டு இன்று அந்த இனம் வளர்ச்சி கண் டும் எழுச்சி கொண்டும் நிமிர்ந்து நிற்கின்றது.

**தாய் மொழியைப் பேணிப் பாதுகாத்தல்**

இந்த நிலையிலே தமிழினமும் பல் வேறுபட்ட அடக்குமுறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கு உட்பட்டுள் ளது. 'தமிழுக்கு அமுது என்ற பெயர் அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

எனவே தமிழர்களாகிய நாம் தமிழை அழியாது பாதுகாப்பதுடன் அதன் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதாவது மொழியின் பெருமைபற்றி பேசிக் கொண்டிருக்காது இன்றைய நிலை எப்படி இருக்கிறது என்பதனை யும், எதிர்காலம் என்பது எப்படி இருக்கப் போகின்றது என்பதையும் ஆய்வு செய்து கொள்ள வேண்டும். அதன் அடிப்படையிலான மொழி விருத்தியை யும், மொழிப் பாதுகாப் பையும் கரிசனையோடு மேற் கொள்ள வேண்டும்.

'பிறப்பு அன்னையால்
சிறப்பு கல்வியால்
பெருமை தமிழன் என்பதால்...!"







இலங்கையின், முன்னணி மும்மொழி வெளி யீட்டா ளர்களான கொடகே நிறுவ னத்தினரின் வருடாந்த தேசிய சாகித்திய விருது விழா இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த 14ஆம் திகதி இடம் பெற்றது. இந்த விழாவில் பண்டிதா சிறி திலகசிறி (சிங்க ளம்), எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் (தமிழ்), பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க (ஆங்கிலம்) ஆகியோருக்கு வாழ் நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. கடந்த ஆண்டு இதே விழாவில் சிறந்த ஆங்கில நாவல் விருதை சாந்தன் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.





அரிச்சந்திர மயானகாண்ட இசைநாடகம், சத்தியத்தை உரைத்தது. குழுநடனம், புத்துணர்வை அளித்தது. மொத்தத்தில் கலைச்சங்கமம், இன்பத்தை மனதெங்கும் தெளித்தது.







# சிறப்புடன் இடம்பெற்ற பண்பாட்டு பெருவிழா

எஸ்.மல்லிகா

பண்பட்ட இனத்தின் வாழ்வியல் கோலங்களை அழகுற எடுத்தியம்பி நிற்பது பண்பாடு எனப்படும். மொழி, உணவுப் பழக்கவழக்கம், கலை, நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களை இது தன்னுள் உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில், எமது அடையாளத்தையும் கலாசாரத்தையும் அடுத்த சந்ததிக்குக் கையளிக்கும் கைங்கரியத்தைப் பொறுப்புடன் செய்துவரும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா பார்வையாளர்களின் கண்களுக்கும் செவிகளுக்கும் நல்விருந்தாய் அமைந்தது.

புளியங்கூடல் மகாமாரி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில், அமரர் ஆ.செல்லப்பாசாமி அரங்கில், மனதுக்கு மகிழ்வளிக்கும் காலைப்பொழுதில் இந்தப் பெருவிழா இடம்பெற்றது. பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்க ளாக வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி செ.வனஜா மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரித்த ஏ.பி. ஜெயசுந்தர ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன், மதிப்புறு விருந்தினர்கள் பலரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

புளியங்கூடல் மகாமாரியம்பாள் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ கைலாசவிஜய் குருக்கள் மற்றும் நாரந்தனை பங்குத் தந்தை வண. பிதா சிவப்பிரகாசம் ம.ப. ஆனந்தகுமார் ஆசியுரைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பெருவிழா, பார்வையாளர்களுக்குப் பரவசத்தை ஊட்டியது. பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி காசிநாதன் நிருபா, விருந்தினர்கள் மற்றும் சபையோரை வாயார வரவேற்றார்.

## கலை நிகழ்வுகள்

கண்களுக்குள் ததும்பி நின்று மனதுக்கும் செவிகளுக்கும் மகிழ்வளிக்க வல்லன கலைகள். அந்தவகையில், எமது பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வரவேற்பு நடனம் உள்ளடங்கலான பல்சுவை நிகழ்வுகள் அரங்கை அலங்கரித்தன. கிராமியப் பாடல்கள், மங்கிச் செல்லும் எமது பண்பாட்டைப் பொங்கிப் பிரவாகிக்க வைத்தன. விருந்தினர் உரைகள், மனப்பாங்கில் மாற்றங்களை விதைத்தன. வீணைக்கச்சேரி, அரங்கில் நாதமழை பொழிந்தது. வில்லுப்பாட்டு, விழிகளில் தேனாய் நிறைந்தது. சிவதாண்டவம், விறுவிறுப்பாய் இருந்தது. நாதலய சங்கமம், மகிழ்வை இறைத்தது. அரிச்சந்திர மயானகாண்ட இசைநாடகம், சத்தியத்தை உரைத்தது. குழு நடனம், புத்துணர்வை அளித்தது. மொத்தத்தில் கலைச்சங்கமம், இன்பத்தை மனதெங்கும் தெளித்தது.

## கலைஞர் கௌரவிப்பு

கலைக்குத் தொண்டு செய்வோர் அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு இசை, நடனம், ஓவியம், சிற்பம், நாட்டுக்கூத்து, சமூக நாடகம் முதலான துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு கலை விழுது விருது மற்றும் கலை முகிழ் விருது ஆகியன வழங்கப்பட்டன. இதில் இளங்கலைஞர்கள் அநேகமானோர் கௌரவிக்கப்பட்டனர்.

விருந்தினர்களின் உரைச்சாரமாக, எமது கலைகள் வளர்க்கப்பட வேண்டும். கலைச்சேவை செய்வோர் கௌரவிக்கப்பட வேண்டும் என்பன அமைந்திருந்தன. அதற்கமைவாக, அத்தனை கலைஞர்களும் அரங்கத்தில் கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் கலைச்சேவை விருந்தினர்களால் பாராட்டப்பட்டது.

## பண்பாட்டுச் சின்னங்கள்


யாழ்ப்பாணம் என்றாலே நினைவில் ஓடி வருவது, பனைமரம்தான். தனது அனைத்துப் பாகங்களையும் மனிதர்களுக்கு அள்ளி அள்ளி வழங்குவதனால் பனைமரம் பூலோக கற்பகதரு என்று சிறப்பிக்கப்படுகிறது. பனைமரம் அளிக்கும் பொருள்களில் கழித்துவிடக்கூடியது என்று ஒன்றும் இல்லை. பனை ஓலை, விறகு, நுங்கு, பனம்பழம் என அத்தனையும் பனைமரம் ஈனும் முத்தான பயனுறு செல்வங்கள். இந்தச் செல்வங்களில் ஒன்றான ஓலைச்சார்வில் கண்கவர் பன்னங்கள் பின்னலாம். அதன் மூலம் செல்வங்கள் ஈட்டலாம். இதில் ஒன்றுதான் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டி பரிமாறும் தட்டு. இந்தத் தட்டில் வைத்து விருந்தி னர்களுக்குச் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. அவர்களுக்கு அளிக்கப்பட்ட நினைவுப் பரிசில்கள் கூட எமது மண்ணின் வளம் சார்ந்த பொருட்கள் என்பது இங்கு சுட்டத்தக்கது. பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வைப் பார்வையாளர்களுக்கு அறிவிக்கும் பதாகையாக பனையோலையால் பின்னப்பட்ட பாய் பயன்படுத்தப்பட்டமை மற்றொரு சிறப்பம்சம். இந்த ஓலைப் பாய்க்கு வண்ணப்பூச்சு பூசப்பட்டு, அழகு தமிழில் "பண்பாட்டுப் பெருவிழா" குறித்த செய்தி எழுதப்பட்டிருந்தது. இது விருந்தினர்கள் மற்றும் பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்தது.


கொடிய நச்சுத்தன்மையை உடைய பொலித்தீன் பை மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திகள் அரசினால் தடைசெய்யப்பட்டுவருகிறது. அதற்கு மாற்றீடான பொருள்களாக பனையோலையால் பின்னப்பட்ட பைகள் மற்றும் காகிதப் பைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இது குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு அளிக்கும் முகமாக இந்தப் பனையோலைப் பதாகை அமைந்திருந்தது.

நிகழ்வின் ஆரம்பம் முதல் முடிவுவரை அனைவரது கண்களுக்கும் செவிகளுக்கும் நல்விருந்தளித்த பண்பாட்டுப் பெருவிழா, எங்கள் அடையாளத்தையும் வேரையும் அடுத்த சந்ததிக்குக் கைகயளிக்கும் சிறப்புறு நிகழ்வாக அமைந்திருந்தது.



# இசைக்கு வயதில்லை





■ க.ஜெகதீஸ்வரன்

2017 செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை. அல்பேட்டன் என்ற இடத்திலுள்ள ஒரு பாடசாலை மண்டபம். வளர்ந்துவரும் கலைஞர்கள் இருவரின் கச்சேரி என்று அறிந்தேன் போயிருந்தேன். வீணை பாட்டு என்று ஒன்றன் பின்னர் ஒன்றாக இரண்டு இசை விருந்துகள். 'வீணாலயா என்ற பெயரில் வீணை ஆசிரியர் திருமதி சிவதாரிணி சகாதேவன் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

கச்சேரி ஆரம்பமாகியது. விஷ்ணுஜா நித்தியானந்தா என்ற பெண் வீணையை மீட்ட ஆரம்பித்தார். ஶ்ரீவாதாபி கணபதியே என்ற கீர்த்தனை, சஹானா இராகத்தில் அமைந்த பாபநாசம் சிவனின் ஆக்கம். இராகத்தைப் போல விஷ்ணுஜாவின் வீணையும் குழைந்தது.

தொடர்ந்து தேவாதி தேவ, சுநாத விநோதினி, முத்துஸ்வாமி தீட்சிதரின் அகிலாண்டேஸ்வரி, த்விஜாவந்தி, கர்ணரஞ்சனியில் தீனசரண்யனே ஆகிய கீர்த்தனைகளை வாசித்தார் விஷ்ணுஜா. கல்யாணி இராகத்தை அடுத்து ஆலாபனை செய்தார். அளவான, ஆசறுதியான, ஆரவாரமற்ற வாசிப்பு.

தொடர்ந்து ஏதாவுனரா என்ற தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனை, கற்பனாஸ்வரம் வாசித்து தனியாவர்த்தனத்துக்கு இடம் கொடுத்தார். பின்னர், ஒரு பஜனை, நளினகாந்தியில் தில்லானா என சுமார் இரண்டுமணி நேரம் ரசிகர்களைக் கட்டிப்போட்டது. அநுபவமும் அறிவும் பெருக, இன்னும் வளர்ந்து வருவார் என்ற எம் எதிர்பார்ப்பு வீணாகாது என்று நம்பலாம்.

இந்தக் கச்சேரிக்கு மிருதங்கம் அபிராம், கடம் பாஸ்கரன், மோர்சிங் செந்தூரன். இவர்கள் மூவரும் வீணைக் கலைஞரைப் போலவே இளந்தலைமுறைக் கலைஞர்கள். அபிராமின் மிருதங்கம் கேட்பதற்கு மிகவும் சுகமாக இருந்தது. வீணை வாசிக்கும்போது எப்படி வாசிக்கவேண்டும் என்ற இலக்கணத்தை நன்றே தெரிந்து வைத்திருக்கிறார். பாஸ்கரன் மிரு தங்கத்தை அநுசரித்து பின்னால் வாசித்துக்கொண்டே வந்தார். மோர்சிங் வாசித்த செந்தூரனும் எங்கே வாசிக்கவேண்டும், எங்கே வாசிக்கக்கூடாது என்பதைத் தெரிந்து வாசித்தார். மூவருமே வீணைக்கு மிக அழகாக அநுசரித்து வாசித்தமை மேலும் மெருகூட்டியது.

சிறிய இடைவேளைக்குப் பின்னர் அகிலேஷ் சிறிகுமாரின் பாட்டுக் கச்சேரி ஆரம்பமானது. செந்தூரன் மிருதங்கம், அபிராம் கஞ்சிரா, பாஸ்கரன் கடம். சிறிரஞ்சனியில் கஜவதனாவுடன் கச்சேரி ஆரம்பமாகியது. கானமூர்த்தி இராகத்தில் கானமூர்த்தே அடுத்து வந்தது. ஆபோகியை சிறிது ஆலாபனை செய்துவிட்டு 'சபாபதிக்கு வேறு தெய்வம்' என்ற கீர்த்தனையைப் பாடினார் அகிலேஷ். அதைத் தொடர்ந்து பிந்துமாலினியில் எந்த முத்தோ பாடினார். ஆச்சரியம் ஒன்று அதன்பின்னர் காத்திருந்தது. சூர்யா என்ற இராகத்தை இராகம் தானம் பல்லவிக்கு தெரிவுசெய்திருந்தார் அகிலேஷ். பாடுமுன் அவர் செய்த அறிவிப்பு சபையில் இருந்தோரை பிரமிக்கச் செய்தது. 'சென்றவாரம் இதே மண்டபத்தில் ஒரு கச்சேரி கேட்க வந்திருந்தேன். கடம் கார்த்திக் அவர்கள் சல்லாபம் என்ற இராகத்தில் ஒரு உருப்படி அமைத்து வழங்கினார்கள். அதுதான் என்னை இந்த இராகம் பாட உந்தியது. சல்லாபமும் சூரியாவும் ஒரே இராகந்தான். ஹிந்தோள இராகத்திலே உள்ள காந்தாரத்தை அந்தர காந்தாரமாக்கினால் இந்த இராகம் வரும். ஒரு வாரம் கிடைத்த அவகாசத்தில் இதை நான் கற்றுக் கொண்டேன்' என்று கூறி அந்த இராகத்தை ஆலாபனை செய்தார் அகிலேஷ். தொடர்ந்து, நீ ராணி, தாரிணி, சிவதாரிணி, லய, ஆலய, வீணாலய என்ற பல்லவியைப் பாடி அசத்தினார்.

லண்டனில் பிறந்து வளர்ந்து இசை கற்றுவரும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கவேண்டும். அவர்களை வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த நிகழ்ச்சியை ஒழுங்குசெய்த திருமதி சிவதாரிணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தனது முன்னுரையில், "பல அரங்கேற்றங்கள் நடக்கின்றன. பின்னர் அவர்கள் காணாமற் போய்விடுகின்றார்கள். இசையைக்கேட்கும் சந்தர்ப்பமும் தாமே கச்சேரி செய்யும் சந்தர்ப்பமும் இல்லாமையாலேயே அவர்கள் காணாமற்போகிறார்கள். அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதுதான் இந்த முயற்சி" என்று அவர் குறிப்பிட்டது முற்றிலும் உண்மை. அவரின் சேவைக்கு நாமும் உறுதுணையாய் இருப்போம். இசை என்றும் இளமையாகவே இருக்கும். இசைப்பவர்களுக்கும் வயது எல்லை இல்லை. அதனால் இசைக்கும் வயதில்லை.

> பல அரங்கேற்றங்கள் நடக்கின்றன. பின்னர்' அவர்கள் காணாமற் போய்விடுகின்றார்கள். இசையைக் கேட்கும் சந்தர்ப்பமும் தாமே கச்சேரி செய்யும் சந்தர்ப்பமும் இல்லாமையாலேயே அவர்கள் காணாமற்போகிறார்கள். அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.








வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா யாழ்ப்பாணம் , தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அருணா செல்லத்துரை எழுதிய 'அடங்காப்பற்று வன்னியில் ஆதிகாலத் தமிழர்கள் வரலாறு' என்ற நூலுக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. 2017ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது வழங்கல் விழாவில் 'சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு' இலக்கியப் பிரிவில் ஏற்கனவே இந்த நூல் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# Ministry of National Integration and Reconciliation

## தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு

**Request for Proposal (RFP) முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)**

**50,000 Brick and Mortar Type Housing Programme for North and East**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 50,000 நிரந்தர கல்வீடுகளை அமைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்

**Financing and Construction of 50,000 Permanent Brick and Mortar Type Houses for the Conflict Affected Families in the Northern and Eastern Provinces of Sri Lanka**

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50,000 நிரந்தர கல்வீடுகளை நிர்மாணித்தலும் நிதிசுட்டலும்

1. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka intends to construct 50,000 brick and mortar type housing units under contractor-driven modality for the persons affected by conflict in Northern and Eastern Provinces of Sri Lanka by using funds arranged by the bidder on a competitive soft term from reputed Donors or Financing Institutions.

2. The Chairman, Cabinet Appointed Negotiation Committee (CANC), on behalf of Ministry of National Integration and Reconciliation invites sealed Request for Proposals(RFP) from the eligible bidders (national or international orJoint Ventures) for the Construction of 50,000 permanent houses under various packages.This is organized and sliced into number of packages and each package will have 500 housing units. The total number of packages will be 100. A bidder may apply for one or more packages.

3. These houses will be individual housing units with the plinth area of 550 Sq.ftextent per house and should have two bed rooms, living room, verandah, kitchen and toilet facilities.

4. The bidder shall establish a firm commitment of funding from the reputed donors or Funding Agency or Agencies for 100% financing of the relevant package or packages of the project on competitive soft financing arrangements. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka or its authorized agency will enter into a financing agreement (national / international) with the reputed donor or Funding Agency/Agencies proposed by the successful bidder. The contractor to be employed will be selected in accordance with the criteria set out in the RFP.

5. RFP will be considered through competitive bidding procedure and is open to all eligible bidder who fulfilled the minimum criteria described in the RFP document.

6. The bidder should submit confirmed financing arrangement with soft terms with a firm commitment letter from internationally or locally recognized and credibility rated bank, financial institution or donor acceptable to the Central Bank of Sri Lanka and Ministry of Finance of Sri Lanka.Financing facility for packages for which bids are submitted should be clearly confirmed without any ambiguity by the financing bank, institution or donorand should be supported with detailed Term Sheet. The financing arrangements with soft terms should be in the form of interest, grace period and repayment period.

7. Interested eligible Bidders may obtain further information from Secretary/ Programme Coordinator, Ministry of National Integration and Reconciliation and inspect the RFP documents at the address given below from 9.00 hours to 15.00 hours on working days from 2nd October 2017 to 12th November 2017

   Ministry of National Integration and Reconciliation(2nd Floor)
   No.34, Narahenpita Road, Nawala, Sri Lanka.
   Email address: ministrysec.nir@gmail.com
   Telephone /Facsimile:Telephone : +94-11-2805360 ; Fax : +94-11-2806530.

8. A complete set of RFP documents in English language may be purchased by eligible bidders on submission of a written application on a business letterhead to the address above and upon payment of non- refundable fee of SL Rs. 60,000.00 in cash or Bank draft (acceptable by the Central Bank of Sri Lanka) in favour of Secretary, Ministry of National Integration and Reconciliation from2nd October 2017 to 12th November 2017 from 9.00 a.m to 3.00 p.mon any working day.

   The bidder who wishes to receive the RFP by couriers shall authorize the Ministry to do so.The Ministry will promptly dispatch the hard copy of the documentsby courier serviceon payment of a non-refundable fee but under no circumstances will be held responsible for late delivery or loss of the documents so mailed. An additional non-refundable fee of SL Rs. 20,000.00should be paid for dispatching the documents by courier.

9. All bids must be accompanied by a bid security as set out in the RFP. Proposals shall be submitted in one (01) original and two (02) copies delivered to the address below on or before 2.00 p.m on 13th November 2017.
   "Secretary, Ministry of National Integration and Reconciliation, No.34, Narahenpita Road, Nawala, Sri Lanka"

   The proposals should be submitted under two envelops system as set out in the RFP document. Bids shall be marked on the top left hand corner of the envelop "RFP for 50,000 Housing Programme".

   Bids will be opened immediately after closing of bids.

10. Proposals which are received late will be rejected and returned unopened.The Ministry of National Integration and Reconciliation will not be responsible for any costs or expenses incurred by Bidders in connection with the preparation or delivery of RFP.

11. RFP Documents will be issued from 2nd October 2017

**Chairman, CANC**
**Ministry of National Integration and Reconciliation**
**No. 34, Narahenpita Road, Nawala, Sri Lanka.**

# முத்தமிழ் தத்துவம் சொல்லும் வில்லிசைக்கலையின் உயர்வினை உலகெங்கும் உலாவவிடும் யாழ்ப்பாணக் கல்லூரி



சாமுவேல் டேவிட்ராஜ்

**வில்லிசையின் ஊற்று**

வில்லிசைக்கலை என்பது இசைத்தமிழும், இயற்றமிழும், நாடகத்தமிழும், ஒன்றெனக் கலந்த ஒரு கலவையேயாகும். வில்லிசைக் கலையின் தோற்றம் பற்றி கவிஞர் "சுப்பு ஆறுமுகம்" குறிப்பிடுகையில் "தென்பாண்டிநாட்டுப் பகுதியில் வசித்த வேடர்கள் வேட்டையாடி, வந்து மரத்தடி நிழலில் அமர்ந்து தோளிலிருந்த வில்லை மடியில் சாய்த்து அம்பை அந்த நாணில் தட்டித்தட்டி பாடலுடன் தொடங்கிய கலையாகும்". என விளக்கம் கொடுப்பதை இனம் காணமுடிகின்றது. இந்தக் கலைவடிவமானது பிற்பட்ட காலங்களில் பண்டைத்தமிழ் மக்கள் பேணி வளர்த்துவந்த கிராமியக் கலைகளில் முக்கிய இடம் வகிப்பது வில்லிசைக் கலையாக வளர்ச்சி கண்டது.

வில்லிசைக்கலையில் வில், உடுக்குகுடம், தாளம், கட்டை ஆகிய கருவிகளுடன் பம்பை, உறுமி, தக்கை, துந்துபி முதலான கருவிகளும் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளமையினை இனம் காணமுடிகின்றது. வில்லிசைக்கலை சிறக்க, தாலாட்டுப்பாட்டு மெட்டுக்களில் நீலாம்பரி இராகம் பயன்படுத்தப்படுவது வழக்கமாகும். காவடிச்சிந்து, ஆனந்த பைரவியிலேயே இணைந்திருக்கும். அத்துடன் காம்போதி, கல்யாணி, நவரரோஸ் போன்ற இராகங்கள் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வில்லிசைத்துப் பாடுபவர் இயல், இசை, நாடக, நகைச்சுவைப் பாணியில் திறமை படைத்தவராகத் திகழ்வார். இவ்வகை அர்த்தம் கொள்ளும் வில்லிசைக்கலை பழந்தமிழ் மக்கள் மத்தியில் எளிமையாலும், இனிமையாலும் மகிழ்ச்சியைக் கொடுக்கவல்ல, கலையாகவும் சுவைஞர்களை தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்ட கலை வடிவமாகவும் திகழ்ந்து வந்துள்ளது. இந்தக் கலைவடிவமானது உயிரோட்டம் நிறைந்த உணர்வுகளையும் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் வில்லிசைக் கலையின் திறவுகோலாக விளங்கியவர் திருப்பூங்குடி வி.கே.ஆறுமுகம் கலைஞராவார். 1966களில் இவரது வில்லிசைக் கலையின் முயற்சிகள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. தொடர்ந்து அச்சுவேலியைச் சேர்ந்த கலாவினோதன் சின்னமணி என அழைக்கப்படும் கே.கணபதிப்பிள்ளையின் வில்லிசைக் கலையின் தொடர்ச்சி ஈழத்தில் 2013ஆம் ஆண்டுவரை புகழ் பூத்திருந்தன. நாயன்மார் கட்டு சாம்பசிவ சிவசாச்சாரியரின் மகன் பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தசர்மாவின் முயற்சிகளும், கொழும்பு மாநகரிலே சொக்கல்லோசண்முகம் என்பவருடைய முயற்சிகளும் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்தன. சபா, சதாசிவம், ராஜன், வி.எஸ். கணேசசுந்தரம், தாவடியூர் கலைமணி எஸ்.வடிவேலு, இராசையா சிறிதரன் என்பவர்களும் வில்லிசைக் கலையின் இடையறாத வரலாற்றுத் தொடர்புகளினூடாக இந்தக் கலையின் வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களில் பெருமைக்குரியவர்களாவார். முத்தமிழென அர்த்தம் கொள்ளும் வில்லிசைக் கலையினை பாடசாலை ரீதியாக சுவைப்பதற்கு ஒரு தருணம் கிடைத்துள்ளமை அடிப்படையில், இந்தக் கலையின் முக்கி யத்துவத்தினை உணரவும், உணர்த்தவும் கல்விச் சமூகம் இன்று களமிறங்கியுள்ளது. இந்தக் கலையுணர்வுகள், போட்டிகள் அடிப்படையில் மாத்திரம் உள்வாங்கப்பட்டுள்ளனவா? அல்லது எமது கிராமிய பண்பாட்டு பின்புலங்களை பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளதா? என்பது ஒரு புறமிருக்க இந்தக்கலையம்சத்தின் தேவைகள் பாடசாலை ரீதியில் உணரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகளில் திறந்தபோட்டிப்பிரி விற்குரிய முதன்மை நிகழ்வு வில்லிசைக்கலையாகும். தமிழ்மொழித் தினப் போட்டிகள் கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற நிலைகளில் நிகழ்த்தப்படுகின்றமையினைக் காணமுடிகின்றது.

வில்லிசைக் கலையின் முதுமையினையும் முக்கியத்துவத்தினையும் அதன் சமூக உணர்வினையும் உணர்ந்த, யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் மன்றம் மற்றும் கலைத்துறையினர் இந்தக் கலையினை வளர்த்தெடுப்பதில் அக்கறைகொண்டு அயராது உழைத்து வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும். இயல், இசை, நாடகம், சார்ந்த துறைகளில் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர் குழாமை கல்லூரி தன்னகத்தே கொண்டுள்ளமை சிறப்பிற்குரியதாகும். இசைக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், வில்லிசைக் கலைஞர்களை உருவாக்கும் களமாக யாழ்ப்பாணக் கல்லூரி திகழ்ந்து வருகின்றமையினைக் காணமுடிகின்றது.

> வில்லிசைத்துப் பாடுபவர் இயல், இசை, நாடக, நகைச்சுவைப் பாணியில் திறமை படைத்தவராக திகழ்வார். இவ்வகை அர்த்தம் கொள்ளும் வில்லிசைக்கலை பழந்தமிழ் மக்கள் மத்தியில் எளிமையாலும், இனிமையாலும் மகிழ்ச்சியைக் கொடுக்கவல்ல, கலையாகவும் சுவைஞர்களை தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்ட கலை வடிவமாகவும் திகழ்ந்து வந்துள்ளது. இந்தக் கலைவடிவமானது உயிரோட்டம் நிறைந்த உணர்வுகளையும் கொண்டுள்ளது.

**தேசியச் சாதனைகள்**

யாழ்ப்பாணக் கல்லூரி 2001ஆம் ஆண்டு ஏ.ஏ.போல் அதிபரது வழிகாட்டலின் கீழ் ஒரு சிறந்த வில்லிசைக்கலை குழு. அருந்தவநாதன், பிரான்சிஸ் (தற்போதைய பதில் அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகிய ஆசிரியர்களின் கீழ் சிறந்த பயிற்சிகள் பெற்று இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்று, சாதனை படைத்துள்ளமை பெருமைக்குரிய வெற்றியாகும்.

2004, 2005, 2006ஆம் ஆண்டுகளில் என்.ஏ.விமலேந்திரன் அதிபரது வழிகாட்டலின் கீழ் சிறந்த வில்லிசைக் கலைக் குழுக்களிற்கு துரை.கணேசமூர்த்தி ஆசிரியரின் கீழ் சிறந்த பயிற்சியளிக்கப்பட்டு, தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளமை போற்றுதற்குரிய வெற்றியாகும்.

2016, 2017ஆம் ஆண்டுகளில் டி.எஸ். சொலமன் அதிபரது வழிகாட்டலின் கீழ் சிறந்த வில்லிசைக் கலைக் குழுக்களை துரை. கணேசமூர்த்தி,ஜே.மேரியோசப் (யோசித்தன்),இராஜசேகரம் (ஒருங்கிணைப்பாளர்) ஆகிய ஆசிரியர்களின் கீழ் சிறந்த பயிற்சிகளினூடாக உருவாக்கப்பட்டு இலங்கை ரீதியில் முதலிடம் பிடித்ததும் மெய்ச்சத்க்கதே.

**நடப்பு வருட சாதனையாளர்கள்**

தி.தினுஜன், ஜெ.உமாசுதன், ப.சஞ்சயன், ச.இராகுலன், வி.மேனகன், க.அபிசேக் க.பிரணவசுதன் ஆகியோர் தேசிய ரீதியில் சாதனைகளை படைத்துள்ளமையோடு பிரபல்யம் மிக்க பொது மேடைகளில் தமது கலையார்வத்தையும், இளமைக் கலையுணர்வுகளையும், வில்லிசைக்கலை நிகழ்வுகளில் அரங்கேற்றி, புகழையும் வரவேற்பையும் பெற்று வருகின்றனர்.

தேசிய ரீதியில் சாதனைகளை ஈட்டுவதற்கு வில்லிசைக்கலை உறவுடன் இணைக்கப்பெற்று அந்தக் கலைவடிவின் கருப்பொருள், கட்டமைப்பு, பாரம்பரியம், தனித்துவம், கலைத்துவம், மரபுவழி, இசை, நாடகப் பாங்கு போன்ற முதன்மை அம்சங்களை நன்கு கற்றொழுகி அவற்றை ஒழுங்கமைவுடன், போட்டிவிதிமுறைகளைக் கருத்திற் கொண்டு, வெற்றிக்களமிறங்கி, தேசியரீதியில் சாதனைகளை நிலை நாட்டியுள்ளமையும் எமது பாரம்பரியத்தின் அடிச்சுவடுகளை யாழ்ப்பாணகல்லூரி தாய்த்தளத்தில் ஊற்றெடுக்கச் செய்கின்றமையும் பாராட்டப் பட வேண்டியதொன்றே.







மூத்த ஊடகவியலாளர் சின்னையா குருநாதனின் நினைவேந்தல் நிகழ்வு 'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-40)

# மலைத்தென்றல்

## வெற்றிகரமாக வீசியது

நி.சோபிகா





“‘மலைத்தென்றல் – 2017’ பார்வையாளர்களின் மனங்களை வருடியதுடன் தமிழின கலை கலாசார விழுமியங்களை வெற்றிகரமாக ஊவாவின் மலை முகடுகளெங்கும் தென்றலாய் வீசச் செய்தது.”









“வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு” என்றவள்ளுவரின்வாய்மொழிக்கு இணங்க வெற்றியின் விழுதுகள் நீள்வதற்கு மனதில் புதுப்புது கருத்துக்கள் நுழைந்தால் தான் புதுப்புது சிந்தனைகள் தோன்றும். ஆக்கபூர்வமான சிந்தனைகள் படைப்பாற்றலாக உருவெடுக்கின்றன. படைப்பாற்றல் மூலமாக மாணவர்களை வெளியுலகிற்கு உணர்த்த முடியும். மாணவர்களின் உள்ளத்தில் பதிந்துள்ள ஆற்றல் சமுதாயத்திற்கு நன்மை தரும் செயலாக மலர வேண்டும். அப்பொழுது தான் எங்களுடைய வாழ்க்கை எதிர்காலத்திற்கு வரலாறாகமாறும். அத்தகையவரலாறுகளைபடிப்பதோடு புதிய வரலாறுகளை படைக்கவும் வேண்டும்.

அந்த வகையில் தமிழர் நம் கலை கலாசாரத்தை பேணிப்பாதுகாக்கவும், மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவும் ஊவா வெல்லஸ்ஸபல்கலைக்கழகமாணவர்களால்வருடாந்தம் ‘மலைத்தென்றல் எனும் நிகழ்வு கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடமும் மூன்றாம் வருட மாணவர்களின் தலைமையின் கீழ் ஏனைய வருட மாணவர்களின் ஒத்துழைப்புடனும் அர்ப்பணிப்புடனும் மலைத்தென்றல்கலைகலாசாரப்பெருவிழாவெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது.

பதுளை சைமன் பீரிஸ் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இந்த மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை,பிற்பகல்2மணியளவில்ஆரம்பமானநிகழ்வு பல கலை கலாசார அம்சங்களைத் தன்னத்தே தாங்கி மாலை 6.30 மணி வரையிலும் நடைபெற்றது. மலைத்தென்றல் 2017 இன் தலைமை விருந்தினராக அமைச்சர் மனோகணேசனும் (அமைச்சர், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர்), சிறப்பு விருந்தினராக கலாநிதி ஜயந்த லால் ரத்னசேகரவும் (உபவேந்தர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், இலங்கை), மதிப்புறு விருந்தினராக திருமதி கலையரசி யோகநாதனும் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், ஊவா மாகாணத்திணைக்களம்) கலந்து சிறப்பித்தனர்.



மங்கள விளக்கேற்றல், தமிழ் மொழியில் தேசிய கீதம், பல்கலைக்கழக கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து என்பவற்றுடன் ஆரம்பான நிகழ்வில் தமிழர் பாரம்பரியம் பேசும்,பரதம்,வில்லுப்பாட்டு, கலப்பு நடனம், அம்மன் நடனம், நாட்டார்பாடல், ‘சரித்திர சிதைவு’என்றநாடகம், பல்லியம், விநாயகர் நடனம் என்பன மேடையேறி பார்வையாளர்கள் கண்களை குளிர்வித்தன. மேலும் ‘மலைத்தென்றல்’நூல்வெளியீட்டுநிகழ்வும் பிரதிகள் வழங்கலும் அதனைத் தொடர்ந்து, பூவன் மதீசன் இசையமைப்பில் உருவான மலைத்தென்றல் பாடல் வெளியீடும் நடைபெற்றன. நிகழ்வின் மற்றொரு அம்சமாக மலைத்தென்றல் ஒழுங்கமைப்புக் குழவினால் நாடளாவீய ரீதியில் நடாத்தப்பட்ட கலைத்திறள் கவிதை கட்டுரைப் போட்டி வெற்றியாளர்களும், கண்வழியே புகைப்படப் போட்டி வெற்றியாளர்களும்விருந்தினர்களால்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள், சகோதர மொழி மாணவர்கள், பிற பல்கலைக்கழகங்களைச்சார்ந்த மாணவர்கள், பதுளை வாழ் மக்கள், பாடசாலை மாணவர்கள், சிறுவர் இல்ல மாணவர்கள் என கடந்த வருடங்களிலும் பார்க்க பெருமளவு பார்வையாளர்களை உள்வாங்கியிருந்த ‘மலைத்தென்றல் 2017’ பார்வையாளர்களின் மனங்களை வருடியதுடன் தமிழின கலை கலாசார விழுமியங்களை வெற்றிகரமாக ஊவாவின் மலை முகடுகளெங்கும் தென்றலாய் வீசச் செய்தது.

## உயிரோடு தமிழ்

உயிரோடு
உறவாடும் மூச்சு
தமிழின்ப மொழி என்றும்
உணர்வுக்கு ஊற்று

முத்தமிழ் தவழ்ந்து
வரும் காற்று
அது உயிருக்கு
நேர் என்று போற்று

தமிழன்னை துயர் துடைக்க
கரம் ஒன்று தருவாய்
அவள் புகழோங்க
என்றும் – நீ
வரம் நூறு தருவாய்

உயிர் போயினும்
மொழியெங்கும் உயிரே
செங்குருதி பாய வளர்த்த
ஒரு பயிரே

தமிழன்னை புகழ்
பரப்பிட நீ வாடா
அவள் துயர் போக்க
கரம் நூறு தாடா

எங்கள் மொழி காக்க
துணிவோடு வாடா – நீ
தமிழுக்கு அழிவென்றால்
அவளுக்காய் நீ மரணித்துப்
போடா

– ஹரிகரன்



## வரலாற்றில் இன்றைய தினம்

1825 - உலகின் முதலாவது நீராவி ரயில் பாதை ஸ்ரொக்ரன் மற்றும் டாலிங்கரன் இடையே வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

1825 - 300 பேருடன் சென்ற நீராவிக் கப்பல் - 55 ஆர்டிக் கடலில் மூழ்கியது. அத்லாந்திக் சமுத்திரத்தில் பதிவாகிய முதலாவது பேரிடர் இதுவாகும்.

1908 - முதலாவது போட்மொடல் ரி மோட்டார் கார் மிச்சிகன் போட் பிகியுற் அவெனியூ தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டது.

1928 - சீனக் குடியரசு ஐக்கிய அமெரிக்காவால் அங்கீகரிக்கப்பட்டது.

1940 - இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியன ஜேர்மனியின் தலைநகர் பெர்லினில் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1959 - யேமன் அரபுக் குடியரசு நிறுவப்பட்டது.

1988 - மியன்மார் சர்வாதிகாரத்துக்கு எதிராக, ஆங் சான் சூகியால் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் உருவாக்கப்பட்டது.

2006 - ஏ9 வீதியைத் திறப்பது சாத்தியமில்லாமல் மாற்றுப் பாதை குறித்து அரசு பரிசீலனை. இராணுவப் பேச்சாளர் தகவல்



1996 - ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் தலிபான்களால் கைப்பற்றப்பட்டது.

## புரட்டாதி மாத ராசிபலன்



### உங்களுக்கு எப்படி?

(17.09.2017 – 17.10.2017)

### தனுசு

**ஆதரவு பெருகும்**

நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என வாதிட்டு தவறு செய்தவர்களைத் தட்டிக்கேட்கும் குணமுடைய நீங்கள், மற்றவர்கள் செய்த உதவியை ஒருபோதும் மறவாதவர்கள். உங்களின் யோகாதிபதியான சூரியன் 10ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் உங்களின் நிர்வாகத் திறமை அதிகரிக்கும். புது வேலை கிடைக்கும். உற்சாகமடைவீர்கள். புகழடைவீர்கள். வழக்குப் பிரச்சினை தீரும். அரச காரியங்கள் அனைத்தும் சாதகமாக முடிவடையும். குருபகவான் இலாப வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் திடீர் செல்வாக்கு, யோகம் உண்டாகும். புதுப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

சுக்கிரனும், புதனும் சாதகமான வீடுகளில் சென்றுகொண்டிருப்பதால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வாகனப் பழுது நீங்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுற்குள் வரும். வங்கியில் லோன் கிடைக்கும். மூத்த சகோதர வகையில் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கி அவர்களால் ஆதாயமடைவீர்கள். மனைவிவழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிரிந்திருந்தவர்கள் ஒன்றுசேர்வீர்கள். மனைவிவழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். மனைவிக்கு வேலைக் கிடைக்கும். திருமணம் தள்ளிப் போனவர்களுக்குக் கூடி வரும். உங்கள் பூர்வ புண்யாதிபதி செவ்வாய் சாதகமாக இருப்பதால் உங்கள் பிள்ளைகள் கல்வி, வேலைக்காக அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். ராகு 8இலும், கேது 2ஆம் வீட்டிலும் நிற்பதால் எதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் வேறுவிதமாகப் புரிந்து கொள்ளக் கூடும். எனவே உஷாராக இருங்கள். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்படுங்கள். மறைமுக எதிரிகள் உருவாகுவார்கள். வாகனத்தில் கவனம் தேவை. பண விஷயத்தில் குறுக்கே நிற்க வேண்டாம்.

அரசியல்வாதிகளே! சகாக்கள் மத்தியில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். கன்னிப் பெண்களே! உங்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். மாணவ மாணவிகளே! அதிக மதிப்பெண் பெறுவீர்கள். பெற்றோர் உங்களின் தேவைகளை பூர்த்தி செய்வார்கள்.

வியாபாரத்தில் புதுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள். புகழ்பெற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து அதிக இலாபம் ஈட்டுவீர்கள். சூரியன் 10இல் அமர்ந்ததால் உத்யோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வை எதிர்பார்க்கலாம். அதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கலைத்துறையினரே! பொது நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கும் அளவிற்கு பிரபலமாவீர்கள். விவசாயிகளே! பழைய பிரச்சினைகள், சிக்கல்கள் குறைந்து ஆக்கப்பூர்வமான பாதையில் பயணிக்கும் மாதமிது.

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி



இளவாலை, வருத்தப் படாத வாலிபர் சங்கத்தின் 4ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தத் திட்டமிடப்பட்ட மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி வட்டுக்கோட்டை சவாரித் திடலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இந்த சவாரிப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

54 மாண்டுவண்டில்கள் போட்டியில் பங்குபற்றின என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம–21)










# நரம்பு மண்டலம்


மனிதனின் நரம்பு மண்டலமே உடல் செய்யும் அனைத்து செயல்களுக்குமான அடிப்படையாக அமைந்துள்ளது. மூச்சு விடுவது முதல் தசைகளின் அசைவுகளை கட்டுப்படுத்துவது, சூடு, குளிர் நிலைகளை உணர்வது வரை அனைத்துக்கும் நரம்பு மண்டலமே காரணமாகின்றது. நரம்பு மண்டலம் கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.




**தன்னிச்சையாக இயங்கும் நரம்புப் பிரிவு**
இதயம், குருதி அழுத்தம், சமிபாடு, உடல் சூட்டினை சீராய் வைத்தல் இவற்றுக்குப் பொறுப்பாக விளங்குகின்றது.

**மோட்டார் நரம்புப் பிரிவு**
அசைவுகளையும், செயல்களையும் மூளையிலிருந்து தண்டுவடம் மூலம் உடற் தசைகளுக்குக் கொண்டு சென்று இயங்க வைக்கின்றது.

**உணர்ச்சி நரம்புப் பிரிவு**
தோல், தசைகளிலிருந்து தண்டுவடத்திற்கும், மூளைக்கும் அசைவுகளை எடுத்துச்செல்கின்றது. வலி, எரிச்சல், இதம் போன்ற உணர்ச்சிகளை மனிதர்களை உணர்ந்துகொள்ளச் செய்கின்றது. நரம்பு மண்டலமே அனைத்திற்கும் காரணமாவதால் நரம்பு வலியும் அல்லது நரம்புப் பாதிப்பும் மனிதனின் வாழ்வினை அதிகம் பாதித்து விடுகின்றது.




**நரம்பு வலியின் அறிகுறி**
நரம்பு பாதிக்கப்படும் பொழுது பலவித அறிகுறிகள் தெரியும். பாதிப்பு மூளையிலா, தண்டுவடத்திலா அல்லது பரவியுள்ள புற நரம்புகளிலா என்பதனைப் பொறுத்து அறிகுறிகள் அமைந் திருக்கும்.

தன்னிச்சை இயக்க நரம்பு பாதிக்கப்படும் பொழுது,
- நெஞ்சு வலியினை உணர முடியாது.
- அதிக வியர்வை அல்லது குறைந்த வியர்வை இருக்கும்.
- வறண்ட கண், வாய் காணப்படும்.
- மலச்சிக்கல் ஏற்படும்.
- சிறுநீரகப் பை சரிவர இயங்காது.
- உடல் உறவில் பிரச்சினை இருக்கும்.

மோட்டார் நரம்பு இயக்கத்தில் பாதிப்பு ஏற்படும் பொழுது,
- உடற் சோர்வு ஏற்படும்.
- தசையில் தேய்மானம் காணப்படும்.
- தசைத் துடிப்பு இருக்கும்.
- பக்கவாதம் ஏற்படும்.

உணர்ச்சி நரம்பு இயக்கத்தில் பாதிப்பு ஏற்படும் பொழுது,
- வலி இருக்கும்.
- மதமதப்பு இருக்கும்.
- குறுகுறுப்பு, குத்தல் இருக்கும்.
- எரிச்சல் இருக்கும்.
- குளிர், சூடு போன்றவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாது.

சிலருக்கு மேற்கூறப்பட்ட இரண்டு அல்லது மூன்று பிரச்சினைகள் கூட அறிகுறிகளாகத் தென்படும்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## உடனடி வேலைவாய்ப்பு

Advance Nursing Training and Employment at Jaffna
அடிப்படை தாதிய பயிற்சி முடித்தவர்களுக்கான செயல்முறை தாதிய பயிற்சி

- ✓ Operation Theatur work
- ✓ Surgical ward, Medical ward Training
- ✓ ICU Training
- ✓ Modern Equipment Hand ling

- இப் பயிற்சி நெறியில் A/L படித்த ஆங்கில அறிவுள்ள பெண்களும் பங்குபற்றலாம்.
- பயிற்சி முடிவில் சேட்டிபிக்கற் வழங்குவதுடன் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் வேலைக்கு சிபார்சு செய்யப்படும்.
- வெளிமாவட்ட பெண்களுக்கு இலவச தங்குமிடம் ஒழுங்கு செய்துதரப்படும்.
- பெயர், விலாசம், தெளிவான தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி.

**விளம்பர இல. 5543, மே.பா.உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## COOKERY CLASS

சமையல் கலையினை ஆரோக்கியமாக, சுவையாக, மணமாக, தரமாக சமைப்பதற்கான சமையற்கலை வகுப்புக்கள் ஆரம்பமாகிறது.

Good for those who are flying to abrad and the school leavers.
You have a chance don't miss it !

**071 843 2098**

## தேசிய மட்ட சாதனையாளர் விருது - 2017

தேசிய தமிழ்மொழி தின விழாவின் ஒரு பகுதியாக தேசிய மட்டத்தில் வடமாகாணத்தில் இருந்து சாதனை படைத்தவர்கள் கௌரவிக்கப்பட இருக்கின்றனர். வடமாகாணத்தில் இருந்து பின்வரும் துறைகளில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்தவர்கள் விண்ணப்பம் பின்வருமாறு கோரப்படுகின்றது.

- ✓ ஊடகம் - 10
- ✓ கல்வி - 06
- ✓ விளையாட்டு - 06
- ✓ கலை - 06
- ✓ எழுத்தாளர் - 06
- ✓ வர்த்தகர்கள் - 06

மேற்படி துறைகளில் திறமைகளை வெளிப்படுத்திய சாதனையாளர்கள் தங்களது சுயவிவரம் மற்றும் தங்களது செயற்பாட்டுடன் தொடர்புடைய ஆவணங்களை 04.10.2017 இற்கு முன் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ **பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், செம்மணி வீதி, நல்லூர்** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஒவ்வொரு பிரிவுக்கும் நிபுணத்துவம் பெற்ற 3 பேர் கொண்ட தெரிவுக் குழு நியமிக்கப்பட்டு தெரிவு இடம்பெறும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

**இ.இரவீந்திரன்**
**செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்.**

## விற்பனைக்குண்டு

JCB

**விற்பனைக்குண்டு**

**தொடர்பு:- 077 480 1734**

**பாடசாலையில் கல்விபயிலும் அந்தணச் சிறார்களுக்கு பிரத்தியேக சமஸ்கிருத வகுப்புக்கள்**

**ஆரம்பம் :-**
30.09.2017 சனிக்கிழமை
மாலை 3.30 மணி (விஜயதசமியன்று)
தினசரி மாலை 3.30 மணிமுதல் 5.30 மணி வரை
**இடம் :** "தர்மசாஸ்தாகுருகுலம்" இணுவில்.

**அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**

## சூரியன் திருமணசேவை

எங்களிடம் அரச உத்தியோகத்தர்கள் (பட்டதாரிகள்), தனியார் துறையினர், வெளிநாட்டு ஆண், பெண் இருபாலாரினதும் குறிப்புக்களும் உண்டு.

**சூரியன் திருமணசேவை**
**561, K.K.S. வீதி, மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம்.**




## வறுத்தலை விளான் அருள்மிகு மருதடி விநாயகர் ஆலயம்

**பரிபாலனசபை பொதுக்கூட்டம்**

**மருதடி விநாயகப் பெருமான் அடியார்களே !**

எமது சபையின் பொதுக்கூட்டம் 12.10.2017 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலயமண்டபத்தில் இடம் பெற உள்ளது. மஹோற்சவம், சதுர்த்தி போன்ற உற்சவங்கள், திருவெம்பாவை, விநாயகர் விரதம் போன்றவற்றின் விசேட பூசைகள், திருப்பணிகள் ஆகியவற்றின் உபயகாரர்கள் அவர்களின் உறவினர்கள், உரித்தாளர்கள் தயை கூர்ந்து கலந்து கொள்ளவும். வெளிநாடுகளில் உள்ளவர்களும் நேரடியாகக் கலந்து கொள்ளலாம். கணக்கறிக்கை சமர்ப்பித்தல், புதிய நிர்வாகசபை அங்கத்தவர் தெரிவு ஆகியன இடம் பெறும்.

**மருதடியான் சேவையில்**
**பிரம்ஸ்ரீ.சு.இராசேஸ்வரசர்மா**
**(பிரதம அர்ச்சகர் - போஷகர்)**

**பரிபாலன சபையினர்.**

## இளையோர்களே, தகவல் தொழில்நுட்ப துறையில் வேலைவாய்ப்பு பெற அரியவாய்ப்பு

ஆறுதல் நிறுவனத்தின் திறன் விருத்தி செயற்றிட்டத்தில் இணைவதன் மூலம் கணினி அடிப்படை மற்றும் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றபின்னர் தகவல் தொழில்நுட்பத்துறையில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அல்லது சுயதொழில் ஒன்றைத் தொடங்குவதற்கான அறிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**Programme 1 - Specially designed For Absolute Begineers Duration : 3 months**

Computer Literacy & English Language skills Development & Training Programme (covers ICT and Communicative English; Syllabua of TVEC - NVQ level 3,4) Certification : Ministry of skills Development & Vocational Training.

**குறிப்பு:- ஒரு பிரிவில் 15 பயிற்சியாளர்கள் மாத்திரமே உள்வாங்கப்படுவர்.**

**Programme 2 :- Customized Training for Youths & Employees on Job Skills Development & Training on**

1. Information Communication Technolog
2. Desktop Publishing & Graphic Designing
3. Computer Hardware & Networking
4. Database Management Systems
5. Web Development & Designing
6. Software Programming
7. Soft skils Development

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட திறன்விருத்திப் பயிற்சிகள் குழுச்செயற்பாட்டின் ஊடாகக் கற்பிக்கப்படும்.

**Programme 3 :- Training Programme using social media in their Students or in works effectively**

மேற்குறிக்கப்பட்ட பயிற்சிகள் 29.09.2017 ஆரம்பிக்க இருப்பதினால் ஏற்கனவே விண்ணப்பித் தோர் மற்றும் விண்ணப்பிக்காதோர் நிறுவனத்துக்கு நேரில் வந்து பதிவு செய்து உறுதிப்படுத்துமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பயிற்சிகளில் திறமையை வெளிப்படுத்துவோருக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

**For Information : Hotline :- 077 292 8853**
**Location - in JaffnaTown, Near Main Bus Stand**

**CENTRE for IT EDUCATION**
JOB SKILLS DEVELOPMENT & TRAINING
Sponsored By RATNAM FOUNDATION

*NO. 51, WYMAN ROAD, NALLUR, JAFFNA, SRI LANKA.*
**Phone - 021 222 7093, Fax - 021 222 7092, Web:www.aaruthal.lk**
**e-mail : aaruthaltrinco@gmail.com**

## மரண அறிவித்தல்



### சிவகுமாரன் காண்டீபன்

(சம்பத் வங்கி, வேணுகா ரெக்ஸ்)

தும்பளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் காண்டீபன் (26.09.2017) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சிவகுமாரன் விமலரட்ணம் தம்பதியரின் அன்புமகனும் பஞ்சலிங்கம் - கலாநிதி தம்பதியரின் அன்புமருமகனும் நிரஞ்சினியின் அன்புக்கணவரும் சரனின் அன்புத்தந்தையும் சிந்திகாவின் அன்புச்சகோதரரும் பிரதீபனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2017) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தும்பளை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஒருதானை ஒழுங்கை,
தும்பளை,.பருத்தித்துறை.**

**தகவல் குடும்பத்தினர்.
021 226 4101**

## தேவை

யாழ்.நகரில் அமையவிருக்கும் 6 மாடிகள் கொண்ட கட்டடம் ஒன்றுக்கு Construction Work மேற்பார்வையிட முன்னைய அனுபவம் உள்ள முழுநேரமாக வேலை செய்யக் கூடிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer) தேவை. தெளிவான தொலைபேசி இலக்கம். வேலை செய்த இடங்கள். தகைமை (Qualification )என்பவற்றுடன் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல. 5544, மே.பா.உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
ரகசியம் பாதுகாக்கப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

**ரெங்கசாமி காளியம்மா**
**மாத்தளை வீதி, கண்டி.**
**077 327 2302, 076 466 4153, 075 509 5887.**

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதாரர் :- கருணாநிதியும் பெண் வளர்மதியும்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 16.சங்கானைவீதி. ஆதன இலக்கம் 130 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ந.கந்லதயா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இவ் ஆதனம் பிரசித்தநொத்தாரிஸ் ந.சிவப்பிரகாசம் முகதாவில் நிறைவேறிய 1034/ 25.08.1956 இலக்க பிரிவிடல் உறுதி மூலம் பிலிப்பு பிறநந்துவும் பெண் பாக்கியமும் முதலாம் பகுதியாகவும் பிலிப்பு மருசிலினும் பெண் பிரகாசம்மாவும் இரண்டாம் பகுதியாகவும் பிரிவிட்டுக் கொண்டனர். பின்னர் பிரசித்த நொத்தாரிஸ் சுபா.ரவீந்திரன் முகதாவில் நிறைவேறிய 10731/ 10.09.2012 வெளிப்படுத்தல் உறுதி மூலம் நல்லர் கந்தையா தன்னுடைய ஆதனம் எனவும் இவ்வாதனம் தொடர்பில் இருந்த ஆவணங்கள் யாவும் தொலைந்துவிட்ட தென்றும் தாய் உறுதி இலக்கம் இசுருக்கப் பிரதியின் இலக்கங்கள் தெரியாதெனவும் வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்தநொத்தாரிஸ் மு.திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி இலக்கம் 3474 / 10.10.2014 மூலம் நாகமுத்து கருணாநிதியும் பெண் வளர்மதி என்பவர்களுக்கு விற்றுள்ளார்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குபிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் குறிச்சியிறை நீயம்பத்தை நிலப்பரப்பு 031/4 இதில் வடக்குப் பக்கத்தில் உத்தரவு பெற்றநில அளவையாளர் அ.சண்முகநாதன் அவர்களினால் வரையப்பட்ட 1133/12.08.2013 இலக்க நிலஅளவைப்படத்தின் படிதுண்டு 01 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு இரண்டு(02)


கிழக்கு- றோட்
வடக்கு- பிலிப்புமரிசிலினுக்கும் பெண் பிரகாசியம்மாவுக்கும் உரியஆதனம்
மேற்கு- சின்னப்பா சிவசுப்பிரமணியத்தின் ஆதனம்
தெற்கு- மிகுதிஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை கருணாநிதியும் பெண் வளர்மதியும் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைதெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,
வலிகாமம் வடக்குபிரதேசசபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)
27.09.2017**

# பவளப் பாறைகள்

## அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டிய சொத்துக்கள்



பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதன் மூலம் உலகிலுள்ள பவளப் பாறைகள் காப்பாற்றப்படலாம். ஆனாலும். அவை முன்னர் இருந்ததைப் போல தோன்றாது என்ற தகவலைப் புதியதொரு ஆய்வு முடிவு வெளிப்படுத்தியுள்ளது.

பவளப் பாறைகளை ஆய்வு செய்யும் ஆய்வாளர் நிறம் தரக்கூடிய பாசி உருவாவதை தடுகின்றபோது பவளப் பாறைகள் வெளுத்துப்போவதை அவதானித்துள்ளனர்.

இயற்கை அமைப்புகளின் விரைவான மாற்றங்களுக்கேற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்கின்ற திறனுடைய பவளப்பாறைகள் மூலம் எதிர்கால பவளப்பாறை அடுக்குகள் வரையறுக்கப்படும் என்ற தகவல் 'நேச்சர்' சஞ்சிகையில் வெளியான கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் அவுஸ்திரேலியாவின் மிக பெரிய பவளப் பாறை அடுக்குகளில் மூன்றில் இரண்டு பகுதி இரண்டு ஆண்டுகளின் முடிவில் நிறம் குன்றி வெளுத்துப்போயிற்று என்பதையும் இந்த ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

உடனடி நடவடிக்கைகள் மூலம் பவளப் பாறைகளை பாதுகாத்துகொள்ள முடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பவளப் பாறைகள் அடுத்த நூற்றாண்டு காலப்பகுதி வரை தொடர்ந்தும் இருக்கும் என்று நம்புவதாக 'ஜேம்ஸ் குக்' பல்கலைக்கழகத்தை சேர்ந்த தலைமை ஆய்வு ஆசிரியரான பேராசிரியர் டெர்ரி ஹியூஸ் தெரிவித்திருக்கிறார். ஆனாலும் "எதிர்காலத்தில் காணப்படும் இந்த பவளப் பாறைகள் மிகவும் வேறுப்பட்டதாக இருக்கப் போகின்றன. ஏற்கனவே இருக்கக்கூடியவற்றை அப்படியே மீட்டெடுப்பது நடைபெறக்கூடிய காரியமல்ல. வேறுபட்ட இனங்களின் கலவை இதில் இருக்கும" என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தற்போதைய நிலைமையில் காபன் வெளியேற்றம் தொடருமானால் ஆண்டுதோறும் நடைபெறும் பவளப் பாறைகளின் நிறம் வெளுத்துப் போகும் செயல் நிலை 2050 ஆம் ஆண்டுக்குள் பல இடங்களில் தோன்றலாம் என்றும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பவளப் பாறையடுக்குகள் மேலாண்மை செய்யப்படுவதில் காட்டப்படும் முக்கிய மாற்றங்களின்படி அவை எதிர் காலத்தில் அழிவடையாது நிலைத்திருப்பதற்கான சந்தர்ப்பங்கள் அமையும். இதற்குப் பாரிஸ் 'பருவநிலை மாற்ற ஒப்பந்தம்" போன்ற பன்னாட்டு ஒத்துழைப்புகள் அவசியம்.

மேலும் மிக பெரிய அளவில் விரைவாக தங்களை மாற்றியமைத்து கொள்ளக்கூடிய திறனை பவளப் பாறை உயிரினங்கள் வெளிக்காட்டியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மிக பெரிய அளவில் மாற்றியமைத்துக் கொள்ளும் பவளப் பாறை உயிரினங்களின் திறனை ஆய்வாளர்கள் 'ஒரு சொத்து' என்று விவரித்துள்ளனர்.

"பவளப் பாறைகளின் நிறம் வெளுத்துப்போகின்றபோது பல இனங்களின்



கலவையாக அவை மாற்றுகின்றன. இதில் வெற்றிபெறும், தோல்வியடையும்என்றுகூறப்படும்உயிரினங்களும் உள்ளன. பவளப் பாறைகள் பற்றிய நம்பிக்கை இருக்கிறது. ஆனால், உலகம் வெப்பமாதலை கையாள் வதற்கு மிகவும் குறுகிய வாய்ப்பே உள்ளது. மிகவும் குறைந்த அளவு காபன் வெளியேற்றத்திற்கு நாம் எவ்வளவு சீக்கிரமாக மாற நடவடிக்கைகளை மேற்கொள்கிறோமோ அந்த அளவுக்கு நன்மை ஏற்படும்" என்று பேராசிரியர் ஹியூஸ் கூறியுள்ளார்.

இயல்பு நிலைமைகள் திரும்புமானால் பவளப் பாறைகள் அழிவிலிருந்து மீட்கப்படலாம். ஆனால், இதற்கு பல தசாப்த காலங்கள் தேவைப்படும்.

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகரில் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு. சுமார் 3 பரப்பில் நன்னீர் கிணற்றுடன் கூடியதுமாகும்.

**077 227 9219**

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)


மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## நரம்பு மண்டலம்




- நீரிழிவு நோயாளிகள் சக்கரை அளவினை சரிசெய்ய வேண்டும்.
- சத்து குறைபாடுடையோர் அதனைச் சரி செய்யவேண்டும்.
- பாதிப்புப் தரும் மருந்துகளை மருத்துவர் ஆலோசனைப்படி நீக்குதல் வேண்டும்.
- அடிபட்ட இடத்தில் தகுந்த சிகிச்சை தர வேண்டும்

பொதுவாக 100 வகையான நரம்புப் பாதிப்புகள் உள்ளன. வயது கூடும் பொழுது புற நரம்பின் பாதிப்புக் கூடும். நாலில் ஒரு நீரிழிவு நோயாளிக்கு இப்பாதிப்பு எளிதில் ஏற்படும். புற்று நோய்ப் பாதிப்பு நரம்புகளை பாதிக்கலாம்.
விபத்துக்கள், சில மருந்துகள் கூட நரம்புகளைப் பாதிக்கலாம். சத்துக் குறைபாடு, தொற்று நோய் போன்றவைகளும் நரம்பு பாதிப்பினை ஏற்படுத்தலாம். அநேகமானோரில் இதனை முழுமையாக சரி செய்ய முடிகின்றது. சிறிய அறிகுறியாக இருந்தாலும் உடனடியாகப் பெறும் மருத்துவ ஆலோசனை நல்ல தீர்வினைத் தரும். அடிப்படைக் காரணத்தை அறிந்து சிகிச்சை செய்ய வேண்டும்.

## மரண அறிவித்தல்

### திருமதி காந்திமதி முருகையா

(ஓய்வு நிலை ஆசிரியை - தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை)



தெல்லிப்பழை பரிகாரியார் வளவைப் பிறப்பிடமாகவும் துர்க்காபுரம் கேமவாசாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி காந்திமதி முருகையா 25.09.2017 திங்கட்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கருகம்பனையைச் சேர்ந்த செல்லப்பா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும் கீதாஞ்சலி (லண்டன்), காலஞ்சென்றவர்களான பிரபாகரன், சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கார்த்திகேயன் மற்றும் கௌரிதேவி சச்சிதானந்தன், ஏழுர்நாயகம் ஆகியோரின் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (லண்டன்), செல்வேந்திரா ஆகியோரின் மாமியும் விக்ரம், மாதங்கி, சுபாங்கி (லண்டன்) ஆகியோரின் பாட்டியும் அஸ்வின், ஜேவின்(லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**எட்டாம் கட்டை ஒழுங்கை,**
**துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0212245803**

## நீங்கா நினைவலையில்
## ஆண்டுகள் மூன்று

மலர்வு
19 . 09 . 1985



உதிர்வு
01 . 10 . 2014

### அமரர் சிவராசா நிசாந்த்

திதி – பூர்வபட்ஷ ஸப்தமி
(27.09.2017)

எம் உயிரில் ஒன்றாய் கலந்தவனே!
ஆண்டுகள் மூன்று ஆனதடா!
உம் பிரிவு தந்த சோகங்கள்
வடுக்களாய் நெஞ்சமதில்
என்ன சொல்லி ஆற்றுவது மனமதையே!
எப்பொழுதும் அழியாது உம் நினைவுகள்
நாதமாய் இதயமதில் இசை மீட்டி நிற்குதைய்யா
என்றும் உந்தன் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**49/1, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்றும் உம் நினைவுடன்
சிவராசா குடும்பம்.

# மரண அறிவித்தல்

## திருமதி நடராஜா பொன்னம்மா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா நடராஜா 25.09.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூரியர் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சண்முகராஜா மற்றும் நஞ்சினிதேவி (ஜேர்மனி), செல்வராசா (ஜேர்மனி), இராமச்சந்திரன் (டென்மார்க்), சகுந்தலாதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, பேபி, நந்தீஸ்வரன், எல்சி, குணபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவமலர் - லோகராஜன், வளர்மதி - சதீஸ்குமார், மதிவதனி - கந்தசாமி, மோகனதாஸ், பிரியதர்ஷினி, ஜெகானந் - உஷேந்தினி, கண்ணன், அருண்ராஜ், பாதுசன்ராஜ், ஸ்ரெபனி - டிலக்ஷன், ஜெபிசன், றொஷான்னா, றொசிற்றா, சகீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனிஷ், கனிஷ்கா, நர்மிஷா, சனோஷன், டனோஷன், கஜீஷா, அபிஷா, தக்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.09.2017 வெள்ளிக்கிழமை Kirkegardskapellet, Heden 3-5 5000 Odense C,Denmark இல் 9 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புலவனார் வீதி,**
**கல்வியங்காடு.**

**தகவல் : க.கந்தசாமி (மருமகன்)**
**காவேரி மில் - 021 223 0480**

**இராமச்சந்திரன் (டென்மார்க்) +452 636 8568, சகுந்தலாதேவி (டென்மார்க்) +452 349 7602**

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 2 | | | | 8 | 5 | |
| 1 | | | | | | | | 4 |
| 3 | | | | 4 | | | | 2 |
| | | | 3 | | 6 | | | |
| | | 7 | 8 | | | 2 | | |
| | | | 2 | | 5 | | | |
| 7 | | | | 8 | | | | 1 |
| 9 | | | | | | | | 5 |
| | 3 | 8 | | | | 6 | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 1 | 3 | 4 | 6 | 8 | 7 | 5 |
| 6 | 3 | 5 | 7 | 8 | 9 | 4 | 1 | 2 |
| 7 | 8 | 4 | 2 | 1 | 5 | 3 | 6 | 9 |
| 8 | 4 | 3 | 9 | 7 | 1 | 2 | 5 | 6 |
| 1 | 5 | 7 | 6 | 2 | 4 | 9 | 8 | 3 |
| 9 | 6 | 2 | 8 | 5 | 3 | 7 | 4 | 1 |
| 4 | 2 | 6 | 1 | 9 | 8 | 5 | 3 | 7 |
| 5 | 1 | 9 | 4 | 3 | 7 | 6 | 2 | 8 |
| 3 | 7 | 8 | 5 | 6 | 2 | 1 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.

**சிங்கம்:** நேர்மை மிக்கவராகச் செயல்படு வீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத் தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** உற்சாக மனப்பான்மையுடன் செயல்படு வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**துலாம்:** சுயநல நோக்குடன் சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். திடீர் பயணம் செல்ல வாய்ப்புண்டு.


**விருச்சிகம்:** நண்பரால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** பெற்றோர் நலனில் ஆர்வம் காட்டுவீர் கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படி யாக உயரும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் உறவினரால் பெரிதும் மதிக்கப்படுவர்.

**கும்பம்:** திட்டமிட்ட பணி ஒன்று எளிதாக நிறை வேறும். மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப் படுத்துவீர்கள். இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்க ளுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.




## சீனாவிலும் வெளியாகிறது 2.0

சங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், அக்சய் குமார், ஏமி ஜக்சன் நடிப்பல் உருவாகி வரும் '2.0' படத்தை அதிக திரையரங்குகளில் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. இதன்படி சீனாவையும் தனது முக்கிய இலக்குகளில் ஒன்றாகப் படக்குழு கொண்டுள் ளது.

இந்திய மதிப்பில் சுமார் 400 கோடி ரூபா செல வில் இந்தப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. விளம் பரப்படுத்தல் முயற்சிகளும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மிகப்பெரும் தொகை யைச் செலவிட்டு படத்தை எடுப்பதால் வணிக ரீதியில் வெற்றிபெறச் செய்ய படக்குழு கடும் முனைப்புக் காட்டுகிறது. இதன்படி அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளை படக்குழு தனது முக்கிய இலக்குகளாகக் கொண்டுள்ளது. சீனாவில் மட்டும் சுமார் 15 ஆயிரம் திரையரங்குகளில் படம் வெளி யிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

பொறுமையும் பணிவும் அதிகமானால் கோழை என்பர்....
அன்பும் இரக்கமும் அதிகமானால் ஏமாளி என்பர்....
புன்னகையும் வெகுளித்தனமும் அதிகமானால் பைத்தியம் என்பர்....
கோபமும் கேள்வியும் அதிகமானால் திமிர் என்பர்....
மொத்தத்தில் மனிதனிடம் இருக்க வேண்டிய எதுவுமே இல்லாதவனையே இங்கு " மனிதன் என்பர் "



மனம் ஒரு பேயாக மாறுவதை விட குரங்காக இருப்பதே மேல்...!

முதல் முயற்சியில் வெற்றி பெறுபவன் அதிர்ஷ்டசாலி

இரண்டாவது முயற்சியில் வெற்றி பெறுபவன் புத்திசாலி

மூன்றாவது முயற்சியில் வெற்றி பெறுபவன் அனுபவசாலி

நான்காவது முயற்சியில் வெற்றி பெறுபவன் தைரியசாலி

வெற்றி பெரும் வரை முயற்சி செய்பவன் சாதனையாளன்



### ஓ... இதுக்குப் பேருதான் கட்டையில போறதோ...





நீ பற்ற வைத்த நெருப்பொன்று

பற்றி எரிய உனைக் கேட்கும்



நீ விதைத்த விதை எல்லாம்

உனை அறுக்கக் காத்திருக்கும்

### பொண்ணுங்க இரண்டு ரகம்தான்



எடுத்தெறிஞ்சு பேசுனா அது காதலி
எடுத்த பொருளை எறிஞ்சுட்டு அப்புறமா பேசினா அது மனைவி.

## சிங்களவர்...

கொழும்பு, செப். 27

இது சிங்கள நாடு. சிங்களவர்களே நாட்டை ஆள வேண்டும். வேறு எவரும் எமது நாட்டில் தலையிடுவதற்கு அனுமதிக்க முடியாது. இப்போதுள்ள நிலையில் சிங்களவர்கள் ஆயுதம் ஏந்தும் சூழல் ஏற்பட்டுள்ளது. விரைவில் நாட்டில் சிங்களப் புரட்சி உருவாக வாய்ப்புள்ளது. இவ்வாறு சூளுரைத்துள்ளது பொதுபலசேனா அமைப்பு.

புதிய அரசமைப்புத் தொடர்பில் பொதுபலசேனா அமைப்பு நேற்று பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியது. அந்த அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கின் அரசியல்வாதிகள் கூட்டாட்சி, தனிநாடு குறித்துப் பேசுகின்றனர். தமிழ் மக்களுக்கு இது அவசியம் இல்லை. தெற்கு கூட்டாட்சி கேட்கவில்லை.

ஒருசிலர் மகிந்தவாதிகளாகவும், சிலர் மைத்திரிவாதிகளாகவும், சிலர் ரணில்வாதிகளாகவும் இருந்து வருகின்றனர். ஆனால் மக்கள் நடுவீதியில் உள்ளனர்.

மதவாதம் நாட்டில் பரப்பப்பட்டு வருகின்றது. நாடு துண்டாடப்பட்டு வருகின்றது. இப்போதுள்ள நிலையில் சிங்களவர்கள் ஆயுதம் ஏந்தும் சூழல் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் தரப்பினரும் எந்த நேரமும் ஆயுதம் ஏந்தும் மனநிலையில் உள்ளனர்.

வடக்கு மக்களுக்காக சம்பந்தன் குரல் கொடுக்கின்றார். முஸ்லிம் மக்களின் உரிமைக்காக அனைவரும் குரல் கொடுக்கின்றனர். ஆனால் சிங்களவர்களுக்கு குரல் கொடுக்க எவரும் இல்லை. அனைவரும் சிறுபான்மை மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து குரல் கொடுக்கின்றனர்.

நாம்தான் இன்று அடிபணிந்த இனமாக உள்ளோம். விரைவில் நாட்டில் சிங்களப் புரட்சி உருவாக வாய்ப்புள்ளது.

சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அனைவரும் இணைந்து புதிய மாற்றத்தை உருவாக்குவோம். அனைத்துத் தரப்பினரும் ஒன்றாக இணைவோம். அன்பாகப் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்போம். புதிய சிந்தனைகளைக் கொண்டு நாட்டைச் சரியாக மாற்றியமைப்போம். மகிந்த, ரணில், மைத்திரியை நிராகரிப்போம். மகாநாயக்க தேரர்களில் ஒருவரை தலைமைக்குக் கொண்டுவருவோம்.

இது சிங்கள நாடு. சிங்களவர்களே இந்த நாட்டை ஆள வேண்டும். வேறு எவரும் எமது நாட்டில் தலையிடுவதை அனுமதிக்க முடியாது. இன்று நாட்டை யாராவது ஒரு சரியான தலைமையின் கீழ் கொண்டுவர வேண்டும். சிறுபான்மை இனத்தவராக இருந்தாலும் பரவாயில்லை.

இன்று நாட்டைப் பிரிக்கும் செயற்பாடுகள் அனைத்தையும் தடுக்க மகாநாயக்க தேரர்கள் களமிறங்கினால் எமது உயிரைக் கொடுத்து ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (வ-5,31)

## தொடருந்து...

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி, அறிவியல் நகரில் நடந்த தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று மாலை 6.30 மணியளவில் நடந்துள்ளது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தொடருந்து மோதியே இந்த விபத்து நடந்துள்ளது.

உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில், உயிரிழந்தவரின் உடல் தொடருந்து மூலம் கொண்டு செல்லப்பட்டு கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-6,35)

## அதிகாரப்...

அதிகாரப் பகிர்வுக்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதில் எங்களுக்கு உடன்பாடில்லை"

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

அந்தக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அமைச்சர் மகிந்த சமரசிங்க கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த மதம், கொள்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எந்தவித மாற்றங்களையும் அரசமைப்பில் மேற்கொள்ள ஒருபோதும் நாம் இடமளிக்க போவதில்லை. ஒற்றையாட்சி என்ற பதம் ஒருபோதும் மாறவும் கூடாது. இந்த நாட்டில் 75 வீதம் சிங்கள பௌத்த மக்களே வாழ்கின்றனர். அவர்களைப் பாதுகாக்க பௌத்த கொள்கையை உறுதிப்படுத்த நாம் இந்த நிலைப் பாட்டில் இருப்பதில் தவறில்லை.

வடக்கின் நிலைப்பாடும் வடக்கு முதல்வரின் கருத்துக்களும் மிகவும் பாரதூரமானது. அதிகாரப் பரவலாக்கல் மூலமாக நாட்டில் பிரிவினையை உருவாக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. எல்லை தாண்டிய அதிகார பரவலாக்கல் இறுதியில் நாட்டின் ஐக்கியத்தைப் பாதிக்கும். எவ்வாறு இருப்பினும் புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வே தவிர கூட்டாட்சி அல்ல. அரசமைப்பின் சிங்களப் பதம் என்னவோ அதையே இறுதிவரையில் அனைத்து விடயங்களிலும் கையாளப்படும் -என்றார். (வ-5,31)

## இறுதி...

தெரிவித்தார். புதிய அரசமைப்பு முயற்சியில் அமைக்கப்பட்ட உபகுழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்கியிருந்தார். இந்த நிலையில் வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில் அவரது நிலைப்பாட்டைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கையை மாத்திரம் வைத்துக் கொண்டு பேசக் கூடாது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றினால் 7 உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன. அவற்றின் அறிக்கைகள் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன. அவற்றையும் கவனத்தில் எடுத்தே கருத்துக் கூற வேண்டும். இப்போது வெளிவந்துள்ளது இடைக்கால அறிக்கை. இன்னமும் இறுதி அறிக்கை வரவில்லை. அதில் என்ன வரப்போகின்றது என்றும் எமக்குத் தெரியாது.

இடைக்கால அறிக்கையை நாம் தூக்கி எறிவது எனக்குப் புத்திசாலித்தனமாகத் தெரியவில்லை. நாங்கள் புதிய அரசமைப்பு முயற்சியை குழப்புவதாக இருக்கக் கூடாது. நாங்கள் இதனைக் குழப்பிவிட்டு பன்னாட்டுச் சமூகத்தின் முன்னால் போய் நிற்க முடியாது. பன்னாட்டுச் சமூகம் நீங்கள்தானே இதனைக் குழப்பினீர்கள் நீங்களே உங்கள் பிரச்சினையைப் பாருங்கள் என்று எங்களைக் கைகழுவிவிட்டு விடுவார்கள். இறுதி அறிக்கை வரும் வரையில் நாங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

நாம் இப்போது இடைக்கால அறிக்கையை தூக்கி எறிந்தால் அடுத்தது என்ன செய்யப் போகின்றோம். ஏதாவது திட்டம் வைத்திருக்கின்றோமா ? அப்படியொன்றும் இல்லாமல் இதை தூக்கி எறிந்தால் என்ன பயன் ?

மேலும், இறுதி அறிக்கை தமிழ் மக்களின் அனைத்து வேணவாக்களையும் நிறைவு செய்ததாக வரும் என்று நான் நம்பவில்லை. ஹெல உறுமய, மகிந்த அணி இருவரது பின்னிணைப்பை விட்டால்கூட, அரச தலைவர் மைத்திரியைத் தலைமையாகக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பின்னிணைப்பை பாருங்கள். அவர்கள் பல விடயங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்டிருக்கின்றார்கள்.

இதேவேளை, பின்னிணைப்பு ஒவ்வொரு கட்சியும் கொடுத்திருக்கின்றது. அதில் கையெழுத்திட்டது வழிநடத்தல் குழுவில் உள்ள உறுப்பினர்களே. ஒவ்வொரு கட்சியும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களுக்கு எதிராகவே தமது பின்னிணைப்பை கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை எந்த இணக்கத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது.

புதிய அரசமைப்பு முயற்சி தவறான பாதையில் முன்னகர்ந்தாலும், நாம் சரியான பக்கத்தில் நிற்கவேண்டும். நாம் சரியான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். பன்னாட்டுச் சமூகம் அதனை உணரும்படி நாம் நடக்க வேண்டும்- என்றார். (வ-5)

## வடக்கு...

தியுடன் உள்ளனர்" இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினரும் பிரதி அமைச்சருமான ஹரிஸ் நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கை இணைப்பதற்கு கூட்டமைப்பு திட்டமிட்டு வருகின்றது. இதற்கு நாம் ஆதரவு வழங்க மாட்டோம். தமிழ் மக்களுக்கான 60 ஆண்டுகள் போராட்டத்தில் இருந்து கூட்டமைப்பு தடம்புரண்டு செயற்படுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் செல்வநாயகம், சிவசிதம்பரம் போன்றோர் கிழக்கு மக்களுக்குத் தனித்த பயணத்துக்கு இடமளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர். தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு மாற்றம் கண்டுள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் மக்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ துணைபோக மாட்டார்கள். இணைப்புக்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டமைப்பு பல முறை பேச்சு நடத்தியுள்ளது. கிழக்கு முஸ்லிம்களுக்கு கூட்டமைப்பின் செயற்பாடு அதிருப்தி அளிக்கின்றது. இதன் காரணமாக நாம் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை இழந்து விட்டோம். எமது இளைஞர்கள் விரக்தியுடன் உள்ளனர்.

வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தில் சுதந்திரக் கட்சியினதும் மகிந்த அணியினதும் நிலைப்பாட்டின் மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். எமக்கு நம்பிக்கை ஒளியாகத் தெரிகின்றது. கிழக்கில் மக்களை அணிதிரட்டி போராடி வடக்கு கிழக்கு இணைப்புக்கு இடமளிக்க மாட்டோம். புதிய அரசமைப்பின் இறுதி அறிக்கையில் கல்முனை தனி மாவட்டமாக பிரகடனம் செய்யாவிட்டால் இறுதி அறிக்கைக்கு வாக்களிக்காது. எனது அமைச்சுப் பதவியை துறந்து விடுவேன் -என்றார். (வ-5,31)

## தரம் 5...

கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி வெளியிடப்படவுள்ளன. அதற்கான சகல ஏற்பாடுகளையும் பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்தது.

மேலும் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும் பரீட்சைப் பெறுபேறுகள் தாமதப்படுவதனால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆண்டுதோறும் தீர்மானிக்கப்பட்ட திகதிகளில் பாடசாலை மட்டப் பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுமாறு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பரீட்சைகள் ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

கல்வியமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆண்டு தோறும் குறிப்பிட்ட தினத்தில் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்படுமாயின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களைப் புதிய பாடசாலையில் தரம் ஆறில் ஜனவரி மாதத்திலேயே அனுமதிப்பதற்கு இலகுவாக அமையும். ஜி.சி.ஈ. உயர் தரப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதனால் மாணவர்கள் தமது உயர் கல்வியை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை விரைவாக வெளியிட்டு உயர் தரத்தை ஆரம்பிப்பதற்கும், உயர் தரப் பரீட்சை முடிவுகளை விரைவாக வெளியிட்டு மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் வழிவகை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான உரிய தயார்ப்படுத்தல்களை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை வருடத்தின் மார்ச் மாதம் 28ஆம் திகதியும் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளை டிசெம்பர் மாதம் 27ஆம் திகதியும் வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது. (வ-31)

## பால்...

உணவுப் பொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இது குறித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் நேற்றுக் கூடியது. அதன்போது கட்டாயமாக உணவுப் பொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. முதலில் 3 உணவுப் பொருள்களின் விலையை அதிகரிப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. உணவுப் பொதி, பால் தேனீர் மற்றும் சிற்றுண்டிகளுக்கான ஆகக்குறைந்த விலை தொடர்பில் தீர்மானத்தை எடுத்துள்ளோம். அதனை, நுகர்வோர் அதிகார சபை ஊடாக நடைமுறைப்படுத்தவுள்ளோம் - என்றார். (வ-5)

## திலீபன்...

பிரபாகரன் கையில் சிவப்பு மஞ்சள் கொடியை ஏந்தியவாறு தூக்குக் காவடி எடுத்தார். தூக்குக் காவடியில், தியாக தீபம் திலீபனின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஏ9 நெடுஞ்சாலை ஊடாக செம்மணி வீதி வழியாகப் பயணித்து காவடி நல்லூரை வந்தடைந்தது.

நல்லூர் பின்வீதியில் திலீபனின் தூபியில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்துக்கு தூக்குக் காவடியிலிருந்தவாறு பிரபாகரன் மாலை அணிவித்தார். பின்னர் தூக்குக் காவடியிலிருந்து இறங்கி திலீபனின் படத்துக்கு அஞ்சலி செலுத்தினார்.

தியாக தீபம் திலீபனுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தாயக மண்ணை ஆட்சி செய்த காலத்தில் தூக்குக் காவடி எடுத்து மலர் மாலை அணிவித்த சம்பவம் நடந்துள்ளது. (ற-5,32)

## வித்தியா...

தொடர்பான விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தன.

வழக்குத் தொடுநர் மற்றும் 9 எதிரிகள் தரப்பு தொகுப்புரைகள் கடந்த 13ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் தீர்ப்புக்காக இன்றைய நாளை தீர்ப்பாயம் நிர்ணயித்தது.

முதலாம் எதிரி பூபாலசிங்கம் இந்திரகுமார் மற்றும் 7ஆம் எதிரி பழனி ரூபசிங்கம் குகநாதன் ஆகியோருக்கு எதிராக சாட்சியங்கள் இல்லை என்று வழக்குத் தொடுநர் தரப்புத் தொகுப்புரையில் தெரிவித்தது.

இரண்டாம் எதிரி பூபாலசிங்கம் ஜெயக்குமார், மூன்றாம் எதிரி பூபாலசிங்கம் தவக்குமார், ஐந்தாம் எதிரி தில்லைநாதன் சந்திரகாசன், ஆறாம் எதிரி சிவதேவன் துஷாந்த் ஆகியோருக்கு எதிரான கடத்தல், வன்புணர்வு மற்றும் கொலை ஆகிய குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன என்றும் நிறுத்திட்டமாக வழக்குத் தொடுநர் தரப்பு தீர்ப்பாயத்திடம் எடுத்துரைத்தது.

இந்த வழக்கின் முக்கிய சூத்திரதாரியாக அடையாளப்படுத்தப்பட்ட சுவிஸ்குமார் என்று அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார், அவரது சகோதரர் சசிதரன் மற்றும் ஜெயதரன் கோகிலன் ஆகியோர் மீதான குற்றச் சம்பவத்துக்கு சதித் திட்டம் தீட்டியமை . அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் வழக்குத் தொடுநர் தரப்பு தொகுப்புரையில் சுட்டிக்காட்டப்பட்டது.

வழக்குத தொடுநர் தரப்பு குற்றச்சாட்டுகளையும் சாட்சியங்களையும் அடியோடு நிராகரித்திருந்த எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகள், தர்க்கரீதியான நியாயவாதத்தையே தீர்ப்பாயத்திடம் எடுத்துக் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் சிறப்புத் தீர்ப்பாயத்தின் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் தீர்ப்பும் இன்று அறிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கின் முதன்மை விசாரணைகளை கடந்த ஜூன் 28ஆம் திகதி ஆரம்பித்திருந்த தீர்ப்பாயம் சரியாக 3 மாதங்களில் அதன் தீர்ப்பை இன்று வழங்குகிறது. (வ)

## தியாகி...

தீபம் திலீபனின் நினைவு நாள் நேற்றாகும். தியாக தீபம் திலீபனின் நினைவுநாள் கடைப்பிடிக்கப்படும் 12 நாள்களும் தாயக மண்ணின் மூலை முடுக்கெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் அலங்கரிக்கப்பட்டு, திலீபனின் நினைவு கீதங்களும் இசைக்க விடப்படும். நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள தூபியில் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் நடைபெறும்.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தியாக தீபத்தின் நினைவேந்தல் பொது வெளியில் பேரெழுச்சியுடன் நடைபெற்றிருக்கவில்லை. கடந்த ஆண்டு மட்டும் பொது வெளியில் திலீபனின் நினைவுத் தூபியில் நினைவேந்தல் நடைபெற்றது.

நேற்று நூற்றுக் கணக்கான மக்களின் அணிதிரள்வுடன் பேரெழுச்சியாக உணர்வுமிகுதியுடன் நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது. நல்லூர் முன் வீதியில், தியாக தீபம் தன்னை வருத்தி உணவு ஒறுப்பு நடத்திய இடத்தில் முதலில் அகவணக்கம செலுத்தப்பட்டது. பின்னர் அங்கிருந்து மக்கள் அணி நடையாக, தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி அமைந்திருந்த இடத்தில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் , கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் மக்கள் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தலில் கலந்து கொண்டனர்.

புலம்பெயர் தமிழர்களாலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. (ற-5,8,32,37)

## வீதி விபத்தில்...

இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சி.நரசிங்கம் (வயது -78) என்பவரே உயிரிழந்தார். முதியவர் தனது வீட்டு வாசலில் சைக்கிளுடன் நின்றிருந்தார். ஒஸ்மானியாக் கல்லூரி வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து நிலைகுலைந்து வீதியோரம் நின்ற முச்சக்கர வண்டியுடன் மோதியது. முச்சக்கரவண்டி முதியவரை மோதியதில் முதியவர் மதகுடன் மோதுண்டு கையில் படுகாயமடைந்தார்.

அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சில மணித்தியாலங்களில் அவர் உயிரிழந்தார். பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ4,8, ரி1)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பிலிப்நேரிஸ் - றேஞ்சர்ஸ் இறுதியில் மோதத் தகுதி

யாழ்., செப். 27
சக்திவேலின் கால்பந்தாட்டத் தொடரில் சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.
சக்திவேலின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் செம்பியன்பற்று பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகமும் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழகமும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல்பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி. பெற்றது பிலிப்நேரிஸ்.
தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல் எதுவும் பதிவு செய்யப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது றேஞ்சர்ஸ். (ம-23-108)



# சாகிராவை வீழ்த்தியது சென். பற்றிக்ஸ் அணி

யாழ்ப்பாணம், செப். 27
இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 18 வயதுப் பிரிவினருக்கான முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொழும்பு சாகிராக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் அபிசன் அடித்த பந்தை சாகிராக் கல்லூரி அணி வீரர் தடுக்க முற்பட்டபோது. அது சாகிராவின் பக்கமே கோலாக மாறியது. முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது சென். பற்றிக்ஸ்.
இரண்டாவது பாதியின் 34ஆவது நிமிடத்தில் சாகிராக் கல்லூரியின் கோலைப் பதிவுசெய்தார் மொகமட் றசிட். 43ஆவது நிமிடத்தில் கிறிஸ்தீபன் கோலொன்றைப் பதிவு செய்ய 2:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. (ம-23)

# அண்ணா அணி சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 27
நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. எதுவித கோல்கள் பதிவின்றி முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 15ஆவது நிமிடத்தில் அண்ணா அணியின்முதலாவது கோல் பதிவானது. முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

# விண்மீன், ஐக்கியம் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், செப். 27
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அண்மையில் இடம் பெற்ற ஆட்டங்களில் பலாலி விண்மீன், ஐக்கிய அணிகள் வெற்றிபெற்றன.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பலாலி வீண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:4 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றிபெற்றது விண்மீன்.
தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் யோசப்வாஸ் நகர் தேட்டவெளி ஐக்கிய அணியை எதிர்த்து வடமராட்சி இமையாணன் மத்திய அணி மோதியது. 5:1 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வெற்றிபெற்றது. (ம-23)

## றோயல் அணி முன்னேற்றம்

நட்சத்திர வீரர் எடிசனின் ஹட்ரிக் கோலுடன் மன்னார் விடத்தல்தீவு ஐக்கிய அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது ஊரெழு றோயல் அணி.
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரேழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் விடத்தல்தீவு ஐக்கியம் விளையாட்டுக் கழகமும் மோதியது. 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது றோயல். (ம-108)

# இன்றைய மோதல்கள்

**சரஸ்வதி வி.க. கால்பந்தாட்டம்**
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருக்குமரனின் கால்பந்தாட்டம்**
உரும்பிராய் திருக்குமரன் விளையட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வவு. மாவட்ட கால்பந்தாட்டம்**
வவுனியா மாவட்ட கால்பந்துச் சங்கம் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனிய நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல் ஹிஜிரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதவுள்ளது. (ம-23-108-422)

# றோயல் அணி அரையிறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், செப். 27
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் றோயல் அணியை எதிர்த்து இளவாலைசென்.லூட்ஸ்அணி மோதியது.
ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் றோயலின் கோலைப் பதிவு செய்தார் எடிசன். 9ஆவது நிமிடத்தில் நிதர்சன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது றோயல். ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் லூட்ஸின் சார்பாக ஒரு கோல் பதிவானது. முடிவில் 2:1என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இறுதியில்சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், செப். 27
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
வவுனியா நகரசபை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலாவதாகத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அலன்ராஜ் 96 ஓட்டங் களையும், டார்வின் 76 ஓட்டங்களையும், பிரியலக்சன் 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லிங்கேஸ்வரன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.
301 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி 38.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. 98 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது சென்றலைட்ஸ் அணி. (ம-23)

# தவறு பிடிபடவில்லை என்று சிமித் கவலை




“இந்தியாவுக்கு எதிரான தொடரில், தொடர் தோல்விகளைச் சந்தித்து வருவதற்கான காரணம் எது என்று பிடிபடவில்லை” என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

“ஆட்டத்தில் வெற்றிபெறுவதற்கு உரிய சாத்திக்கூறுகள் தென்பட்ட பிறகும் வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டு விடுகிறோம், இந்தியத் தொடரிலும் இதுவே நடக்கிறது. நாங்கள் தொடர்ந்து இதைப் பற்றி பேசியும் சிந்தித்தும் வருகிறோம், நாங்கள் விரும்பிய முடிவைப் பெற நாங்கள் எந்த இடத்தில் சரியாக விளையாடுகிறோம் எங்கு தவறு செய்கிறோம் என்பது சரியாகப் பிடிபடவில்லை. ஆஷஸ் தொடர் பற்றி இப்போது யோசிக்கவில்லை, அது டெஸ்ட் ஆட்டம், வேறு வடிவம். இந்தியாவில் வெற்றிபெறுவது எப்படி என்றே தற்போது எண்ணுகிறோம்” என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)



ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நாளை நடைபெறவுள்ள ஆட்டத்தில் பார்சிலோனாவும், ஸ்போர்டிங் டி போர்த்துக்கல் அணியும் மோதவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்று கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)



# எதிரணியிடத்தில் கருணையில்லை

## கோக்லி ஆவேசம்

“இந்திய அணியின் வெற்றிகள் தொடரும். கள்த்தில் எதிரணியினருக்கு எவ்விதத்திலும் கருணை காட்டப்படா” என்று இந்திய அணியின் தலைவர் கோக்லி தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ள இந்திய அணி பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தையும் பிடித்துள்ளது. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

‘இந்திய அணியின் வெற்றிப் பயணம் தொடர்ந்துகொண்டே உள்ளது. இந்தப் பயணம் இனியும் அப்படியே தொடரும். இந்திய அணி ஆகச் சிறந்த வீரர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனால்தான் தொடர் வெற்றிகள் சாத்தியமாகின்றன. தொடர் வெற்றிகளால் சலித்துப்போகவில்லை. களத்தில் இந்திய அணி எதிரணயிடத்தில் சிறிதும் கருணை காட்டாது” என கோக்லி மேலும் தெரிவித்தார்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் பெங்களூரில் நாளை நடைபெறவுள்ளது. (ம)

# மே. தீவுகள் பதிலடி கொடுக்குமா?

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெறுமா என்பது தொடர்பில் எதிர்பார்ப்பு உள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த மூன்று ஆட்டங்களில் இரண்டு ஆட்டங்களில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. ஒரு ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இந்த நிலையில் நான்காவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

எஞ்சியுள்ள இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே மேற்கிந்தியத் தீவுகள் அணியால் குறைந்த பட்சம் தொடரை 2:2 என்று சமநிலையில் முடிக்க முடியும். இதனால் இன்று அந்த அணி வெற்றிபெறுமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி வீரர் கெய்லும் தற்போது போர்முக்குத் திரும்பியுள்ளார். இதனால் அவரது தனிநபர் பெறுபேற்றின் மட்டிலும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)




# இலங்கை - பாகிஸ்தான் தொடர் நாளை

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று வகை ஆட்டங்களையும் கொண்ட நீண்ட தொடர் நாளை ஆரம்பமாகிறது.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. அபுதாபியில் நாளைய ஆட்டம் நடைபெறுகிறது. இந்த ஆட்டத்துக்காக இரண்டு அணிகளும் அங்கு கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டன. இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் ஆரம்பமாகிறது. ஐந்து ஆட்டங்களும் முறையே ஒக்ரோபர் 13, ஒக்ரோபர் 16, ஒக்ரோபர் 18, ஒக்ரோபர் 20, ஒக்ரோபர் 23 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன. அதன் பின்னர் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. ஒக்ரோபர் 26, ஒக்ரோபர் 27, ஒக்ரோபர் 29 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. மூன்றாவது ரி-20 ஆட்டம் பாகிஸ்தானில் (லாகூரில்) நடைபெறுகிறது.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த அசம்பாவிதத்துக்குப் பின்னர் எந்த முக்கிய அணியும் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடியது கிடையாது. அனைத்து நாடுகளின் கிரிக்கெட் சபை களும் தத்தமது அணியை பாகிஸ்தானுக்கு அனுப்ப மறுத்துவிட்டன. இடையே சிம்பாப்வே மட்டும் ஒரு தடவை பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. சிம்பாப்வே அவ்வளவு பெரிய அணியல்ல. இதனால் பாகிஸ்தான் - சிம்பாப்வே இடையிலான தொடர் பெரியளவில் எடுபடவில்லை. இதனால் நீண்ட இடைவெளியின் பின்னர் முக்கிய ஆட்டமொன்று (இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ரி-20 ஆட்டம்) பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. (ம)



# தென்னாபிரிக்கா பங்களாதேஷ் தொடர் நாளை

தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. இந்தத் தொடரைத் தொடர்ந்து மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. மூன்று ஆட்டங்களும் முறையே ஒக்ரோபர் 15, ஒக்ரோபர் 18, ஒக்ரோபர் 22 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடரைத் தொடர்ந்து ஒக்ரோபர் 26, ஒக்ரோபர் 29ஆம் திகதிகளில் இரண்டு ரி-20 ஆட்டங்கள் நடைபெறுகின்றன. (ம)

## வீடு காணி விற்பனைக்கு

மூளாய் 786 வழித்தட பிரதான வீதியில் ஐந்து அறைகளுடன் ஏனைய அனைத்து வசதிகளும் கொண்ட 11 பரப்புக் காணியில் அமைந்த வீடு உடனடி விற்பனைக்குண்டு.

தரகரும் விரும்பத்தக்கது

077 032 8694, 077 437 1607,
0041 795714 3890 (Viber)

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 26.09.2017 | 2190 | நீலம் |

துலாம்

வெற்றி இலக்கங்கள் 04 48 59 61

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 328, 228/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 03 28 29 30

2017.09.29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 27
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.09.26

அத கோடிபதி

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,498,885/-

வெற்றி இலக்கங்கள் 52 57 63 75 D

21 40 61 71

Web: www.dlb.lk



ஐரோப்பியக் கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ரியல் மட்ரிட், டொட்மன்ட் அணிகள் மோதவுள்ள நிலையில், மட்ரிட் அணி நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது. கடந்த ஆட்டத்தில் மட்ரிட் தோல்வி அடைந்த தால் இந்த ஆட்டத்தில் அந்த அணி மீது பெரிய அளவில் எதிர்பார்ப்புக் கள் நிலவு கின்றன. (ம)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
### ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் 21.09.2017 திகதி பிரசுரிக்கப்பட்ட ஏல விற்பனை விளம்பரத் துடன் பின்வரும் கால்நடைகளையும் சேர்த்துக்கொள்ளப்படு கின்றது. ஏனைய தகவல்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை.

மாடுகள் :-

| இல. | இனம் | வயது | பால் |
|---|---|---|---|
| 01. | ஜெர்சி கலப்பு | 11 வருடங்கள் | பசு |
| 02. | ஜெர்சி கலப்பு | 10 வருடங்கள் | பசு |
| 03. | ஜெர்சி கலப்பு | 2.5 வருடங்கள் | ஆண் |
| 04. | ஜெர்சி கலப்பு | 2.5 வருடங்கள் | ஆண் |
| 05. | ஜெர்சி கலப்பு | 21 மாதங்கள் | ஆண் |

பதிவாளர்.

FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்

V. ஜெகன் (Trained in France- 2007)

2006 முதல் இன்றுவரை 1305 மாணவர்கள்.

40, பலாலி வீதி, இணுவில். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973

திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Grammar வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## கார் விற்பனைக்கு
hyundai stella 14 -XXXX



hyundai stella 14 -XXXX விற்பனைக்கு உண்டு. புத்தம் புதிதாக இறக்குமதி செய்யப்பட்டது. தனிநபர்களுக்கோ Garage உரிமையாளர்களுக்கோ நல்ல ஓர் வருமானம் தரக் கூடிய முதலீடு.

குறிப்பு: சில திருத்த வேலைகள் தேவைப்படும்.

077 736 0353/ 075 987 9800

## CHEMISTRY - DAY CLASSES

✔ இரசாயனக் கணிப்புக்கள்
✔ ஓட்சியேற்றமும் தாழ்த்தலும்

திங்கள்-வெள்ளி 9.30-11.30am

ஆரம்பம் :- 02.10.2017 திங்கள் 9.30 மணி

DIAS B.Sc (Hons) Spl in Chem

New Science World
Navalar Road - Brown Road Junction,

## அரியதோர் வாய்ப்பு

பிரபல்யமாக இயங்கிவரும் Everest Company யானது தனது புதிய நிறுவனங்களை கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் புதிய கிளை நிறுவனங்களை விஸ்தரிக்கவுள்ளது. 10 ஆம் தரத்திற்கு மேற்பட்ட தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கமுடியும். உங்கள் தகைமைக்கு ஏற்ற வேலைவாய்ப்பு வழங்கப்படும். 15000 - 65000 வரையிலான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு -
077 9858 580, 077 517 9034, 021 722 3317

கோடிபதி ஷனிதா

சீட்டிழுப்பு வாரம்: 194
சீட்டிழுப்பு திகதி: 26.09.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 103,224,880/-

K 28 32 38 73

36 53 59 63

Web: www.dlb.lk

மணப்பெண் தேவை

கௌரவ கிறிஸ்தவ சர்வதேச தரத்தில் மென்பொருள் தயாரிப்பாளரான 38+ மணமகனிற்கு (6-12 வயது ) வித்தியாசத்தில் அழகிய படித்த மணப்பெண் தேவை (மதம்மாறும் இந்துக்களும் ஏற்கப்படுவார்)

View www.seaaav.com/ME/
Call 0772420337

## வேலைவாய்ப்பு

யாழ் மத்தியில் அமைந்துள்ள பிரபல்யமான கொட்டேல் அன்ட் றெஸ்ரோரன்ஸ் இல்
வரவேற்பாளர் - ஆண், பெண்
அறை பராமரிப்பாளர் - ஆண்
உணவு பரிமாறுபவர் - ஆண், பெண் தகமை ஆங்கிலம், சிங்களம் பேச தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. வயது எல்லை 22-30
பிற்பகல் 3.00 - 9.00

தொடர்புகளுக்கு: - 077 886 0996
070 336 0996

சீட்டிழுப்பு வாரம்: 603
சீட்டிழுப்பு திகதி: 26.09.2017

வெற்றி இலக்கங்கள் 12 52 56 60 U

04 19 25 51

ரூ. 11,033,156/-

Web: www.dlb.lk

## அருந்துங்கள் விருந்து
சைவம் - அசைவம்

## அறுசுவை யாழ் உணவு

அருந்தும் வசதி - பார்சல் சேவை - வெளியிட வைபவ சேவை - தங்கும் இட வசதி

புதன், சனி, ஞாயிறு பகலில் மதி மறவாத தன்றிகரற்ற

யாழ் ஒடியல் கூழிற்கு

பிரசித்தி பெற்ற எமது உணவகத்தில்

புதன்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல்

அறுசுவை யாழ் உணவு வகைகள் பரிமாறப்படும்.

சகல வைபவங்களுக்கும் இலவச மண்டப வசதியுடன் ஓடர்கள் செய்து தரப்படும்.

இறால் கணவாய் மரக்கறி சுறா நண்டு நாட்டுக்கோழி சுட்சுட உடன் குழல் புட்டு

மேலும் பல விசேட யாழ் உணவுகள்

விருந்து @ யாழ் பாடி +94759875800, +9421 222 6868

## வேலைவாய்ப்பு Dynamic

எமது நிறுவனத்தில் புதிய கிளைகளுக்கான பதவி தேடல்கள் ஆரம்பமாகிவிட்டன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம்ஆகிய இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கது.

- ☆ O/L,A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்
- ☆ தங்குமிடம், உணவு இலவசம்.
- ☆ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்பு - 077 439 5501, 076 678 1042

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
## Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification : G.C.E.O/L 6 Passes with 5 Credits including Maths.
ஆரம்பம் - 23.09.2017

கணக்காளர் கற்கை நெறிகள்
## Chartered Accounting Courses
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification : G.C.E. A/L 3 Passes
Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.
ஆரம்பம் - 23.09.2017

Students A waiting (A/L) Results Enrich your Proficiency in English
Certificate Course in English
15 Batches have successfully completed the course
Register your names before 07.10.2017

Further Details
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

## கொழும்பில் தங்குமிட வசதிகள்
# COLOMBO HUT
9/3, 16வது ஒழுங்கை, கொழும்பு-03
+94 112 574688, +94 115 055055
+94 756 530348
tysunda@gmail.com

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrance-lk.org

021 222 8093 61.கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.